# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 490 — 1998 செப்டம்பர் — ரூபா 8.00


உள்ளே


- நாடு பூராவும் அவசரகாலச் சட்டம் பொதுமக்களின் ஜனநாயக உரிமைக்கு அடி ......... 2
- குண்டுவெடிப்பைத் தொடர்ந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக அடக்குமுறை 3
- கிளின்டனின் தொலைக்காட்சி பேச்சு வாஷிங்டனின் அரசியல் யுத்தத்தின் உக்கிரத்தை சமிக்கை செய்கிறது .................. 4
- இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் ..... 6-7
- பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும் ............................ 8-9
- கொழும்பு மார்பு நோயாளிகள் சிகிச்சை நிலையத்துக்கு மூடுவிழா? ............................ 14
- உலகப் பொருளாதாரத்தில் மாபெரும் மாற்றம் ............................ 15

**சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலைப் புலிகளின் கைதில் இருந்து விடுதலை செய்யும் அனைத்துலகப் பிரச்சாரம்**

— 10-11 பக்கம்


PERIODICALS DIVISION

# சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலைப் புலிகளின் கைதில் இருந்து விடுதலை செய்ய கொழும்பில் பலம் வாய்ந்த மறியலும் கூட்டமும்

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட தமது மூன்று அங்கத்தவர்களை விடுதலை செய்யும்படி நெருக்கும் விதத்தில் சோசலிச சமத்துவக் கட்சி ஆகஸ்ட் 18ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் எதிரில் பலம் வாய்ந்த ஒரு மறியல் பிரச்சாரத்தையும் அதைத் தொடர்ந்து அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் ஒரு பகிரங்கக் கூட்டத்தையும் நடாத்தியது. இந்த பகிரங்கக் கூட்டமும் மறியலும் சோசலிச சமத்துவக் கட்சியின் பரமு திருஞானசம்பந்தன், காசிநாதன் நகுலேஸ்வரனும் ஜூலை 26ம் திகதியும் இராசேந்திரம் சுதர்சன் ஆகஸ்ட் 2ம் திகதியும் விடுதலைப் புலிகளால் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டதை எதிர்த்து, அவர்களை விடுதலை செய்யுமாறு கோரும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியும் அனைத்துலக ரீதியில் நடாத்திவரும் பிரச்சார இயக்கத்தின் ஒரு பாகமாக அமைந்திருந்தன.

தீவின் பல பாகங்களில் இருந்தும் வருகை தந்திருந்த சோ.ச.க.அங்கத்தவர்களாலும் ஆதரவாளர்களாலும் நடாத்தப்பட்ட இந்த மறியல் பிரச்சாரம் அன்றைய தினம் வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்கள், இளைஞர்கள் உட்பட்ட ஆயிரக்கணக்கான மக்களின் கவனத்தை ஈர்ப்பதாக விளங்கியது. தமிழ், சிங்கள மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும் தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகளை விற்பனை செய்தும் கட்சி உதவி நிதி திரட்டியும் முன்னெடுத்த அரசியல் நடவடிக்கைகளின் மத்தியிலேயே இந்த மறியலும் பகிரங்கக் கூட்டமும் இடம்பெற்றன.

சோசலிச சமத்துவக் கட்சியின் பரமு திருஞானசம்பந்தன், காசிநாதன் நகுலேஸ்வரன், இராசேந்திரம் சுதர்சனை விடுதலைப் புலிகளின் கைதில் இருந்து விடுதலை செய்.!

சோசலிச சமத்துவக் கட்சியின் ஜனநாயக உரிமைகளைக் காப்பாற்று ! இனவாத யுத்தத்தை நிறுத்து ! வடக்கு கிழக்கில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்று! சிங்கள தமிழ் தொழிலாளர்களின் சோசலிச ஐக்கியத்தைக் கட்டியெழுப்பு! முதலான சுலோகங்கள் ஒரு மணித்தியாலத்துக்கும் அதிகமான காலம் அங்கு இடம்பெறற பிரச்சாரத்தில் சிங்களம், தமிழ், ஆங்கிலத்தில் கோஷிக்கப்பட்டன.




கோட்டை புகையிரத நிலையத்தின் முன்னால் இடம்பெற்ற மறியல்

மறியல் போராட்டத்தின் பின்னர் கொழும்பு கோட்டை அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய சோ.ச.க.பொதுச் செயலாளர் விஜே டயஸ் கைது செய்யப்பட்டுள்ள சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலை செய்யும் அனைத்துலக பிரச்சாரத்துக்கு உதவி வழங்குமாறு கூட்டத்துக்கு வருகை தந்திருந்தவர்கள் உட்பட ஜனநாயகத்தை மதிக்கும் சகலரிடமும் வேண்டுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"திருஞானசம்பந்தன், நகுலேஸ்வரன், சுதர்சன் ஆகிய தோழர்கள் இச்சமயத்தில் விடுதலைப் புலிகளின் வேட்டைக்கு உள்ளாகி இருப்பது அவர்கள் அனைத்துலகவாத முன்நோக்குக்காக உறுதியாகப் போராடியதன் காரணத்தினாலாகும். சம்பந்தனும் நகுலேஸ்வரனும் கைது செய்யப்படும் போது ஒட்டிய துண்டுப்பிரசுரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

"முதலாளித்துவ அமைப்பை காக்கும் எந்த ஒரு சமரசவாதியும் நடவடிக்கை குழுக்களுள் ஊடுருவாதிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

"அனைத்துலகவாத முன்நோக்கினால் ஆயுதபாணியாகுவதும் உலகத் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களினதும்

10ம் பக்கம் பார்க்க

## சோ.ச.க.அங்கத்தவர்களை படுகொலை செய்வதாக விடுதலைப் புலிகளின் அறிவித்தல் மிரட்டுகிறது

(உலக சோசலிச வெப் நிலைய ஆசிரியர் குழு 98-08-19)

தீவின் வடபகுதியில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிராந்தியமான கிளிநொச்சியில் அந்த அமைப்பினால் கைது செய்யப்பட்ட இலங்கை சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்கள் மூவரையும் உடனடியாக விடுதலை செய்யும்படி கோருமாறு ஜனநாயக உரிமைகளைக் கௌரவிக்கும் சகலரையும் நா.அ.அ.கு.வும் உலக சோசலிச வெப் நிலையமும் வேண்டுகின்றன.

அவர்கள் கைது செய்யப்பட்டு இன்று ஒரு மாதம் கழிந்து விட்ட போதிலும் திருஞானசம்பந்தன், காசிநாதன் நகுலேஸ்வரன், இராசேந்திரம் சுதர்சன் எங்கே வைக்கப்பட்டுள்ளனர் அல்லது அவர்களின் சுகதுக்கங்கள் எப்படி என்பது பற்றி விடுதலைப் புலிகள் எதையும் தெரிவிக்கவில்லை. சோ.ச.க.அங்கத்தவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எதுவும் இருப்பின் அவை என்ன என்பதைத் தன்னும் விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தவில்லை.

எவ்வாறெனினும் உலக சோசலிச வெப்நிலையம் தமிழ் தேசிய இனத்தவர் மூவரின் உயிர்களை ஆபத்தில் மாட்டுகின்றது என்ற தலைப்பில் இன்டர்நெட் மூலம்

16ம் பக்கம் பார்க்க

**இனவாத யுத்தம் வேண்டாம்!**

**சிங்கள– தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் பாதை
இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

# நாடு பூராவும் அவசரகாலச் சட்டம் பொதுமக்களின் ஜனநாயக உரிமைக்கு அடி

ஆசிரியர்: கே. ரத்னாயக்க
துணை ஆசிரியர்: எஸ். இராசேந்திரன்
பதிப்பாளர்: தீபால் ஜயசேகர
சோசலிச சமத்துவக் கட்சியின்
பொதுச் செயலாளர்: விஜே டயஸ்
அலுவலகம்:
90, 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை
கொழும்பு - 10.
தொலைபேசி: 682220

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகஸ்ட் 4ம் திகதி நள்ளிரவு தொடக்கம் நாடு முழுவதும் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்ததோடு ஆகஸ்ட் 28ம் திகதி ஊவா, சப்பிரகமுவ, மத்தி, வடமத்தி, மேற்கு மாகாணங்களில் நடைபெற இருந்த மாகாணசபைத் தேர்தல்களை ஒத்திப்போடும் சிறப்பு வர்த்தமானி அறிவித்தலையும் விடுத்துள்ளார்.

அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை இராணுவத்தினதும் அதன் பேச்சாளரான அனுருத்த ரத்வத்தவினதும் வேண்டுகோளின் பேரில் எடுத்துள்ளது. இந்த மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தும் பிரச்சினை எழுந்ததுதான் தாமதம் இராணுவத் தளபதிகளின் ஊதுகுழலான பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரால் அனுருத்த ரத்வத்தை யுத்தத்தினால் தேர்தலுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது எனவும் ஆதலால் தேர்தலை ஒத்திப்போட வேண்டும் எனவும் தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தலை ஒத்திப்போட்டதுதான் தாமதம் அதன் நியாயத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்கி அரசாங்கத்தின் சார்பில் அறிக்கை வெளியிட்டுள்ளவரும் இந்த ஜெனரால் ரத்வத்தவே.

"யுத்தம் தீர்க்கமான கட்டத்துக்கு வந்துள்ளது. இப்போது தீர்மானம் செய்வதற்கான காலம் வந்துள்ளது. நாம் யுத்தத்தை ஒத்திப்போடும் தீர்மானத்தை எடுக்கின்றோமா? அல்லது தேர்தலைத் தற்காலிகமாக ஒத்திப்போடப் போகின்றோமா?" என ஜெனரால் ரத்வத்த ஆகஸ்ட் 5ம் திகதி பாராளுமன்றத்தில் பேசுகையில் கேள்வி எழுப்பினார். தேர்தலை ஒத்திப்போடும் அந்தக் "குறுகியகாலம்" என்ன என்பதைப் பற்றி அவர் விளக்குகையில் கூறியதாவது : "தேர்தல் நடாத்துவதை ஒரு மாதத்திற்கு ஒத்திவைக்க அரசாங்கம் இப்போது தீர்மானம் செய்துள்ளது. அந்தக் காலம் முடிவுறும்போது தேர்தலை நடாத்துவதற்கு காலம் வாய்ப்பானதாக இருப்பின் நாம் தேர்தலை நடாத்துவோம். அது வாய்ப்பாக இல்லையால் மேலும் ஒரு குறுகிய காலத்தால் தேர்தலை ஒத்திப்போட நேரிடும்." அரசாங்கத்துக்கும் ஆளும் வர்க்கத்துக்கும் "நிலைமை வாய்ப்பாக இருப்பின்" தேர்தல் நடாத்தப்படும். ."வாய்ப்பு இல்லையேல்" தேர்தல் நடாத்தப்படாது.

பாதுகாப்பு வழங்க முடியாததால் தேர்தலை ஒத்திப்போடுவதாக ஊர்ஜிதம் செய்ய ஜெனரால் ரத்வத்த கூறியது, யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் கிழக்கிலும் 30000 பொலிசார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு தேர்தலுக்கு அவசியமான 30000 பொலிசாரை வழங்க அவர்களை தாம் அப்பிரதேசங்களில் இருந்து விலக்கிக் கொள்ள நேரிடும் . இந்த நொண்டி வாதத்தினை முன்வைத்து தேர்தலை ஒத்திவைக்க முடியும் என இராணுவத் தலைவர்கள் நினைக்கின்றார்கள்.

"பாதுகாப்பு வழங்க முடியாததால்" தேர்தலை ஒத்திப்போடுவதற்கான காரணங்களைத் தேடிய ஜெனரால் ரத்வத்தை யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் கிழக்கிலும் 30000 பொலிசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தேர்தலுக்கு அவசியமான 30000 பொலிசாரை ஈடுபடுத்த வேண்டுமானால் இவர்களை இந்த பிரதேசங்களில் இருந்து நீக்க வேண்டி இருக்கும் எனவும் தெரிவித்தார். இந்த நொண்டிச் சாட்டின் அடிப்படையில் தேர்தலை ஒத்திப்போட வேண்டும் என இராணுவத் தலைவர்கள் முன்வைக்கும் கருத்தைத் தொண்டைக்குழிக்குள் திணிக்க முயற்சிக்கின்றார்கள். அப்படி நீக்கினால் அதனால் யுத்தத்துக்கு ஏற்படும் இழப்புக்களுக்கு தாம் பொறுப்பாளி அல்ல எனவும் ஜெனரால் ரத்வத்த ஆளும் வர்க்கத்தை எச்ச[illegible] ஒரு சமீபத்திய [illegible] பேசியுள்ளார்.

யுத்தம் அரசாங்கத்தினதும் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினதும் யுத்தம். அது எமது யுத்தம் அல்ல. இந்நாட்டு பொதுமக்களின் யுத்தம் அல்ல. அதன் நன்மையை பற்றித் தீர்மானம் செய்பவர்கள் அரசாங்கமும் முதலாளிகளுமே. அந்த நன்மையின் மதிப்பீடுகளின்படி எமது உரிமைகள் பொதுமக்களின் உரிமைகள் தியாகம் செய்யப்படுகின்றது. குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்கம் இராணுவத் தலைவர்களின் சிபார்சுகளின்படி பொதுமக்களின் வாக்களிப்பு உரிமையைப் பறித்துக் கொண்டுள்ளது. யுத்தத்தின் சுமையினாலும் வாழ்க்கை நிலைமைகளை துடைத்துக்கட்டும் அடியினாலும் நசுங்குண்டு போயுள்ள பொதுமக்கள் இந்த அரசாங்கத்தையிட்டு தமது எதிர்ப்பை ஏதோ ஒரு விதத்தில் காட்டினால் அரசாங்கம் நடாத்தும் இனவாத யுத்தத்துக்கும் அத்தோடு நாடு பூராவும் மக்களுக்கு எதிராக இராணுவ அதிகாரத்தை ஸ்தாபிக்கும் வேலைத்திட்டத்துக்கும் ஒரு அடியாகும் என இராணுவத் தலைவர்கள் அஞ்சுவது நியாயமே.

பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு மாகாண சபைத் தேர்தலை ஒத்துவைக்கக் கிடைத்தது ஆண்டவனின் ஒரு ஆசீர்வாதம் ஆகியுள்ளது. நான்கு ஆண்டு ஆட்சியைப் பூர்த்தி செய்து கொண்டுள்ள அரசாங்கம் வடக்கு கிழக்கிலும் தென்மாகாணங்களிலும் பொதுஜன வெறுப்புக்கும் ஆத்திரத்துக்கும் ஆளாகியுள்ளது. அத்தோடு அனைத்துலக மூலதனத்தின் அவசியங்களைநிறைவேற்றி வைக்கும் விதத்தில் நடாத்தும் தாக்குதல்களுக்கு எதிராக பொதுஜனப் போராட்டம் வெடிப்பது மேலும் மேலும் வளர்ச்சி கண்டு வருகின்றது. இராணுவ பொலிஸ் அதிகாரத்தை நாடு பூராவும் விஸ்தரித்து பொதுமக்களை ஒடுக்கித் தள்ளும் அடக்குமுறை ஆட்சியை திணிப்பது பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் ஆளும் வர்க்கத்தினதும் அவசியமாகியுள்ளது. தாம் தேர்தலை ஒத்திப்போடுவது நிலைமை சீர்திருந்தும் வரை எனக் காட்ட அரசாங்கம் முயற்சிக்கின்றது. இனவாத யுத்தம் முடிவடைந்து "நிலைமை சீர்திருந்தும்" நாளை யாராலும் கூறமுடியாது எனவும் அரசாங்கம் யுத்தத்தில் சிக்கிக் கொண்டுள்ளதாகவும் முதலாளித்துவ விமர்சகர்கள் கூறிக் கொண்டுள்ளார்கள். அரசாங்கத்தின் தீர்மானம் காட்டுவது என்ன? தேர்தலை ஒத்திப்போடுவதும் ஜனநாயக உரிமைகளை பறிப்பதும் அவ்வாறே பொதுமக்களின் சகல ஜனநாயக உரிமைகளுக்கும் எதிராக அரசு தலையிடக் கூடிய அவசரகாலச் சட்ட ஆட்சிக்கு மாறுவதேயாகும்.

## 28 வருடகால அவசரகாலச் சட்டம்

கடந்த 28 ஆண்டுகளுள் இடைக்கிடையே நான்கு அல்லது ஐந்து வருடகால இடைவெளியைத் தவிர இலங்கை முதலாளித்துவ அரசாங்கங்கள் ஆட்சியை அவசரகாலச் சட்டத்தின் கீழேயே நடாத்தியுள்ளன. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அவசரகாலச் சட்ட ஆட்சி 26 ஆண்டுகள் நீண்டது எனப் பாராளுமன்ற விவாதத்தில் பேசிய முதலாளித்துவ தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியிருந்தனர். இந்தக் காலத்தினுள் இடைக்கிடையே தேர்தலை ஒத்திப்போட அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தியது மட்டுமன்றி நடாத்திய தேர்தல்களிலும் கூட வாக்குக்களைக் கொள்ளையடிக்க அரசு, குண்டர் பலம் பாவிக்கப்பட்டது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட எம்.பீ.க்கள் நாட்டை ஆட்சி செய்வதாகக் கூறிக் கொண்டாலும் உண்மையில் "முதலாளித்துவ ஜனநாயக ஆட்சி" வெறும் [illegible] சரிந்து போயுள்ளதை [illegible] சட்ட ஆட்சியின் வளர்ச்சி காட்டுகின்றது. நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி முறையினால் ஜனநாயக உரிமைகள் தொடர்ந்தும் துவம்சம் செய்யப்பட்டது. இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் மேலும் மேலும் அதிகாரங்களை போட்டுக் கொண்டு அரசியல் தீர்மானங்களை எடுக்கின்றதும் இராணுவத்தின் சிபார்சுகளுக்கு இடமளிப்பதும் அவசரகாலச் சட்டத்தின் மூலம் அதன் அதிகாரம் பலப்படுத்தப்படுகின்றது. இந்த விதத்தில் இராணுவ சர்வாதிகாரத்துக்கான நிலைமைகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

கடந்த காலத்தில் யூ.என்.பி. அரசாங்கமும் இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கமும் பொதுமக்கள் தமது உரிமைகளை கேட்டபோது யுத்தத்துக்கு செலவிட நேரிட்டுள்ளதால் நாட்டின் பாதுகாப்புக்கு பெருமளவில் நிதி செலவிட நேரிட்டுள்ளதால் சம்பள அதிகரிப்போ அல்லது வேறு உரிமைகளோ வழங்க முடியாது எனக் கூறின். ஒழித்துக்கட்டப்படும் இந்த உரிமைகளைக் காக்க தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் இளைஞர்களும் போராட்டத்தில் இறங்கிய போது அரசாங்கம் அதைப் பயங்கரவாதிகளுக்கு உதவும் நடவடிக்கை எனக் கூறி பாய்ந்து விழுந்தது. இப்போது இனவாத யுத்தத்தைச் சாட்டாகக் கொண்டு பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளைத் துவம்சம் செய்ய அரசாங்கம் முன்வந்துள்ளது.

உண்மையில் பொதுமக்கள் எதிரில் தோன்றியுள்ள பிரச்சினை இதுதான்: எமது ஜனநாயக உரிமைகளையும் வாழ்க்கை உரிமைகளையும் பிடுங்கிக் கொண்டு இடம்பெறும் இந்த யுத்தம் யாரின் யுத்தம்? யாரின் நன்மைக்கு நடாத்தப்படும் யுத்தம்? அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு உள்ளதும் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதும் யாரின் பாதுகாப்புக்காக? யாரின் நன்மைக்காக ?

தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதையிட்டு யூ.என்.பி.தலைவர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கின்றார்கள். அது ஜனநாயக உரிமைகளின் பேரிலான அவர்களின் அக்கறையினால் அல்ல. ஜனநாயக உரிமைகள் பாதிக்கப்படுவதையிட்டு பொதுமக்களிடையே வளர்ச்சி கண்டுள்ள வெறுப்பை தமக்குச் சாதகமாகத் திருப்பிக் கொள்ளச் செய்யும் சிலம்படியாகும்.

## ஜே.வீ.பி. குத்துக்கரணம்

அவ்வாறே 1988 ஜனாதிபதி தேர்தலிலும் 1989 மார்ச் பாராளுமன்றத் தேர்தலிலும் வாக்களிப்பது மரண தண்டனைக்குரிய குற்றம் எனக் கூறி வாக்களித்த நூற்றுக்கணக்கான மக்களை கொன்று தள்ளிய ஜே.வீ.பி.யும் 180 பாகை திரும்பி மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைத்ததையிட்டு பெரும் கோபத்தை வெளிக்காட்டிக் கொண்டுள்ளது. இந்த வலதுசாரி இனவாத முதலாளித்துவ அமைப்பானது யூ.என்.பி.யும் பொதுஜன முன்னணியும் பொதுமக்களின் வெறுப்புக்கு உள்ளாகும் நிலையில் ஜனநாயக வேசம் போட்டுக் கொண்டு மக்களின் கோபத்தை சுரண்டிக் கொள்ள முயற்சிக்கின்றது.

ஜே.வீ.பி.க்கு ஒரு மூடுதிரையை வழங்க முன்வந்துள்ள நவசமசமாஜக் கட்சி ஜே.வீ.பி.யுடனும் இன்னும் பல அமைப்புக்களுடனும் சேர்ந்து தேர்தலை நடாத்தும்படி பிரச்சாரம் செய்வதாகக் கூறியுள்ளது. நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி. விக்கிரமபாகு கருணாரத்ன ஆகஸ்ட் 4ம் திகதி 'சிரச' தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் இந்த அவசரகாலச் சட்டம் வெறுமனே தேர்தலை ஒத்திப்போடும் நோக்கில் செய்யப்ப்டுவதாகக் கூறியுள்ளார். இந்தத் தலையீட்டின் நோக்கம், அரசாங்கம் அவசரகாலச் சட்ட ஆட்சிக்கு பாய்ந்து கொள்ளச் செய்யும் முஸ்தீபுகளை மூடிமறைப்பதாகும்.

19ம் பக்கம் பார்க்க

## அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்

**World Socialist Web Site**
**http://www.wsws.com**

* அமெரிக்கா:
**http://www.socialequality.com**

* அவுஸ்திரேலியா:
**http:www.workersnews.flex.com.au**

* பிரித்தானியா:
**http:/www.socialequality.org.uk**

* கனடா:
**http://www.egalitesociale.com**

* ஜேர்மன்:
**http://gleichheit.de**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அட்டன்*

# குண்டுவெடிப்பைத் தொடர்ந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக அடக்குமுறை

ஆகஸ்ட் 8ம் திகதி பயணிகள் சரக்கு புகைவண்டி அட்டன் புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட்டு கண்டி நோக்கிச் செல்லும்போது பாதையில் புதைக்கப்பட்ட குண்டு வெடித்தது. இதைத் தொடர்ந்து அப்பகுதித் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான பொலிஸ் அடக்குமுறை பெருமளவில் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. இரவு 8.30மணியளவில் வெடித்த இக்குண்டினால் புகையிரதச் சாரதிக்கும் உதவியாளருக்கும் பலத்த காயம் ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

25க்கு மேற்பட்ட தோட்ட இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு "பொலிஸ் விசாரணைக்கு" உட்படுத்தப்பட்டனர். இவர்களில் 19பேர் 17ம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். மூவர் ரூபா.1500பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் மாணவர் இருவர் பன்னிப்பிட்டி மாணவர் சிறையில் இருந்தும் ஏனையவர்கள் கண்டிச் சிறையில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்ற இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் இரவு 11 மணியளவில் மூன்று மைலுக்கு அப்பால் உள்ள ஸ்ரத்டன் தோட்டத்தின் கிழக்கு டிவிசனில் பாய்ந்த பொலிசார் லயன் அறைகளின் கதவுகளை உடைந்து எறிந்து கொண்டு உள்ளே பாய்ந்துள்ளனர். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த தம்மை எழுப்பியதாகவும் நூற்றுக்கு மேற்பட்ட பொலிசார் அங்கு வந்திருந்ததாகவும் தொழிலாளர் தெரிவித்தனர். ரேடியோ, தொலைக்காட்சி பெட்டி காணப்பட்ட லயன்களில் இருந்த இளைஞர்கள் அருகில் இருந்த இந்து கோவிலுக்கு செல்லும்படி கட்டளையிடப்பட்டு, பொலிஸ் ட்ரக் வண்டிகளில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

தொழிலாளர்கள் ஆகஸ்ட் 9 11ம் திகதி வரை வேலைக்கு செல்ல மறுத்து, தமது கணவர்களையும் மக்களையும் விடுதலை செய்யும்படி வேண்டி பொலிஸ் நிலையம் சென்றனர்.

## முழு ஆதரவு

"எந்த ஒரு குற்றமும் செய்யாத அப்பாவி மக்களை கைது செய்தமைக்கு எமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். இவர்களை விடுவிக்க சோசலிச சமத்துவக் கட்சி(சோ.ச.க) எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எமது முழு ஆதரவையும் வழங்குவோம். இதற்கான பிரச்சாரத்திற்காக சோ.ச.க.அமைத்துள்ள நடவடிக்கை குழுவில் நாம் பங்கு கொள்வோம்" என அவர்கள் தொழிலாளர் பாதைக்கு தெரிவித்தனர்.

குண்டுவெடிப்புக்கு பொலிசார் விடுதலைப் புலிகளைக் குற்றம் சாட்டுகின்றனர். எனினும் அனேக தொழிலாளர் அது பொலிசாரை உள்ளடக்கிய வேறு சக்திகளால் செய்யப்பட்டதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கின்றனர். தூரத்தில் இருந்து குண்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தோட்டப்புறத்தில் இந்தக் குண்டு வெடிப்பு முதல்தடவையாக நடந்துள்ளதாகவும் பொலிசார் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுக்கு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொழிலாளர்களின் சந்தேகத்துக்கு நியாயம் இல்லாமல் இல்லை. இரண்டு மாதங்களுக்கு முன்னர் அட்டனுக்கு அருகில் செனன் தோட்டப் பக்டரியில் குண்டு வெடிப்பு இடம்பெற்ற போது பொலிசார் எட்டு இளைஞர்களைக் கைது செய்தனர். அவர்களில் ஒருவரான சுப்பு உதயகுமார் சோ.ச.க.ஆதரவாளர். அவரும் கைது செய்யப்பட்டுள்ள இன்னும் பலரும் 1994ல் பொதுஜன முன்னணி அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு எந்த்விதமான குற்றச்சாட்டும் இல்லாமல் தடுத்துவைக்கப்பட்டு இருந்தவர்கள் என்பதும் சோ.ச.க.நடாத்தில் பலத்த பிரச்சாரத்தின் தாக்கம் காரணமாக விடுதலை செய்யப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த 8 இளைஞர்களையும் விடுதலை செய்ய நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியும் பிரச்சார இயக்கத்தை முன்னெடுத்துள்ள போதிலும் பாதுகாப்பு அமைச்சும் பொலிசாரும் இதையிட்டு மௌனம் சாதிக்கின்றன.

இந்தக் குண்டுவெடிப்புக்கென வந்தவர்கள் சிங்களத்தில் வெகு சரளமாக உரையாடியதாக செனன் தோட்ட பக்டரியில் கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரி கூறியபோதிலும் பின்னர் இத்தகவல் மழுங்கடிக்கப்பட்டது. தமிழ்பேசும் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு இரண்டு மாதங்கள் கழிந்துவிட்டபோதிலும் விசாரணை தொடர்வதாகக் கூறி பயங்கரவாத தடைப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே கடந்த சில மாதங்களாக முதலாளித்துவக் கட்சிகளும் ஜே.வீ.பி.யும் ஆத்திரமூட்டல்களுக்கும் கொலைத் தாக்குதல்களுக்குமாக ஆயுதபாணியிலான குண்டர் குழுக்களை அமைத்துக் கொண்டுள்ளன. இராணுவம், பொலிஸ் படைகளினுள்ளும் இந்தக் கும்பல்கள் இருந்து கொண்டுள்ளதாக கூறப்படுகின்றது. அத்தோடு இது பற்றிய செய்திகள் பல தடவை அம்பலத்துக்கும் வந்துள்ளன. சண்டே டைம்ஸ் பத்திரிகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி எழுதிவரும் இக்பால் அத்தாஸ் என்பவர் விமானபடையிலுள்ள இத்தகைய ஒரு இரகசியக் கும்பலினாலேயே தாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் ஆளும் வர்க்கத்துக்கும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே வளர்ச்சி கண்டுவரும் இந்த வெறுப்பையும் அதிருப்தியையும் அடக்கியொடுக்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய ஒரு நிலைமையின் கீழேயே அரசாங்கம் அண்மையில் மாகாணசபைத் தேர்தலை ஒத்திப்போடும் சாட்டில் அவசரகாலச் சட்டத்தை நாடு பூராவும் அமுலுக்குக் கொணர்ந்தது. தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இனவாத ஆத்திரமூட்டல்களைத் தூண்டிவிடுவதன் மூலம் ஆளும் வர்க்கம் ஆயுதத்தைத் தீட்டி வருகின்றது. விடுதலைப் புலிகள் தோட்டப்புறத்தில் ஊடுருவிக் கொண்டுள்ளனர் என்ற பிரச்சாரத்தின் மூலம் அரசாங்கமும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுக்கு ஊடாக இனவாதிகளும் தொழிற்பட்டு வருகின்றனர். தனியார்மயமாக்கல், வறுமை காரணமாக தோட்டத் தொழிலாளர்கள் என்றும் போராடத் தள்ளப்பட்டுள்ளனர். கடந்த பெப்பிரவரி மாத சம்பளப் போராட்டம் தொழிற்சங்கத் தலைவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டதன் பின்னர் இதை எதிர்த்து இலட்சக் கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் மேலும் இரண்டு நாட்கள் வேலைநிறுத்தத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தனர். இந்நிலைமையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான ஆத்திரமூட்டல் சக்திகள் தொழிற்படும் வாய்ப்பு நிறைய உண்டு.

தெற்கில் ஆளும் வர்க்கத்தின் அவசியங்களுக்கு ஏற்ப ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளை அமுல் செய்வதில் விடுதலைப் புலிகள் பிரசித்தி பெற்றது. பிரிவினைவாதப் பிரச்சாரத்தின் ஒரு அங்கமாக தெற்கில் இனவாதத்தை தூண்டுவதற்காக விடுதலைப் புலிகள் பொதுமக்கள் நடமாடும் பகுதிகளில் தாக்குதல்களை நடாத்தி, நூற்றுக் கணக்கானவர்களை கொலை செய்ததோடு, ஆயிரக் கணக்கானவர்களை காயப்படுத்தியது. இது இடம்பெற்றது ஒரு சில தடவை அல்ல. இன்று இவர்கள் தோட்டப்புறத்திலும் ஊடுருவிக் கொள்ள முயற்சிக்கின்றனர். எனினும் பொதுவாக இனவாத யுத்தத்திற்கு எதிராக உள்ள தோட்டத் தொழிலாளர் விடுதலைப் புலிகளின் அரசியலுக்கு ஆதரவு அளிப்பதில்லை. விடுதலைப் புலிகள் தோட்டப்புறத்தில் நடாத்தும் எந்த ஒரு ஆத்திரமூட்டும் நடவடிக்கையும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக முதலாளித்துவ அரசின் அடக்கு முறையை உக்கிரமாக்க நேரடியாகக் கைகொடுப்பதாக உதவும் ஒன்றாகும்.

கடந்த காலங்களில் அனேக தோட்டப்புற இளைஞர்கள் விடுதலைப் புலிகளாகப் பெயர் சூட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர். இது குறித்து விடுதலைப் புலிகள்ஒரு வார்த்தை தன்னும் கூறியதில்லை. மௌனமாக இருப்பதன் மூலம் அதன் அரசியல் ஆதாயத்தை திரட்டிக்கொள்ள முயற்சிக்கின்றது. அவ்வாறே இந்த ஒடுக்கப்பட்ட இளைஞர்களை விடுதலை செய்வது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எந்தவிதமான அக்கறையும் கிடையாது என்பதை அது காட்டுகின்றது. ஏனெனில் இது வடக்கு கிழக்கு தமிழர் மீது தனது அதிகாரத்தை திணிப்பதன் மூலம் சுரண்டிவாழ எண்ணுகின்றது. அந்தச் சலுகைக்காகப் பேரம் பேசும் ஒரு முதலாளித்துவ அமைப்பாக அது இருந்து கொண்டுள்ளது.

அத்தோடு இந்த இளைஞர்களின் கைது தொடர்பாக தொழிற்சங்கங்கள் மௌனம் சாதிக்கின்றன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் பொதுஜன முன்னணி அரசாங்க அமைச்சருமான எஸ்.தொண்டமான் ஸ்ரத்டன் தோட்ட தொழிலாளர் ஆகஸ்ட் 9ம் திகதியில் இருந்து வேலைக்குச் செல்ல மறுத்ததையிட்டு கருத்துத் தெரிவிக்கையில், தமது சங்கம் எந்த ஒரு வேலைநிறுத்தத்திலும் ஈடுபடவில்லை எனத் தெரிவித்தார். தேசிய தோட்டத் தொழிலாளர் காங்கிரசின் மாவட்டத் தலைவர் எஸ். மாரிமுத்து கைதுசெய்யப்பட்ட போதிலும் சங்கத் தலைவர்கள் இது குறித்து மௌனம் சாதித்து வருகின்றனர்.

கைது செய்யப்பட்டுள்ள தோட்ட இளைஞர்களை விடுதலை செய்யும் பிரச்சாரத்தை முன்னெடுக்க சோ.ச.க.அட்டன் கிளை செயற்பட்டு வருகின்றது.

**ஸ்ரத்டன் தோட்டத்தில் கைது செய்யப்பட்ட 22 இளைஞர்களின் பெயர் விபரம் வருமாறு:**

1.கே.ஜெகநாதன் (35)
2.ஏ.காளிமுத்து(29)
3.ஆர்சந்தானகிருஷ்ணன்(40)
4.எம்.காளிமுத்து(29)
5.கே.கோபாலன்( 36)
6.எஸ்.பிரகாஷ்(15) (ஜோன்பொஸ்கோ மாணவன்.)
7 கே.சக்தி கணபதி( 22)
8.கே.மாயக்கண்ணன்( 20)
9.எம்.முனீஸ்வரன்( 22)
10.ராயு கனகமணி(42)
11.ஆர்.மாரி(26)
12.கே.சண்முகநாதன்(30)
13.பீ.இளங்கோவன்(18)
14.ஏ.ஆண்டி ராஜன்( 30)
15.கே.மகேந்திரன்( 13) (மல்லிகைப்பூ தமிழ் வித்தியாலய மாணவன்)
16.கே.விஜயவரன்
17.ஏ.நிமால் (26)
18.எம்.ஸ்டான்லி(28)
19.எம்.ஜோன்(30)
20.ஏ.லியோ(25)
21.எஸ்.றொபேட்
22.எஸ்.மாரிமுத்து(என்.யூ.டபிள்யூ.மாவட்டத் தலைவர்)

## கைதான சகல இளைஞர்களும் விடுதலை

அட்டனுக்கு அருகில் புகையிரதப் பாதையில் குண்டு வெடித்ததைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட சகல தோட்டப்புறத் தமிழ் இளைஞர்களையும் ஆகஸ்ட் 17ம் திகதி பொலிசார் விடுதலை செய்ய நேரிட்டது. முதலில் கைது செய்யப்பட்ட மூவர் மட்டும் ரூபா.1500 பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இதன் மூலம் இந்தக் கைதுகள் தோட்டத் தொழிலாளர்களை நசுக்கித்தள்ளும் சிங்கள இனவாதப் பிரச்சார இயக்கத்தின் ஒரு பாகம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

புகையிரதப் பாதையில் குண்டு பொருத்திய "பயங்கரவாத சந்தேக நபர்கள் கைது" எனக் கொட்டை எழுத்தில் முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்ட சிங்கள, ஆங்கில முதலாளித்துவப் பத்திரிகைகள் தோட்ட இளைஞர்களை அரசு விடுதலை செய்ய நேரிட்டது பற்றி ஒரு வார்த்தை தன்னும் எழுதவில்லை. ஐலன்ட், திவயின பத்திரிகைகள் இளைஞர்களை விடுதலை செய்யக் கோர வேண்டாம் எனவும் சட்டத்தையும் ஒழுங்கையும் காக்கும் விதத்தில் செயற்படப் பொலிசாருக்கு இடமளிக்கும்படியும் ஆசிரியத் தலையங்கம் கூடத் தீட்டியிருந்தன.

பொலிஸ் வேட்டை பற்றி எமக்கு முதல் கிடைத்த செய்தி இத்துடன் வெளியாகின்றது.

ஆர்




*தொழில் சேவை உரிமைகள் காக்கும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தோட்ட பெண் தொழிலாளர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளின்டனின் தொலைக்காட்சி பேச்சு வாஷிங்டனின் அரசியல் யுத்தத்தின் உக்கிரத்தை சமிக்கை செய்கிறது

ஆகஸ்ட் 17ம் திகதி திங்கள் இரவு தேசிய தொலைக்காட்சியில் உரை நிகழ்த்திய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன், தம்மை ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்க சுதந்திர நீதி விசாரணையாளர் கெனத் ஸ்டாரின் விசாரணையைப் பயன்படுத்த இடம்பெறும் வலதுசாரி பிரச்சாரத்தை எதிர்க்குமாறு தமது முதலாவது அரசியல் வேண்டுகோளில் கேட்டுக் கொண்டார்.

மொனிக்கா லிவின்ஸ்கியுடனான தமது உறவை மறைத்ததை ஒப்புக்கொண்ட அவர் இந்த உறவு ஒரு தனிப்பட்ட பிரச்சினை எனவும் அதைப்பற்றி தமது குடும்பத்துக்கு வெளியில் உள்ளவர்கள் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை எனவும் கூறியதோடு போலா ஜோன்சின் வழக்கு "அரசியல் ரீதியில் தூண்டிவிடப்பட்டது" எனவும் கண்டனம் செய்தார். லிவின்ஸ்கியையோ அல்லது வேறு எவரையுமோ பொய்கூறும்படி அல்லது சாட்சியங்களை ஒழிப்பதற்கு அல்லது "வேறு சட்ட நடவடிக்கைகள்" எடுக்கும்படி தாம் தூண்டவில்லை எனவும் கூறினார்.

ஸ்டாரின் விசாரணை அவசியமற்ற விடயங்களில் கைபோடுவதாக உள்ளது எனக் கண்டனம் செய்த கிளின்டன் அது ஒரு முடிவுக்கு வரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். சுதந்திர நீதிவிசாரணையாளர் ஸ்டாரின் விசாரணை 20 வருட காலம் பழமையான வைட்வோட்டர் தோட்டக்காணிக் கொடுக்கல் வாங்கல்களில் தொடங்கி இப்போது எனது சேவையாளர்கள், நண்பர்கள் ஊடாகச் சென்று பின்னர் எனது சொந்த வாழ்க்கையில் ஊடுருவிக் கொண்டுள்ளது. இப்போது இந்த விசாரணை கூட விசாரணைக்கு உள்ளாகியுள்ளது. இது மிகவும் நீண்டதூரம் சென்றுள்ளது. அவசியமற்ற செலவுகளை ஏற்படுத்தி உள்ளது. தேவைக்கு அதிகமான அப்பாவி மக்களை தாக்கியுள்ளது."

ஜனாதிபதியின் பேச்சு அவர் தனது உபாயத்தை மாற்றிக் கொண்டுள்ளதைத் தெளிவாகக் காட்டுகின்றது. கடந்த ஜனவரியில் இருந்து கிளின்டன் வெள்ளை மாளிகையின் நடவடிக்கைகளில் மோசமான விதத்தில் கைபோடும் நடவடிக்கைகளுக்கு எதிராக சட்டரீதியிலான வாதவிவாதங்களை முன்வைப்பதிலேயே ஈடுபட்டுவந்தார். இந்தச் சட்டரீதியான சூழ்ச்சிகள் பெரிதும் தோல்வி கண்டன. சமஷ்டி நீதியரசர்களும் இறுதியில் அமெரிக்க உயர்நீதிமன்றமும் ஜனாதிபதியின் நெருங்கிய வட்டாரங்களில் உள்ள அனைவரையும் ஸ்டார் குறுக்குவிசாரணை செய்வதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

ஜனாதிபதியின் இந்த வெள்ளை மாளிகை உரை ஸ்டாரினால் கூட்டப்பட்ட கிராண்ட் ஜூரர்களுக்கு வழங்கிய ஒரு நீண்ட சாட்சியைத் தொடர்ந்து இடம்பெற்றது. இதில கிளின்டன் தனிப்பட்ட இரகசியங்களைச் சாட்டாகக் கொண்டு பல கேள்விகளுக்கு பதிலளிக்க அடியோடு மறுத்துவிட்டார். இந்த விசாரணைத் தொடர் அந்தளவுக்கு வாய்ச்சண்டைகள் நிறைந்ததாய் இருந்ததால் ஜனாதிபதி விசாரணையின் மத்தியில் ஒரு மணித்தியாலம் ஓய்வு எடுத்துக் கொண்டார். பின்னர் முதலில் இணக்கம் காணப்பட்டபடி 4 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக குறுக்கு விசாரணையைத் தொடரும் ஸ்டாரின் வேண்டுகோளை அவர் நிராகரித்தார்.

கிளின்டன் தமது தொலைக்காட்சி உரையில் பல விடயங்களைப் பற்றிக் குறிப்பிடவிலலை.ஸ்டார் அரசியல் ரீதியில் தூண்டப்பட்டுள்ளார் என அவர் கூறவில்லை. ஸ்டாரின் விசாரணை, போலா ஜோன்சின் வழக்கு என்ற இரண்டும் வலதுசாரி "கடைகெட்ட வேலை" யின் ஒரு பாகமாக திரையின் பின்னணியில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது எனவும் கிளின்டன் குறிப்பிட்டாரில்லை.

ஆனால் தேசிய தொலைக்காட்சியில் மிகக் குறிகிய காலத்துக்கு ஐந்து நிமிடங்கள் மட்டும் இடம்பெற்ற இந்த உரை கூட வெகுஜனத் தொடர்புச் சாதன



மொனிக்கா லிவின்ஸ்கி



பில் கிளின்டன்

வித்துவான்களையும் காங்கிரஸ் தலைவர்களையும் வலிப்புக்குள்ளாக்கியது. அமெரிக்க செனட் சபை நீதிவிசாரணை கமிட்டியின் தலைவர் ஒரின் ஹட்ச் கிளின்டன் ஜோன்சின் வழக்கையும் ஸ்டாரின் விசாரணையையும் விமர்சனம் செய்வதைக் கண்டனம் செய்தார். "அவர் செய்யக் கூடியதாக இருந்த கடைகெட்ட வேலை அதுதான்" என ஒரின் ஹட்ச் கண்டித்தார்.

சுதந்திர நீதிவிசாரணையாளர்களினால் திரட்டப்பட்ட எந்த ஒரு அரசியல் குற்றச்சாட்டு அறிக்கை பற்றியும் முதலில் கருத்து தெரிவிக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்ளும் மக்கள் பிரதிநிதிகள் சபையின் நீதிக் கமிட்டியின் குடியரசுக் கட்சிக்காரர்கள் ஜனாதிபதியின் பேச்சின் பின்னர் கிளின்டனைத் தாக்குவதற்கு அணிதிரண்டனர். அவர்கள் ஸ்டாரின் விசாரணை தொடர வேண்டும் என வலியுறுத்தினர். இக்கமிட்டியில் உள்ள குடியரசுக் கட்சிக்காரரான வில்லியம் மக்கலம் போலா ஜோன்ஸ் வழக்கில் சத்தியப்பிரமாணம் செய்து வழங்கிய சாட்சியில் கிளின்டன் லிவின்ஸ்கியுடனான தமது உறவு பற்றி பொய் சொல்லியிருந்தால் அவர் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்றார்.

வெகுஜனத் தொடர்புச் சாதன விமர்சகர்கள் தொலைக்காட்சி, பத்திரிகை இரண்டிலும் கிளின்டனின் தொலைக்காட்சி உரையின் தொனியை கூட்டாக எதிர்த்தனர். கிளின்டன் கிராண்ட் ஜூரர்களுக்கு முன்நிலையில சாட்சியமளிக்க நேரிட்டமை ஒரு விநோதமான காட்சியாக விளங்கியது. நாள் பூராவும் வெள்ளை மாளிகையைச் சுற்றி பத்திரிகை வெகுஜனத் தொடர்புச் சாதனக்காரர்கள் வெறிபிடித்து அலைந்து கொண்டிருந்தனர்.

கிளின்டன் தொடர்பாக வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் காட்டிக்கொண்ட குரோதம் ஆளும் வட்டாரங்களில் இருந்துவரும் பெரும் பதட்டநிலையைக் காட்டிக் கொண்டது. நெருக்கடியை வாஷிங்டன் அதிகார வட்டாரங்களின் குறுகிய எல்லைப் பரப்புக்குள் இருந்து ஒரு பரந்த பார்வையாளர்களுக்கு எடுத்துச் செல்வது உத்தியோகபூர்வமான அரசியலில் இருந்து பெரிதும் அப்புறப்படுத்தப்பட்டு இருந்தது.

## அரசியல் விவகாரங்கள்

இந்த நிகழ்ச்சி நிரல் என்ன? வெகுஜனத் தொடர்புசி சாதனக்காரர்கள் காட்டிக் கொள்வதற்கு முரண்பட்ட முறையில வாஷிங்டனில் இடம்பெறும் மோதுதல் பாலுறவு, பொய்கள் அல்லது நீதியை மீறுவது பற்றிய ஒரு பிரச்சினை அல்ல.இது ஒரு அரசியல் போராட்டம். இதில் பில் கிளின்டனின் வலதுசாரி எதிரிகள் இரண்டு ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை தூக்கிவீசும் சதிகார, ஆத்திரமூட்டல் விதிமுறைகளைக் கையாள்கின்றார்கள்.

அமெரிக்காவில் அரசியல் போராட்டங்கள் அடிக்கடி கடைகெட்ட வடிவத்தை எடுப்பதுண்டு. இது அதற்கு மிகவும் கடைகெட்ட ஒரு உதாரணமாகும். உத்தியோகபூர்வமான அரசியல் கலந்துரையாடல்களில் எந்த ஒரு சமூக, வர்க்கப் பிரச்சினையையும் எழுப்புவது தடைசெய்யப்பட்டுள்ளது. கிளின்டன் வலதுசாரி எதிரிகளின் நிகழ்ச்சி நிரல் சமூகக் காப்புறுதியை தனியார் மயமாக்குவதையும் சமூக நலன்புரி அரசின் மிச்சசொச்சங்களை துடைத்துக் கட்டுவதையும் , ஏற்கனவே அரைவாசி அமுல் செய்யப்பட்டுள்ள செல்வந்தர்கள் மீதான சகல வரிவிதிப்புக்களை ஒழிப்பதையும் வர்த்தகர்கள் பற்றிய சகல அரசாங்க சட்டங்களுக்கும் முடிவு கட்டுவதையும் இராணுவத்தை விஸ்தரிப்பதையும் மிகவும் உக்கிரமான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது.

கிளின்டனின் விதிமுறையானது ஜனாதிபதி ஆட்சிக் காலம் பூராவும் வலதுசாரி எதிரிகளின் திட்டங்களுக்கு இடமளிப்பதாகவே இருந்து வந்துள்ளது. வலதுசாரிகளின் விருப்பு வெறுப்புக்களுக்கு இணங்கத் திட்டங்களை வரைவதாகவே இருந்துவந்தது. அந்த விதத்திலேயே கிளின்டன் சமூக நலன்புரிச் செலவுகளையும் மற்றும் சமூகத் திட்டங்களையும் ஒழித்துக் கட்டுவதில் குடியரசுக் கட்சியின் காங்கிரஸ்காரர்களுடன் சேர்ந்து செயற்பட்டார்.

ஸ்டாரின் விசாரணைக்கும் ஜோன்சின் வழக்குக்கும் இடையேயான கூட்டு அம்பலமாக்குவதுபோல் சுதந்திர நீதி விசாரணை சம்பந்தப்பட்ட பிரச்சினையிலும் கூட கிளின்டன் அதன் அடிப்படை நியாயாதிக்கத்தை சவால் செய்ய முன்வரவில்லை. இந்த அசாதாரணமான இளகிய போக்கு வலதுசாரி எதிரிகளை கிளின்டனின் அரசியல் அழிவுக்கு முன்னொரு போதும் இல்லாத நச்சுத்தனமான முயற்சிகளில் ஈடுபட மட்டுமே தூண்டியது.

கிளின்டனின் அரசியல் எதிரிகள் கோழைத்தனமானதும் ஜனநாயக விரோதமானதும் அரசியலமைப்புக்கு எதிரானதுமான பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளனர்.அவர்கள் அமெரிக்க அரசியல் அமைப்பில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். பாலுறவு ஊழல்கள் என்ற உருவில் அரசாங்கத்தின் மூன்று கிளைகளுக்குமுரிய சமநிலை அதிகாரம் பெருமளவு திருத்தப்பட்டுள்ளதோடு ஜனாதிபதியின் அதிகாரம் கணிசமான அளவு அரிக்கப்பட்டுள்ளது.

றீகனால் ஆரம்பிக்கப்பட்டு புஷ். கிளின்டனின் கீழ் தொடரப்பட்ட முன்னைய சமூகத் சீர்திருத்தங்கள் மீதான தாக்குதல்கள் இப்போது பண்பு ரீதியான முறையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவச் சந்தையின் இயக்கத்துக்கு தடையாக உள்ள தகர்ப்பதையும் அதேபோலவே இலக்காக உள்ளது. நிறைவேற்று அதிகாரக் கிளையியின் அதிகாரத்தை ஒரு வழக்காற்றுச் சடங்கு மட்டத்துக்கு தரம் இறக்குவது இதன் திட்டம். உள்நாட்டுக் கொள்கையை பொறுத்த மட்டில் தன்னும் இது இடம்பெறும். அத்தோடு சமஷ்டி அரசாங்கத்தின் தொழிற்பாட்டை ஒரு பொலிஸ் இராணுவ தொழிற்பாடுகளுடன் வரையறுப்பதாகவும் இருக்கும்.

தொழிலாளர் வர்க்கத்தைப் பொறுத்தமட்டில் ஒரு "பலவீனமான" ஜனாதிபதிக்கு எதிராக ஒரு "பலமான" ஜனாதிபதியை காப்பது என்ற பிரச்சினைக்கே இடம் கிடையாது. அமெரிக்க ஜனாதிபதி பதவி என்பது முதலாளித்துவ ஆட்சியின் ஒரு நிறுவனமாகும்.இது எப்போதும். வர்த்தக நிறுவனங்களின் அதிகாரங்களைக் காக்கவும் தொழிலாளர் வர்க்கத்தைச் சுரண்டவும் தொழிற்பட்டுவரும். முழு முதலாளித்துவ அமைப்புக்கும் எதிரான அரசியல் போராட்டத்தின் மூலமே தொழிலாளர் வர்க்கத்தின் அடிப்படை ஜனநாயக உரிமைகளும் சமூக நலன்களும் பாதுகாக்கப்படும். ஒரு புதிய நிசமான ஜனநாயக ரீதியானதும் சமூக சமத்துவத்தைக் கொண்டதுமான அரசியல், பொருளாதார ஒழுங்குமுறையை சிருஷ்டிப்பதன் மூலம் இது உச்சக் கட்டத்தை அடையும்.

## கெட்ட விளைவுகள்

ஜனாதிபதி மீது வலதுசாரிச் சக்திகள் தாக்குதலை நடாத்திக் கொண்டிருக்கும் வரையும். உழைக்கும் மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு, அன்னியமாக்கப்பட்டு வெறும் பார்வையர்ளர்களாக இருந்து கொண்டிருக்கும் வரை இதன் விளைவுகள் மிகவும் படுபிற்போக்கானதாகவும் ஜனநாயக எதிர்ப்பு பண்பு கொண்டதாகவும் விளங்கும். ஒரு அரை சட்டரீதியான சதியின் மூலம் கிளின்டன் பதவியில் இருந்து அகற்றப்படுவதானது மிகவும் கெட்ட விளைவுகளை உருவாக்கும்.

இந்த நெருக்கடியின் உக்கிரமானது அமெரிக்க சமுதாயம் ஒரு சுபீட்சத்தினதும் அபரிமித வளர்ச்சியினதும் புதிய உச்சக் கட்டத்தை எட்டிவிட்டது என்ற உத்தியோகபூர்வமான கோரிக்கைகளை பிரச்சினைக்கு உள்ளாக்கியுள்ளது. அமெரிக்காவில் விடயங்கள் சுமூகமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கமாயின் ஆளும் வர்க்கம் ஏன் நச்சுத்தனமான இரத்தக் களரியில் இறங்க ஆயத்தமாக வேண்டும்?

கிளின்டனுக்கு பொதுஜன அனுதாபம் இருந்து வருகின்றது என்ற கூற்றை பங்குமுதல் சந்தையின் வீழ்ச்சியினாலும் உத்தியோகபூர்வமான வேலையின்மை வீதத்தின் அதிகரிப்பினாலும் எப்படி விளக்க முடியும்?

ஸ்டாரின் விசாரணை மீது கிளின்டன் ஆத்திரத்தைக் கொட்டிக் கொண்டுள்ளமை பொதுஜன அபிப்பராயத்தின் நரம்புகளைத் தாக்கியுள்ளது. தனிப்பட்ட வாழ்க்கை ஒரு அடிப்படை ஜனநாயக உரிமை என்ற வகையில் அதைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் கிளின்டன் எதிர்ப்பு பிரச்சார இயக்கத்தின் பிரகடனம் செய்யப்படாத அரசியல் நிகழ்ச்சி நிரல் பற்றி வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் சந்தேகம் வளர்ச்சி கண்டு வருகின்றது. இது மனத்திருப்தியைக் காட்டுவதாக இல்லை. நம்பிக்கையீனத்தையும் வெறுப்பையும் காட்டிக் கொண்டுள்ளது.


அமெரிக்க அரசியல் முறையானது பெரும் வர்த்தகர்களால் கட்டுப்படுத்தப்படும் இருபெரும் பேராதிக்கம் கொண்ட கட்சிகளுக்கு கட்டுப்பட்டு இருக்கும்வரையும் தொழிலாளர் வர்க்கத்தை நிஜமாகப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு அரசியல் கட்சி இல்லாத வரையும் இந்த உணர்வுகள் ஒரு சுதந்திரமானதும் அமைப்பு ரீதியிலானதுமான ஒரு அரசியல் வெளிப்பாட்டைப் பெற்றுவிடாது. ஆனால் அதை அடைய இடமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ஸ்டாலினிஸ்டுகள் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு முண்டு கொடுக்க தயார்

பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான கூட்டரசாங்கம் அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி வீழ்ச்சி காணும் அறிகுறிகள் ஏற்பட்டுள்ள ஒரு நிலையில் காங்கிரஸ் கட்சி முதலாளிகளின் அரசாங்கத்துக்கு முண்டுகொடுக்க இந்திய ஸ்டாலினிஸ்டுகள் முன்வந்துள்ளனர்.

இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)யின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் மேற்கு வங்காள முதலமைச்சருமான ஜோதி பாசு முன்னணியில் நின்று கொண்டுள்ளார். இவர் ஜூன் 28ம் திகதி ஹிந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பாரதீய ஜனதா கட்சி கூட்டரசாங்கம் வீழ்ச்சி காணும் நிலையில் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு முண்டு கொடுக்கும் தயார் நிலையை பின்வருமாறு வெளிப்படுத்தினார்: சீ.பீ.ஐ.(எம்) பா.ஜ.க.அரசாங்கம் வீழ்ச்சி கண்டதன் பின்னர் பாராளுமன்றத்தில் காங்கிரசுக்கு (இ) எதிராக வாக்களிக்கப் போவதில்லை என்பதை நாம் ஜனாதிபதிக்கு அறிவிப்போம்." என்றுள்ளார்.



ஜோதி பாசு

இந்தப் பேட்டிக்கு சில தினங்களுக்கு முன்னர் தாம் புதுடில்லி சென்றதாகவும் பாராளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சி அங்கத்தவர் குழுவின் தலைவரான மாஜி.நிதி அமைச்சர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து இது பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும் கூறிய ஜோதிபாசு, அப்பேட்டியில் மேலும் கூறியதாவது: "பா.ஜ.க.க்கு பதிலீடாக தோன்றக்கூடிய ஒரே கட்சி காங்கிரஸ்(இ) கட்சி மட்டுமே என நான் திரு.மன்மோகன் சிங்கிடம் கூறினேன். அதனுள் சில இனவாதக் குழுக்கள் இருந்த போதிலும் காங்கிரசுக்கு மதச்சார்பற்ற தன்மை உள்ளது " என்றுள்ளார். காங்கிரஸ் கட்சியை இந்து சோவினிச பா.ஜ.க.வுக்கு எதிராக இருந்து கொண்டுள்ள ஒரே பதிலீடாகவும் மதச்சார்பற்ற சக்தியாகவும் தூக்கிப் பிடிக்கும் ஜோதிபாசு , பா.ஜ.க. அரசாங்கம் வீழ்ச்சியடையும் நிலையில் முதலாளி வர்க்க ஆட்சியைக் கட்டிக் காப்பதில் தோள் கொடுக்கும் பொறுப்பு பற்றி காங்கிரஸ் முதலாளிகளுக்கு புரிய வைக்கும் கைங்கரியத்திலும் ஈடுபட்டுள்ளார்.

இந்திய முதலாளித்துவப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியுடன் நின்றுவிடாத ஜோதிபாசு அதே நாளில் இந்தியத் தொலைக்காட்சியான தூரதர்ஷனுக்கும் பேட்டி அளித்துள்ளார். மேற்கு வங்காளம் திரும்பியதும் அவர் மாநில சபையைக் கூட்டி நிகழ்த்திய உரையில் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு முண்டு கொடுக்கும் பணி பற்றி கட்சியின் ஏனைய தலைவர்களுக்கு பின்வருமாறு கூறினார்: "பா.ஜ.க.வளர்ச்சியால் தோன்றியுள்ள புதிய நிலைமையினுள் காங்கிரஸ் கட்சியுடன் ஐம்பது ஆண்டுகளாக இருந்துவந்த கோட்பாட்டு எதிர்ப்பை கைவிட எமக்கு நேரிடும்." என்றுள்ளார்.

பா.ஜ.க..அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு முன்கூட்டியே காங்கிரஸ் அரசாங்கத்துக்கு தோள்கொடுக்கும் தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ள ஜோதிபாசு , அதை வெளிவெளியாகக் கூறும பிரச்சார இயக்கத்தையும் மாநிலத்தில் முன்னெடுத்துள்ளார். இந்த நடவடிக்கை ஏதோ ஒரு வகையில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடையே தாம் மேலும் அன்னியப்படுவதற்கான ஒரு காரணமாகிவிடுமோ என சீ.பீ.ஐ.(எம்) சீ.பீ.ஐ.கட்சிகளின் சில தலைவர்களும் இவர்களுடன் இடதுசாரி முன்னணி என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கிக் கொண்டுள்ள போர்வாட் புளொக் போன்ற மாஜி.குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளும் கவலை தெரிவித்துள்ளனர். ஆனால் இவர்களில் ஒருவர் தன்னும் காங்கிரசுக்கு முண்டு கொடுக்கும் தீர்மானத்துக்கு எதிராக கருத்துத் தெரிவிக்காததோடு அத்தகைய ஒரு முடிவு தமது கட்சிகளின் மத்திய குழுக்களையும் இடதுசாரி முன்னணியையும் கூட்டி நடாத்தும் கலந்துரையாடலின் மூலம் எடுககப்பட வேண்டும் எனக் கூறிக் கொண்டுள்ளனர்.

ஜூலை 7ம் திகதி மேற்கு வங்காளத்தின் தலைநகரான கல்கத்தாவில் சீ.பீ.ஐ.(எம்) தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய அதன் ஒரு தலைவரான விமன் பாசு கீழ்க்கண்டவாறு கூறியதாக முதலாளித்துவப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன:

"காங்கிரஸ் கட்சி(இ) அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் எந்த ஒரு தீர்மானத்தையும் எமது கட்சி இதுவரை எடுக்கவில்லை. மத்திய குழு உறுப்பினர்கள் இம்மாதம் கூடி அது பற்றி முடிவு எடுப்பர் "என்றுள்ளார்.

'கடும் போக்காளர்' என முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களால் தூக்கிப் பிடிக்கப்படும் சீ.பீ.ஐ.(எம்) தலைவரான சீதாராம் யெவுரி ஜூன் 29ம் திகதி பத்திரிகையாளர்களுக்கு வெளியிட்ட ஒரு அறிக்கையில் வார்த்தைகளைக் கவனமாகக் கையாண்டதன் மூலம் ஜோதி பாசுவின் அறிக்கைக்கு ஆதரவு வழங்கினார். 'பா.ஜ.க.அரசாங்கம் வீழ்ச்சி காணும் வரை பொறுத்திருந்து நிலைமை அபிவிருத்தி காணும் தன்மைக்கு ஏற்ப அதற்கு பதிலளிப்பது தமது கட்சியின் நிலைப்பாடு' என அவர் கூறியுள்ளார். பா.ஜ.க. அரசாங்கம் வீழ்ச்சி காணும் நிலையில் காங்கிரசுக்கு அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கப் போவதில்லை என்று மட்டுமே ஜோதிபாசு கூறியதாகவும் அந்த விதத்தில் எதிராக வாக்களிக்காது இருப்பதற்கும் காங்கிரசுக்கு ஆதரவு வழங்குவதற்கும் இடையே வேறுபாடு இருப்பதாகவும் இவர் கூறினார். இதன் மூலம் காங்கிரசுக்கு முண்டு கொடுக்கும் தமது கடைகெட்ட கொள்கையை பூசிமறைக்க இவர் முயன்றுள்ளார்.

இதன் மூலம் இந்திய ஸ்டாலினிஸ்டுகள் காங்கிரஸ் கட்சி உட்பட்ட முதலாளித்துவ கட்சிகளுடன் கூட்டாக பொருளாதார நிகழ்ச்சிநிரலை நடைமுறைக்கிடுவதே திட்டம். காங்கிரஸ் பொருளாதாரக் கொள்கையை எதிர்ப்பதாகவும் தமது ஆதரவைப் பெறவேண்டுமானால் அந்தக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும் எனவும் இந்தியன் ஸ்டாலினிஸ்டுகள் கூறிக் கொள்வது அவர்களின் அரசியல் மோசடியின் ஒரு பாகமாகும்.

## சென்னை

# பொலிசாரும் தொழிற்சங்கத் தலைவர்களும் தொழிலாளர்களுக்கு எதிராக பொய்க் குற்றச்சாட்டு

தொழிற்சங்க அதிகாரிகளுடன் ஏற்பட்ட மோதலின் பின்னர் பொய்க்குற்றச் சாட்டுக்களுக்கு முகம் கொடுத்துள்ள ஐந்து ஆடைக் கைத்தொழிலாளர்களைப் பாதுகாக்க இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகம் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது. சோசலிசத் தொழிலாளர் கழகம், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் அரசியல் ஐக்கியத்துடன் செயற்படும் ஒரு அமைப்பாகும்.

இந்தச் சம்பவத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் கைத்தொழில் தொழிலாளர் சங்க சம்மேளனத்தின் மாவட்டத் தலைவர்கள் தமக்கு எதிரான சங்க அங்கத்தவர்களைத் தாக்கப் போவதாகப் பயமுறுத்தியதோடு சோ.தொ.க. ஆதரவாளராகப் பெயர்பெற்ற ஒரு தொழிலாளியையும் தாக்கினர்.

ஈ.ராமதாஸ், எச்.ஆனந்தன், ஜே.சிறீனிவாசன், ஏ.லீலா நந்தபூசணம் ஆகியோரே இந்தக் குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ளனர். இந்த நால்வரும் கடந்த ஆண்டு சென்னை 'வெல் நிட்' ஆடைத் தொழிற்சாலையில் இடம்பெற்ற வேலைநிறுத்தத்தில் வேட்டைக்கு உள்ளான 14 தொழிலாளர்களுள் அடங்குவர். இந்தப் 14 தொழிலாளர்களையும் வேலையில் இருந்து இடைநிறுத்தம் செய்ததன் பின்னர் அவர்களை சேவையில் இருந்து அப்புறப்படுத்தவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மார்க்சிஸ்ட்)யுடன் இணைந்த சீ.பீ.ரீ.யூ. தொழிற்சங்கவாதிகள் ஆலை நிர்வாகத்துக்கு ஆதரவு வழங்கினர்.

கடந்த ஆண்டு வேலைநிறுத்தம் 60 தொழிலாளர்கள் பக்டரியில் இருந்து வெளியேறி. துண்டு வேலை முறைக்கான சம்பளத்தைக் கூட்டும்படி கோரி ஆரம்பமாகியது. அது இரண்டு கிழமைகளின் பின்னர் 2000 தொழிலாளர்கள் பங்கு கொண்ட வேலைநிறுத்தமாக வளர்ச்சி கண்டது. ஹொங்கொங்கை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இந்தக் கம்பனி 23 தொழிலாளர்களை வேலை இடைநிறுத்தம் செய்தது. இதில் நால்வர் வேலைநிறுத்தத்தில் தாம் எந்தவிதமான பாத்திரத்தையும் வகிக்கவில்லை எனக் கூறி மீண்டும் வேலையில் சேர்ந்து கொண்டனர்.

1997 ஜூலை தொடக்கம் இந்த ஆண்டு மே மாதம் வரை 14 தொழிலாளர்கள் தொடர்ந்து இடைநிறுத்தத்துக்கு உள்ளாகி இருந்தனர். 'வெல் நிட்' கம்பனியும் சீ.ஐ.ரீ.யு.வும் புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் பின்னர் வேலைநிறுத்தத்துக்கு தலைமை தாங்கிய 14 தொழிலாளர்களையும் வேலைநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆடைத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை மிகவும் அற்பமான ரூபா.125ல் அதிகரிக்கும் இந்த உடன்படிக்கை ஒரு காட்டிக் கொடுப்பாகும் என வெல்நிட் தொழிலாளர்கள் கண்டனம் செய்தனர்.

ஆகஸ்ட் 1ம் திகதி 40 தொழிலாளர்கள் தொழிற்சங்கத் தேர்தல் நடைபெறும் தினத்தை அறியும் பொருட்டு சீ.ஐ.ரீ.யூ.அலுவலகத்துக்கு சென்றனர். சங்க அமைப்பு விதிகளின்படி தேர்தல் [illegible] மே மாதத்தில் நடைபெற்று [illegible] வேண்டும்.தொழிற்சங்க மகாநாட்டை நடாத்துவதாக இருந்தால் சகல தொழிலாளர்களும் ரூபா.125 வீதம் செலுத்த வேண்டும் என்பது தொழிற்சங்க அதிகாரிகளின் பதிலாக விளங்கியது. சீ.ஐ.ரீ.யு.வின் இணைச் செயலாளர் சிவகுமார் பின்வருமாறு கூறினார்: "ரூபா.125 செலுத்தாமல் எவரும் வாய் திறந்தால் உங்கள் சகலரையும் உதைத்து விரட்டுவோம். சங்கத் தேர்தல் கிடையாது." சீ.பீ.ஐ.(எம்) கட்சியின் தலைவர்களில் ஒருவரான இந்தச் சிவகுமார் அடுத்து சோ.ச.க.ஆதரவாளர் பக்கம் திரும்பி "இந்தக் கரைச்சல்களுக்கு நீதான் காரணம் " எனக் கூறி முகத்தில் அறைந்ததோடு "இவனை ஓட்டோவில் போட்டு எமது மாவட்டத்துக்கு கொண்டு போ" என சங்க அதிகாரிகளுக்கு வெறிபிடித்த தொனியில் கட்டளையிட்டான்.ஆனால் தொழிலாளர்கள் இதனால் ஈடாட்டம் கண்டுவிடவில்லை. அவர்கள் சோ.தொ.க.ஆதரவாளருடன் வெளியேறினர்.

இரண்டு நாட்களுக்கு பின்னர் எதிரணி தொழிலாளர்களுக்கும் சிவகுமாருக்கும் இடையே மற்றொரு கலகம் ஏற்பட்டது. சீ.ஐ.ரீ.யூ.அதிகாரிகள் இப்போது தொழிலாளர்களுக்கு எதிராக கொலை முயற்சி, கொள்ளை குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளனர். ஐந்தாவது எதிரி கே.பக்ராஜ் என்ற தொழிலாளியாவார்.

பொலிசார் இந்தச் சம்பவத்தை பாவித்து வெல்நிட் தொழிலாளர்களுக்கு எதிரான பொய்ப்பிரச்சார இயக்கத்தை நடாத்த முயன்று வருகின்றனர். ஆகஸ்ட் 9ம் திகதி தாம்பரத்தில் கைது செய்யப்பட்ட சிறீனிவாசன் என்ற தொழிலாளி தாம்பரம் பொலிஸ் நிலையத்தில் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார். பின்னர் இந்தப் பொலிஸ் நிலையத்தில் ஒரு பொலிஸ் கோர்ஷ்டி வெல்நிட் கம்பனி தொழிலாளர்களைத் தாக்கியுள்ளது. அவர்கள் அந்தப் பக்டரியில் வேலை செய்பவர்கள் அல்ல என்பதை பொலிசார் தாக்குதலின் பின்னரே அறிந்துள்ளனர். இத்தாக்குதலினால் தொழிலாளர் காயமடைந்துள்ளனர்.

சோ.தொ.க.வெல்நிட் பக்டரி தொழிலாளர்களின் சார்பில் தொழிலாளர் வர்க்கத்தின் ஆதரவை வென்றெடுக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது. தொழிலாளர்கள் மீதான தாக்குதலை எதிர்க்குமாறும் அவர்களுக்கு எதிரான சகல குற்றச்சாட்டுக்களையும் வாபஸ்பெறுமாறும் நெருக்கி பொலிசுக்கு கடிதம் அனுப்பும்படியும் சோ.தொ.க. வேண்டியுள்ளது.

கடிதம் அனுப்பவேண்டிய முகவரி:

Inspector of Police,
Sugumaran ,
Tambaram Police Station .
Tambaram ,Madras -3
Tamilnadu
India .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

விஜே டயஸ்

பாகம்–13

1983 ஜூலை இறுதியில் பிற்போக்காளர்கள் தமிழர் எதிர்ப்பு இனவாத இரத்தக் களரியையும் படுகொலைகளையும் நாடுபூராவும் கட்டவிழ்த்து விட்டது ஏன்? இதை அன்று இருந்து வந்த யூ.என்.பி. ஆட்சிக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தினால் தொடுக்கப்பட்ட சவாலை தெரிந்து கொள்ளாமல் புரிந்து கொள்ள முடியாது. தமிழ் மக்கள் மீதான தாக்குதல் "தன்னியல்பான" தமிழர் எதிர்ப்பின் ஒரு வெளிப்பாடாகும் என்ற கூச்சலையும் அவ்வாறே அது 'சுயமான மக்கள் கலகங்களின் ஒரு வெளிப்பாடாகும்' என்ற நவ சமசமாஜக் கட்சித் தலைவர்களின் தீவிரவாத கூப்பாடுகளையும் தவிடு பொடியாக்கிவிடுகின்றது.

1983 கறுப்பு ஜூலை ஆரம்பமான ஜூலை 23ம் திகதிக்கு சரியாக ஆறுநாட்களுக்கு முன்னர் ஜூலை 17ம் திகதி கொழும்பு அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் 28 தொழிற் சங்கங்களின் செயற்பாட்டாளர்களின் கூட்டம் நடைபெற்றது. இது 1980 ஜூலையில் நடந்த வேலைநிறுத்தப் போராட்டத்தின் எதிரில் சமசமாஜ கம்யூனிஸ்ட் தலைவர்களின் தட்டிக்கழிப்புக்களையும் ஜே.வீ.பி.யின் கருங்காலித்தனங்களையும் பாவித்து தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக யூ.என்.பி.அரசாங்கம் தொடுத்த மிலேச்ச தாக்குதலுக்குப் பின்னர் தொழிலாளர்கள் போராட்டத்துக்காக மீண்டும் அணிதிரண்டதைக் காட்டிக் கொண்டது.

தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களை 1980ஐக் காட்டிலும் இன்றைய தருணத்தில் சகிக்க முடியாது போனதற்கு காரணம், யூ.என்.பி.அரசாங்கத்தின் மீது சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் திணித்த நெருக்குவாரம் உக்கிரம் கண்டு போய் இருந்ததேயாகும். தொழிலாளர்களின் சம்பளப் 'பக்கட்டின்' நிலையான பெறுமானத்தை வெட்டித்தள்ளும் பொருட்டு ரூபாவை மதிப்பிறக்கம் செய்யும்படியும் கல்வி, சுகாதாரச் செலவு உட்பட்ட நலன்புரி சேவைகளை வெட்டும்படியும் ஏகாதிபத்திய வங்கியாளர்கள் அரசாங்கத்தை நெருக்கி வந்தனர். ஜூலை மாதத் தொடக்கத்தில் இலங்கைக்கு வந்த போல் பப்ரியர் தலைமையிலான பார்வையாளர் குழு சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைகள் எந்தளவுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆய்வு செய்து, நாட்டில் இருந்து வெளியேறியதுதான் தாமதம் உலக வங்கியின் பிரதிநிதிகள் இலங்கை வந்து சேர்ந்தனர். அவர்கள் வங்கியாளர்களுக்கு இருந்து கொண்டிருந்த அவசரத்தை காட்டிக் கொண்டனர். பொதுமக்களை கசக்கிப் பிழியும் வேலைத்திட்டத்தை விரைவில் நடைமுறைக்கிடாது போனால் அந்த ஆண்டு செப்டம்பரில் நடைபெற இருந்த இலங்கைக்கு உதவு வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் தொடர்ந்தும் கடன் வழங்குவது இல்லை என்ற முடிவினை எடுக்க இருப்பதாக வங்கியாளர்கள் எச்சரித்தனர். வங்கிகளின் பிரதிநிதிகள் இலங்கையில் இருந்து கொண்டிருக்கையிலேயே அரசாங்கம் ரூபாவை நூற்றுக்கு 5.5 வீதத்தினால் மதிப்பிறக்கம் செய்தது. இருந்தாலும் வங்கியாளர்கள் அதையிட்டு திருப்தியடையவில்லை.

இத்தகைய ஒரு நிலையிலேயே தொழிலாளர் வர்க்கத்தினுள் பதட்டம் வளர்ச்சி கண்டுவந்தது. தொழிற்சங்கங்கள் உட்பட்ட தொழிலாளர் அமைப்புக்கள் ஏற்படுத்திய தாக்கம் கொஞ்சநஞ்சம் அல்ல. 11 கோரிக்கைகள் இயக்கம் என்ற பேரிலான அமைப்பைச் சூழ 28 தொழிற்சங்கங்கள் அணிதிரண்டது இதன்படியேயாகும்.

பாரம்பரியமான தொழிற்சங்க கோரிக்கைகள் என்ற முறையில் 1980 ஜூலை வேலைநிறுத்தக்காரர்களை மீண்டும் சேவையில் சேர்த்தல், தொழிலாளர் சம்பளத்தை ரூபா.500ஆல் கூட்டுதல் போன்ற கோரிக்கைகளை முன்னணியில் கொண்டிருந்த போதிலும் 28 தொழிற்சங்கங்கள் நிறைவேற்றிக் கொண்ட கோரிக்கைகள் அரசியல் தன்மை கொண்டவையாக விளங்கின. இதற்கிடையே கூட்டுத்தாபனங்களைத் தனியார்துறையிடம் கையளிப்பதை நிறுத்துதல், இலவசக் கல்வி வெட்டை நிறுத்துதல், தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை வழங்குதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல், விவசாய நிலங்களை ஏகாதிபத்தியவாதிகளிடம் ஒப்படைப்பதை நிறுத்துதல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் ஆகியனவும் இவற்றுள் அடங்கும்.

இவை தொழிற்சங்க போராட்ட எல்லைகளைத் தாண்டிச் செல்லும் அரசியல் போராட்டத்தை வேண்டி நின்ற கோரிக்கைகளாகும். தொழிற்சங்கத் தலைவர்களின் தொழிற்சங்கவாதத்தினுள் தொழிலாளர்களை கட்டிப்போட நடவடிக்கை எடுத்த போதிலும் யூ.என்.பி.அரசாங்கம் அதனால் திருப்திகண்டு நிலைமையை புறக்கணித்துவிட முடியாது போய்விட்டது.

## பு.க.க.வுக்கு இருந்த ஆதரவு

இன்றைய சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்நோக்கும் வேலைத்திட்டமும் ஜூலை 17ம் திகதி நடந்த 28 தொழிற்சங்கங்களின் பேராளர் மகாநாட்டினுள் மட்டுமன்றி பரந்த தொழிலாளர் வர்க்கத்தினுள்ளும் ஆதரவைப் பெற்றுக்கொண்டிருந்ததே இதற்கான காரணமாகும்.

இந்தப் பேராளர் மகாநாட்டில் பேசிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவரான பரீடா இம்ரான் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் சார்பில் கரகோசத்தின் மத்தியில் பேசுகையில் "சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்தை ஆட்சி அதிகாரத்தை நோக்கி இட்டுச் செல்வதை மேலும் காலம் கடத்த முடியாது " எனக் குறிப்பிட்டார்.

"11கோரிக்கைகளை வெற்றி கொள்வது யூ.என்.பி.அரசாங்கத்தை தோற்கடிப்பதுடன் இணைந்து கொண்டுள்ளது "எனக் கூறிய அவர் "வடக்கு மாகாண மக்களுக்கு எதிராக அரசாங்கம் இனவாத யுத்தத்தை தூண்டிவிட்டிருப்பது தொழிலாளர் வர்க்கத்தைத் தடம்புரளச் செய்யவாகும்" எனவும் குறிப்பிட்டார்.

உற்பத்திச் சக்திகளையும் சேவைகளையும் ஒழித்துக்கட்ட ஏகாதிபத்திய வங்கியாளர்களின் சார்பில் சபதம் பூண்டுள்ள இந்த அரசாங்கம், இனவாதக் குழப்பங்களை சிருஷ்டிப்பதும் அந்த நடவடிக்கையை எடுக்கவேயாகும். தொழிலாளர் வர்க்கம் தொழில், சேவைகளை கட்டிக்காக்க வேண்டுமானால் இனவாத யுத்தத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழவேண்டும். தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையை தொழிலாளர் வர்க்கத்தினால் மட்டுமே தீர்த்து வைக்க முடியும் எனக் கூறிய அவர் யூ.என்.பி.அரசாங்கம் நடாத்தும் சேவை, தொழில் அழிப்புக்களுக்கு எதிராகத் தொழிலாளர், இளைஞர்கள், இடதுசாரி கட்சி பேராளர்களை இணைத்து மக்கள் சபைகளை அமைக்க வேண்டும் எனவும் அரச பயங்கரவாதத்துக்கு எதிராக பாதுகாப்புக் கமிட்டிகளை அமைக்க வேண்டும் எனவும் கூறினார்."(கம்கறுமாவத்த)தொழிலாளர் பாதை 1983ஜூலை 19)

இது அன்று புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர் வர்க்கத்தினுள் நடாத்திய சக்தி வாய்ந்த அரசியல் தலையீட்டுக்கான ஒரு உதாரணம் மட்டுமே. இதற்கு முரண்பட்ட முறையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்டாலினிஸ்டுகளும் நவசமசமாஜக் கட்சியினதும் ஜே.வீ.பி.யினதும் குட்டி முதலாளிததுவ தீவிரவாதிகளும் 28 தொழிற்சங்கங்களின் முன்னணியும் தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் அபிவிருத்திக்கான பொதுப் போராட்டத்தில் இருந்து ஓட்டமெடுத்தன. யூ.என்.பி. அரசாங்கத்தின் இனவாத ஒடுக்குமுறை ஆட்சிக்கு முண்டு கொடுத்தன. இதன்மூலம் தொழிலாளர் வர்க்கத்தை குழப்பியடிக்கவும் பிளவுபடுத்தவும் தமிழர் எதிர்ப்பு இனவாத இரத்தக் களரியையும் படுகொலைகளையும் கட்டவிழ்த்துவிடவும் யூ.என்.பி.அரசாங்கம் செயற்பட்டது. இதன் எதிரில் வர்க்கப் போராட்டம் முதலாளி வர்க்கத்துக்கு கலக்கமூட்டும் மட்டத்துக்கு வளர்ச்சி காணும் எனக் கணித்துக் கொண்டிருந்தனர்.

## சுதந்திரன் தடை

இனவாத இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பதற்கான உஜார் நடவடிக்கையாக யூ.என்.பி.அரசாங்கம் சிலபல தயாரிப்புக்களில் ஈடுபட்டது. தமிழ் மக்கள் பற்றிய செய்திகளை வெளியிட்டுவந்த சற்றடே ரிவீயூ, சுதந்திரன் பத்திரிகைகள் தடை செய்யப்பட்டன. சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர் கோவை மகேசனும் காந்தீயம் இயக்கத்தின் தலைவரான டாக்டர் தர்மலிங்கமும் கைது செய்யப்பட்டனர். ஜூலை 17ம் திகதி நடைபெற்ற தொழிலாளர் பேராளர் மகாநாட்டில் இந்த நடவடிக்கைகள் கண்டனம் செய்யப்பட்டன. அத்தோடு பத்திரிகைத் தடைகளை அகற்றும்படியும் கைதானவர்களை விடுதலை செய்யும்படியும் கோரும் அவசர பிரேரணைகள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

இந்தக் கொடிய அடக்குமுறையின் உக்கிரமான தாக்குதல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்குத் தொடுக்கப்பட்டது தற்செயலானது அல்ல. பு.க.க.பத்திரிகைகளான தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகளுக்கு அரசாங்கத்தின் கொடிய தாக்குதல் தொடுக்கப்பட்டது. தொழிலாளர் வர்க்கத்தினதும் அரசியல் ரீதியில் நனவான பகுதியினரிடையேயும் அது அந்தளவுக்கு கோபமூட்டியதன் காரணமாக தொழிலாளர் பேராளர் மகாநாட்டில் பேசிய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராக விளங்கிய எச்.என்.பெர்னாந்து அரசாங்கத்தின் அந்த வேட்டைகளை எதிர்த்து குரல் கொடுக்காமல் இருக்க முடியாது போய்விட்டது.

அன்று 'கம்கறு மாவத்த' பத்திரிகை வெளியீட்டாளராகவும் அச்சகனாகவும் விளங்கிய ஆனந்த வக்கும்புர வெள்ளவத்தை பொலிசாரால் கைது செய்யப்பட்டார். வவுனியாவில் இடம்பெற்றுவந்த தமிழர் எதிர்ப்பு தகவல்களைத் திரட்ட வவுனியா சென்றதன் பேரில் அவர் கைது செய்யப்பட்டார். அச்சமயத்தில் பு.க.க.வின் அச்சகமும் அலுவலகமும் வெள்ளவத்தையில் இருந்து வந்தன. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்னெடுத்த அரசியல் பிரச்சாரம் காரணமாக வக்கும்புரவை பொலிசார் விடுதலை செய்த போதிலும் பின்னர் அவர் வவுனியா பொலிஸ் நிலைய அதிபரிடம் சரணடையுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. வளர்ச்சி கண்டுவந்த இனவாத வன்முறையின் பின்னணியின் கீழ் அந்தக் கட்டளையானது தமிழ் மக்களின் உரிமைகளை தாக்கும் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த பு.க.க.வை நசுக்கித் தள்ள அரசாங்கம் தீர்மானம் செய்திருந்ததை எடுத்துக் காட்டியது. ஆதலால் வக்கும்புரவை சரணடையுமாறு வவுனியா பொலிஸ் நிலைய அதிபர் பிறப்பித்த கட்டளையை மீறுவதென பு.க.க. தீர்மானித்தது.

## வர்க்கப் போராட்டத்தின் உக்கிரம்

இந்தச் சகல சம்பவங்களும் வர்க்கப் போராட்டம் சூடுபிடித்திருந்த விதத்தை எடுத்துக் காட்டின. பெரும்பான்மை தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் இடையே புரட்சிகர முன்நோக்கும் தலைமையும் ஸ்தாபிதம் செய்யப்படாமல் இருந்தமை ஆளும் வர்க்கத்துக்கு இருந்த ஒரே வாய்ப்பாகும். முதலாளித்துவ அரசின் ஒடுக்குமுறை உபகரணங்களான பொலிஸ், இராணுவம், நீதிமன்றம், சிறைச்சாலைகளால் கிளர்ந்து வரும் பொதுஜனக் கிளர்ச்சியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாது போனதை அரசாங்கமும் ஆளும் வர்க்கமும் புரிந்து கொண்டன. எனவேதான் யூ.என்.பி. தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ, ஜே.வீ.பி., இ.தொ.கா. கட்சிகளும் மற்றும் தொழிற்சங்கங்களும் அவ்வாறே தமிழ்க் குட்டி முதலாளித்துவ குழுக்களும் உருவாக்கி இருந்த அரசியல் ஆயத்தமற்ற நிலைமையைப் பாவித்து இனவாத கலவரத்தினால் நாட்டில் தீச்சுவாலையை மூட்டத் தீர்மானித்தது.

கட்டவிழ்த்துவிட்ட தமிழர் எதிர்ப்பு கலவரத்தின் பின்னணியாக கிளர்ச்சி கண்டுவரும் தொழிலாளர் வர்க்கப் போராட்ட அலையை தவிடுபொடியாக்குவது இருந்திருக்குமானால் இனவாத வேறுபாடுகள் இல்லாமல் தொழிலாளர் வர்க்கத்தை ஐக்கியப்படுத்தவும் அதைச் சூழ ஒடுக்கப்படும் மக்களை புரட்சிகரமான முறையில் அணிதிரட்டவும் போராடிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை தடைசெய்வதுடன் நிற்காது அதைத் தவிடுபொடியாக்குவதும் அந்தப் பிற்போக்கு நிகழ்ச்சி நிரலின் ஒரு பாகமாகியது புதுமையானது அல்ல.

ஜூலை 24ம் திகதி வெள்ளவத்தை பகுதிக்கு தீவைத்தும் கொள்ளையிட்டும் தமிழ் உயிர்களை சுட்டுப்பொசுக்கியும் வந்த யூ.என.பி.குண்டர்களில் ஒரு பகுதியினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கறுப்பு ஜூலையில் பொலிஸ் ஆதரவுடன் வீதியில் இறங்கிய இனவாதக் குண்டர்கள்

அப்பகுதியில் அமைந்திருந்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அலுவலகத்தையும் அச்சகத்தையும் தேடி அலைந்தது தற்செயலானது அல்ல. ஆனால் வெள்ளவத்தையில் கனல் ஒழுங்கை 21ம் இலக்கத்தில் இருந்த கட்சி அலுவலகத்தையும் அச்சகத்தையும் குண்டர்கள் அணுகுவது தவிர்க்கப்பட்டது அப்பிரதேச மக்களால் என்பது அப்படி ஒன்றும் தற்செயலானது அல்ல. அம்மக்கள் குண்டர்களை வேறு வழியில் திசை திருப்பி விட்டு இடம்பெறவிருந்த தாக்குதலைத் தவிர்த்தனர். அது உயர்ந்த ஒரு புரட்சிகர வீரத்தின் வெளிப்பாடாக இல்லாது போனாலும் புரட்சிகர இயக்கத்தைக் காக்க எடுத்த முயற்சியின் ஒரு வெளிப்பாடாகும். அத்தகைய ஒரு முயற்சி இல்லாது போயிருக்குமானால் பு.க.க.வின் தலைமையின் கணிசமான பகுதியினரும் அதன் அச்சகமும் 1983 கறுப்பு ஜூலையின் இனவாத தீப்பிளம்பில் நிச்சயம் சாம்பலாகிப் போயிருக்கும். அப்படி நடந்திருக்குமானால் யூ.என்.பி.ஆட்சிக்கு இயைந்து போய் இருந்த நவசமசமாஜக் கட்சி போன்ற குட்டி முதலாளித்துவ வெறியின் வெளிப்பாடுகளும் அத்தகைய நாசங்களும் "தன்னியல்பு பொதுஜனக் கிளர்ச்சியின்" பெறுபேறு எனக் கூறி அந்த விதத்திலேயே நிச்சயம் இடம்பெற்றிருக்கும்.

இத்தருணத்தில் ட்றொட்ஸ்கிச நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட நான்காம் அகிலத்தின் வேலைத்திட்டத்தை தேசிய முதலாளித்துவ ஆளும் வர்க்கங்களின் அவசியங்களுக்கு கீழ்ப்படுத்தி இருந்த பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சி(WRP) யின் பிரச்சாரத்தைக் கவனத்தில் கொள்ளும்போது மேற்சொன்ன முடிவு எதுவிதத்திலும் ஆச்சரியத்துக்கு உரியதொன்றல்ல. தொழிலாளர் புரட்சிக் கட்சி சார்பில் 1983 ஜூலை இனவாதக் கலகங்கள் பற்றி நியூஸ் லைன் பத்திரிகையில் கட்டுரை எழுதிய மைக் பண்டா பு.க.க.வின் தலைவர்கள் அச்சமயத்தில் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என எந்தவிதமான ஒரு மனக்கிலேசமும் இல்லாமல் கூறியிருந்தார். அச்சமயத்தில் பு.க.க.வினால் பாதுகாக்கப்பட்ட சுயாதீன தொழிலாளர் வர்க்க அரசியல் விதிமுறையையிட்டு முதலாளித்துவ ஆளும் வர்க்கங்களின் பின்னால் வயிறளந்து கொண்டிருந்த தொ.பு.க.காட்டிய எதிர்ப்பின்படி பார்க்குமிடத்து அது ஒரு எச்சரிக்கையைக் காட்டிலும் ஒரு பிரார்த்தனை வடிவத்தை எடுத்தது. ஆனால் அரச, குண்டர் தாக்குதல்களில் இருந்து தமிழ்த் தோழர்கள் உட்பட்ட கட்சிக் காரியாளர்களைப் பாதுகாத்துக் கொண்டு, முதலாளித்துவ ஆட்சியை தூக்கிவீசும் பொருட்டு தாம் முன்னெடுத்த போராட்டத்தினைத் தொடரும் அளவுக்கு மனித, சட வளங்களை அன்று பு.க.க.கொண்டிருந்தது.

ஆனால் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளையும் உயிர்களையும் பாதுகாக்க பு.க.க.முன் வைத்த புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களினதும் பெரும்பான்மையினர் நின்றிராத ஒரு நிலையில் தெற்கிலும் மலையக மாகாணங்களிலும் தமிழ்ப்பேசும் மக்கள் முகம் கொடுத்த அழிவு பிரமாண்டமானதாகியது. இது தமிழ் மக்களின் உரிமைகளையும் உயிர்களையும் முதலாளித்துவ பாராளுமன்றப் பேச்சுக் கடைகளின் வாய்வீச்சு விவாதங்களின் மூலம் காக்கமுடியும் எனக் கூறிச் செயற்பட்டவர்களதும் மறுபுறத்தில் வடக்கில் தனியாள் பயங்கரவாத தாக்குதல்களில் நம்பிக்கை வைத்து செயற்பட்டவர்களதும் தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ இயக்கங்களதும் அரசியல் வங்குரோத்தை அம்பலமாக்கியது. யூ.என்.பி.யின் இனவாத குண்டர் தாக்குதல்களின் எதிரில் ஒரு துளி எதிர்ப்புக் காட்டத்தன்னும் இந்த எந்த ஒரு அமைப்பினாலும் முடியாது போயிற்று.

முக்கிய நகரங்களில் மட்டும் இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் அகதிகளாகினர். தகவல் அமைச்சின் செயலாளர் டக்ளஸ் லியனகேயின் உத்தியோகபூர்வமான அறிக்கையின்படி 40,000 மக்கள் யாழ்ப்பாணம் சென்றனர். ஏனையோர் அகதிகள் முகாம்களில் உயிரைப் பிடித்துக் கொண்டு இருக்க நேரிட்டது. டசின் கணக்கான தமிழ் மக்கள் மிலேச்ச தாக்குதல்களுக்கும் டயர் தீக்கும் பலியாகினர். நாடு பூராவும் டயர் தீ நிர்மாணிக்கப்பட்ட முதல் அரங்கம் இதுவாகும்.

ஆனால் அது வர்க்க வேறுபாடு இல்லாமல் சகல தமிழ் மக்களுக்குமெனச் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு தலைவிதி அல்ல. தமிழ் செல்வந்தர்களுக்கு சிங்கள ஆளும் வர்க்கத்துடனும் யூ.என்.பி. அரசாங்கத்துடனும் நிலவிய உறவுகள் அவர்களின் உயிர்களைப் பிடித்துக் கொள்ளச் செய்தது. எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் மகன் சந்திரகாசனைக் காப்பாற்றும் பொருட்டு யூ.என்.பி.அமைச்சர் காமினி திசாநாயக்க தனிப்பட்ட முறையில் அவரது இல்லத்துக்கு சென்று நடவடிக்கை எடுத்தது அதற்கு ஒரு உதாரணமாகும்.

தமிழர் எதிர்ப்பு மிலேச்ச பயங்கரவாத தாக்குதல்களின் முன்னணிப் பேர்வழியாக விளங்கிய சிறில் மத்தியூ கூட அந்த விதத்தில் [illegible] ஏற்பாடுகளை [illegible] தமிழ் முதலாளிகள் இருந்திருப்பின் அது அப்படி ஒன்றும் புதுமைக்கு உரியது அல்ல. அதற்குக் காரணம் சிங்கள, தமிழ் முதலாளிகள் ஒன்றிணைந்து இந்த இரு தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களையும் முட்டிமோத வைத்தது தமது பிற்போக்கு ஆட்சியின் வீரத்தை கொலைகார நடவடிக்கைகள் மூலம் ஊர்ஜிதம் செய்ய செயற்பட்ட முதலாவதும் தனியானதுமான சந்தர்ப்பம் இது அல்லாததேயாகும். தேசிய சுயநிர்ணய உரிமையின் பேரால் தமிழ் முதலாளித்துவ குட்டி அரசை நிர்மாணிக்க பிரச்சாரம் செய்யும் சிங்கள குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் தமது முதலாளித்துவச் சார்பு தன்மை காரணமாக மறந்து போகும் விடயமும் அதுவாகும். ஆனால் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதி என்ற முறையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் புறநிலை உலகின் யதார்த்தத்தை மிகவும் நெருக்கமாக அடையாளம் கண்டும் ஆய்வு செய்தும் தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத வேலைத்திட்டத்தை இதற்கு ஏற்ப சமரசமற்ற புரட்சிகர உயிர்த்துடிப்பினால் உயிரூட்ட இடைவிடாது செயற்பட்டது. சோசலிச சமத்துவக் கட்சி முன்னெடுப்பது இந்தப் பாரம்பரியங்களேயாகும்.

## தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள்

தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களைச் சுரண்டும் பொருட்டு தமக்கென ஒரு தனிக் குட்டி அரசினை நிறுவச் செயற்பட்டுவந்த தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ பகுதியினர் கறுப்பு ஜூலையின் தமிழர் படுகொலைகளுக்கும் இரத்தக் களரிகளுக்கும் காட்டிய எதிர்ப்பு என்ன? தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு தலைவரான நீலன் திருச்செல்வம் 'இந்தியா ரூடே' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

"அது தமிழ் மக்கள் பகுதியினரின் பொருளாதார, புத்திஜீவி அடிப்படையை நாசமாக்க திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒன்றாகும்... அது தமிழ் தொழில்சார் நிபுணர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் தொடுத்த தாக்குதலாகும்." கொலை செய்யப்பட்ட, அகதிகளான தமிழ் தொழிலாளர்கள், ஏழைகளைப் பற்றி அக்கறை காட்டி வருத்தம் தன்னும் தெரிவிப்பதாக அது அமையவில்லை.

தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் உயிர்ப் பாதுகாப்புக்காக சுயாதீனமான நடவடிக்கைகள் எடுக்கத் தள்ளப்படுவர் என [illegible] தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் அ. அமிர்தலிங்கம் அதைப்பற்றிக் கூறியதாவது : "தமிழர் மனதில் பாதுகாப்பின்மை பற்றிய எண்ணம் புகுந்து கொண்டுள்ளது." என்றார். முதலாளித்துவ பாராளுமன்ற நடவடிக்கைகள் மூலம் பொதுமக்களை வழிநடுமாறச் செய்யும் பாதை இதனால் அடைபட்டுப் போகலாம் என்புதையிட்டு அவருக்கு நிலவிய அச்சத்தை அது காட்டியது.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் தனிநாடு அமைக்கும் இலக்குடன் தொழிற்பட்ட தமிழ்க் குட்டி முதலாளித்துவ அமைபபுக்கள் அக்கறை காடடியது நாடு பூராவும் பரந்து வாழ்ந்த தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதைப் பற்றி அல்ல. மக்கள் படுகொலையின் பிரச்சார இலாபத்தை தட்டிக் கொள்வதன் மூலம் தத்தமது அமைப்புக்களின் நிதி முட்டிகளை நிறைத்துக் கொள்வதிலேயே அக்கறை காட்டினர். தமது ஆளுமையின் கீழ் தனிநாடு அமைக்கப்படுமானால் தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் தொடர்பாகக் காட்டும் "அக்கறை"யின் கோலத்தை அதன் மூலம் வெளிக்காட்டிக் கொண்டனர்.

இதனது ஆதாயத்தை தட்டிக் கொள்ள தமிழர் எதிர்ப்பு இனவாதக் காட்டுமிராண்டி தனத்தைக் கட்டவிழ்த்துவிட்ட யூ.என்.பி.யும் ஜனாதிபதி ஜயவர்தனவும் தாமதிக்கவில்லை.

ஜூலை மக்கள் படுகொலைகளின் நான்கு நாட்களுக்கு பின்னர் ஜனாதிபதி ஜயவர்தன நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார். இந்தப் பேச்சு முற்றிலும் சிங்கள இனவாதிகளிடம் மன்னிப்புக் கோருவதாக விளங்கியது. அது இரண்டு நாட்களுக்கு மேலாக அவர்களது காட்டுமிராண்டி நடவடிக்கைகளை மனம்போன போக்கில் தொடர்வதற்கு தம்மாலும் தமது அரசாங்கத்தாலும் இடமளிக்க முடியாது போனது சம்பந்தமானதாக விளங்கியது. ஜயவர்தன நாட்டு மக்களுக்கு உரைநிகழ்த்தியது எல்லே குணவங்ச(பிக்கு) என்ற பெயர்போன இனவாதியின் தூண்டுதலின் பேரிலாகும் என்பது பிரசித்திபெற்றது. ஆதலால் அந்த உரையை குணவங்சவே எழுதிக் கொடுத்திருக்கலாம் எனச் சந்தேகிக்கவும் காரணம் இல்லாமல் இல்லை.

ஐந்து நிமிடங்களும் பத்து செக்கண்டுகளுக்கும் குறைவான காலத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட இந்த ஜனாதிபதியின் பேச்சில் தமிழ் தேசிய இனம் பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. அதன்படி அத்தகைய தேசிய ஜனநாயக உரிமைகளைக் காப்பதையிட்டுத் தமக்கு அணுவளவும் அக்கறை கிடையாது என்பதை அவர் ஊர்ஜிதம் செய்து கொண்டார்.

ஜனாதிபதி ஜயவர்தனாவின் பேச்சு இனவாத படுகொலைகளையும் இரத்தக்

19ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும்

## மார்க்சிசத்தின் குட்டி முதலாளித்துவ எதிரிகளுக்கு ஒரு பதில்

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

அமெரிக்க ஸ்பார்ட்டசிஸ்ட் லீக்கின் ஒரு தொடர் கட்டுரைகளுக்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் தயார் செய்யப்பட்ட பதில் மே இதழில் இருந்து தொழிலாளர் பாதையில் பிரசுரமாகின்றது.

தேசிய அரசின் நின்றுபிடிக்கும் தன்மையை வலியுறுத்துவதன் மூலம் ஸ்பார்ட்டசிஸ்டுகள் முதலாளித்துவ அபிவிருத்தியின் வரலாற்றை திருப்பி எழுதும் பொறுப்பை ஏற்கின்றார்கள். "முதலாளி வர்க்கம் ஒரு அனைத்துலக வர்க்கம் என்ற நோக்கின் கருத்து" "முதலாளி வர்க்கத்தினால் தேசிய நலன்களைத் தாண்டிச் செல்ல முடியாது என்ற மார்க்சிச விளக்கத்துக்கு எதிராக நேரில் நின்று கொண்டுள்ளது." என அவர்கள் எழுதுகின்றனர்.( வேர்க்கர்ஸ் வன்கார்ட் 1997 பெப்பிரவரி 21)

இந்த நிலைப்பாட்டுக்குப் பின்னணியில் முதலாளித்துவ வரலாற்றை அடியோடு பொய்மைப்படுத்துவது உள்ளது. ஸ்பார்ட்டசிஸ்ட் கருத்தின்படி முதலாளி வர்க்கம் தேசிய அரசின் சிருஷ்டியாக விளங்குவதோடு உலக வர்த்தகம் ஒரு தொகை கட்டிடத் துண்டுகளைக் கொண்டு நிர்மாணிப்பது போல் பல்வேறு தேசிய சந்தைகளைச் சேர்த்து அபிவிருத்தி செய்யப்பட்டதாகும்.

வரலாற்று அபிவிருத்தியின் நிஜ பயணப் பாதையானது மேலே காட்டப்பட்ட இயந்திர ரீதியான கருத்துப்பாட்டுடன் எந்த விதத்திலும் ஒத்துப் போகவில்லை. ஐரோப்பாவில் முதலாளி வர்க்கம் தேசிய அரசின் ஸ்தாபிதத்துக்கு முன்னர் தோன்றியது. அதன் வர்த்தகம், வங்கி, வர்த்தக நடவடிக்கைகள் உற்பத்திக் கைத்தொழில் உட்பட எதேச்சாதிகார நிலமானித்துவ ஆட்சி அமைப்பினுள் ஒரு அனைத்துலக வர்க்கமாக தொழிற்பட்டது. வரலாற்று ரீதியில் பார்ப்பின் அனைத்துலக சந்தை தேசிய சந்தைகளின் அபிவிருத்திக்கு முன்னர் தோன்றியதோடு நிலமானித்துவ உறவுகளை அடிப்படையாகக் கொண்ட உள்ளூர் உற்பத்தியின் வீழ்ச்சிகளுக்கும் சந்தைக்கான பண்ட உற்பத்தியின் அபிவிருத்திக்குமான காரணிகளில் ஒன்றாகும்.

முதலாளித்துவ தேசிய அரசு, தமது சொத்து, பொருளாதார நலன்களை பாதுகாப்பதற்கு வேண்டிய அரசியல் அமைப்பை அபிவிருத்தி செய்ய முதலாளி வர்க்கம் முயற்சி செய்த ஒரு சிக்கலான வரலாற்றுப் போக்கில் இருந்தே தோன்றியது. இந்தச் செல்வமும் அரசியல் அமைப்பும் உலக சந்தையின் அபிவிருத்தியினாலேயே தோன்றியது. வேறு வார்த்தைகளில் சொன்னால் முதலாளி வர்க்கம் உலகச் சந்தையினதும் தேசிய அரச முறையினதும் சிருஷ்டிகர்த்தா.

மூலதனத்தின் தர்க்கவியல் சர்வ வியாபகமானது. திரட்சிக்காக அதனுள் இருந்து கொண்டுள்ள இயற்கையான போக்கானது உற்பத்தியின் முன்னைய சகல வடிவங்களுடனும் அதை மோதிக் கொள்ள வைக்கின்றது. மூலதனத் திரட்சிக்கான ஓயாத உந்துதலில் மூலதனம் ஒவ்வொரு தடையையும் உடைத்து எறியவும் ஒவ்வொரு எல்லைகளை கடந்து செல்லவும் தள்ளப்படுகின்றது.

எவ்வாறெனினும் தேசிய அரச வடிவம் எல்லைகளையும் தடைகளையும் நிர்மாணிப்பதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. அதற்காக அவை அதனது அதிகாரங்களையும் நியாயாதிக்கங்களையும் வரைந்து கொள்கின்றன. முதலாளித்துவ அமைப்பு ஒரு புறத்தில் பூகோளரீதியில் விஸ்தரிக்க மூலதனம் செய்யும் முயற்சியையும் மறுபுறத்தில் தேசிய அரசினால் திணிக்கப்பட்டுள்ள வரையறைகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. முதலாளித்துவம் அதன் பிறப்பில் இருந்து பெற்றுக் கொண்ட இந்த முரண்பாடு இருபதாம் நூற்றாண்டில் இரண்டு உலக யுத்தங்களின் தோற்றத்துக்கு இடமளிக்கும் வகையில் வெடித்துச் சிதறும் மட்டத்தை எட்டியது.

முதலாளி வர்க்கம் இந்த முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ள முடியாது. அதன் சொத்து வேரூன்றியுள்ள தேசிய அரச முறையை அதனால் ஒதுக்கிவிட முடியாது. உற்பத்திச் சக்திகளை தேசிய எல்லைகளால் திணிக்கப்பட்ட வரையறைகளுக்குள் கட்டுப்படுத்தி வைக்கவும் முடியாது.

முதலாளி வர்க்கம் மூலதனத்தின் புறநிலைத் தாக்கத்தினால் நெறிப்படுத்தப்படுகின்றது. அதனால் அதனது பொருளாதார செயற்பாட்டில் முதலாளி வர்க்கம் தொடர்ந்து தேசிய அரச எல்லையைத் தாண்டிச் செல்லவோ அல்லது அதற்கு குழிபறிக்கவோ நேரிடுகின்றது.

"மார்க்சிச விளக்கத்துக்கு [illegible] பொருத்தமற்றது" அனைத்துலகக் குழுவின் ஆய்வுகள் அல்ல. மாறாக ஸ்பார்ட்டசிஸ்டுகளால் சிருஷ்டிக்கப்பட்ட அறிவினமே. புகழ்பெற்ற மார்க்சிஸ்டுகளான கார்ள் மார்க்சும் பிரெடரிக் எங்கேல்சும் கம்யூனிஸ்ட் அறிக்கையில் எழுதியது இதுதான்:

"முதலாளித்துவ வர்க்கத்தின் உற்பத்திப் பொருள்களுக்குத் தொடர்ந்து மேலும் மேலும் விரிவடைந்து செல்லும் சந்தை அவசியமாகும். இந்த அவசியம் முதலாளித்துவ வர்க்கத்தைப் புவிப்பரப்பு முழுதும் செல்லும்படி விரட்டுகின்றது. அது எல்லா இடங்களுக்கும் சென்று ஒட்டிக் கொள்ள வேண்டியதாகின்றது. எல்லா இடங்களிலும் குடியேற வேண்டியதாகின்றது. எல்லா இடங்களிலும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதாகின்றது.

"அனைத்து உலக சந்தையைப் பயன்படுத்திச் செயல்படுவதன் மூலம் முதலாளித்துவ வர்க்கம் ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தியையும் நுகர்வையும் அனைத்துலகத் தன்மைபெறச் செய்துள்ளது. பிற்போக்காளர்கள் கடும் கோபங்கொள்ளும்படி அது தொழில்களது காலுக்கு அடியில் இருந்து அவற்றின் தேசிய அடிநிலத்தை அகற்றியுள்ளது. நெடுங்காலமாக நாட்டிலே இருந்துள்ள தொழில்கள் யாவும் அழிக்கப்பட்டுவிட்டன. அல்லது நாள்தோறும் அழிக்கப்பட்டு வருகின்றன. புதிய தொழில்களால் அவை அப்புறப்படுத்தப்படுகின்றன. இந்தப் புதிய தொழில்களைத் தோன்றச் செய்வது நாகரீக நாடுகள் யாவற்றுக்கும் ஜீவ மரணப் பிரச்சினையாகிவிடுகின்றது. முன்பிருந்தவற்றைப் போல் இந்தப் புதிய தொழில்கள் உள்நாட்டு மூலப் பொருட்களை மட்டும் உபயோகிப்பவை அல்ல. தொலைதூரப் பிரதேசங்களில் இருந்து தருவிக்கப்படும் மூலப் பொருட்களை உபயோகிப்பவை. இவற்றின் உற்பத்திப் பொருட்கள் தாய்நாட்டில் மட்டுமன்றி உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட்டு எல்லாப் பகுதிகளிலும் நுகரப்படுகின்றவை. தாய்நாட்டு உற்பத்திப் பொருள்களால் பூர்த்தி செய்யப்பட்ட பழைய தேவைகளுக்குப் பதில் [illegible] மண்டலங்களது [illegible] பூர்த்தி செய்யப்படும் புதிய தேவைகள் எழுகின்றன. வட்டாரங்கள், நாடுகள் இவற்றின் பழைய ஒதுக்க நிலைக்கும் தன்னிறைவுக்கும் பதில் எல்லாத் திசைகளிலுமான நெருங்கிய தொடர்பும் உலக அளவில் நாடுகளுக்கிடையிலான சார்புடமையும் ஏற்படுகின்றன. பொருள் உற்பத்தியில் எப்படியோ அப்படியேதான் அறிவுத்துறை உற்பத்தியிலும் தனித்தனி நாடுகளுடைய அறிவுத்துறைப் படைப்புக்கள் எல்லா நாடுகளுக்குமான பொது சொத்தாகின்றன. தேசிய ஒரு தலைப்பட்ச பார்வையும் குறுகிய மனப்பாங்கும் மேலும் மேலும் இயலாதனவாகின்றன. நாட்டளவிலும் மண்டல அளவிலுமான எத்தனையோ பல இலக்கியங்களில் இருந்து ஓர் அனைத்துலக இலக்கியம் உருவாகின்றது."( கம்யூனிஸ்ட் அறிக்கை பக்கம் 48, 49)

### ஸ்பார்ட்டசிஸ்டுகளும் ''கவலைப்படும் பங்காளர்களும்''

அடிப்படை பொருளாதார உந்து சக்திகளுக்கு மேலாக அரசியல், இராணுவ காரணிகள் ஆரம்பமானவை என அவர்கள் நிலைநாட்ட முயற்சிப்பதால் ஸ்பார்ட்டசிஸ்டுகள் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தொழிற்பாடு பற்றி முற்றிலும் ஒரு அகநிலை நோக்கினை முன்வைக்கின்றார்கள்.

ஆதலால் அவர்கள் இங்ஙனம் எழுதுகின்றார்கள்:

"அனைத்துலகக் குழுவின் முன்நோக்கின்படி ஐபீஎம், சீமென்ஸ், டுசீபா போன்ற கூட்டுத்தாபனங்கள் முற்றிலும் கவனம் செலுத்துவது பூகோள ரீதியில் தமது இலாபத்தை உச்சமாக்குவதற்கேயாகும். அவற்றின் பணிப்பாளர்களும், பங்குதாரர்களும் தமது நடவடிக்கைகள் அமெரிக்க, ஜேர்மன், ஜப்பானிய முதலாளித்துவ அரசுகளைப் பலப்படுத்துகின்றதா என்பதையிட்டு அக்கறையில்லை எனக் கூறப்படுகின்றது." (1997 பெப்பிரவரி 21-வேர்க்கர்ஸ் வன்கார்ட்)

பங்குதாரர்களும் பணிப்பாளர்களும் தேசிய அரசின் பலம் பற்றி அல்லது ஏனைய பிரச்சினைகள் பற்றி "அக்கறை" காட்டுகின்றார்களா என்பது ஒரு பிரச்சினை அல்ல. மார்க்ஸ் காட்டியது போல் முதலாளித்துவ உற்பத்திப் போக்கு மூலதனங்களின் சொந்தக்காரர்களின் அகநிலை விருப்பங்கள் அல்லது உள்நோக்கங்களால் முன்நோக்கித் தள்ளப்படுவதில்லை. ஆனால் மூலதனத் திரட்சிப் போக்கின் புறநிலைத் தாக்கத்தினாலேயே முன்நோக்கித் தள்ளப்படுகின்றது. இது மார்க்சிசத்தின் ஒரு "அம்சம்" அல்ல மார்க்சின் நூலான மூலதனத்தின் மையமான பாண்ட வழிபாடு பற்றிய ஆய்வின் மையமாகும்.

மார்க்ஸ் எழுதியதாவது: "முதலாளிகள் இட்டுநிரப்பும் பணியானது நனவாகவும் விருப்புடனும் செயற்பட்டு ஆற்றும் மூலதனத்தின் தொழிற்பாட்டுக்கு அதாவது உயிர்வாழும் உழைப்பைக் கொண்டு பெறுமானத்தை மேலும் மேலும் அதிகரித்துக் கொள்வதற்கு அப்பாற்பட்டது அல்ல. முதலாளி மனித உருவம் கொடுக்கப்பட்ட மூலதனமாக மட்டுமே செயற்படுகின்றான்."

(மார்க்ஸ் மூலதனத்தின் முதலாம் பாகம்-உற்பத்தியின் உடனடிப் போக்கின் பெறுபேறுகள்)

பெரும் கூட்டுத்தாபனங்கள் தமது தேசிய அரசுக்கு ஏற்படும் தாக்கத்தையிட்டு கணக்கெடுக்காது தமது இலாபத்தை உச்சமாக்க நேரிடுகின்றது. இல்லையேல் பெரும் போட்டியாளர்களால் தொழிலில் இருந்து வெளியே தூக்கி வீசப்படும் ஆபத்துக்கு அவர்கள் முகம் கொடுக்க நேரிடுகின்றது. இந்த நிர்வாக முறை நிதி மூலதனத்தின் தொடர்ச்சியான இயக்கத்தினால் திணிக்கப்படுகின்றது. பெரும் கூட்டுத்தாபனங்களின் பங்குதாரர்களின் நிதிகள் தனிப்பட்ட முதலாளிகளின் சொத்துக்களால் தொடர்ந்தும் ஆதிக்கத்துக்கு உள்ளாகுவதில்லை. ஆனால் அது வங்கிகளின் முதலீடுகள், ஆயுள் காப்புறுதிகள், ஓய்வூதியம், சேமலாபநிதி மற்றும் வகையிலான ஒன்றுதிரட்டப்பட்ட சேமிப்புக்களை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. இந்த நிதிகள் மிகவும் நல்ல இலாப வீதத்தை தேடி பூகோளம் பூராவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகின்றன. பெரும் கூட்டுத்தாபனங்களின் பணிப்பாளர்களின் விருப்பம் எதுவாக இருந்த போதிலும் கூட்டுத்தாபனங்கள் தமது பங்காளர்களின் நிதிகளுக்கு உயர்ந்த போட்டி நிறைந்த இலாப வீதத்தை பெற்றுக் கொள்வதற்கான தமது உற்பத்தி விதிமுறைகளை தொடர்ந்து அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. இதைச் சாதிக்க முடியாமல் போகும் நிறுவனங்கள் அதாவது அனைத்துலக ரீதியில் தமது இலாபத்தை உச்சமாக்கிக் கொள்ளதவை அவை தோன்றிய தேசிய அரசுக்கு ஏற்படக் கூடிய விளைவுகள் என்னவாக இருந்த போதிலும் மிகவும் உயர்ந்த இலாப வீதத்தைத் தேடிக் கொள்ளக் கூடிய வெளிநாடுகளை நோக்கி வெளியேறுவதால் தமது பங்குகளின் விலைகள் வீழ்ச்சியடைவதைக் காண நேரிடும். இதன் பயனாக கூட்டுத்தாபனங்கள் தமக்கு நிதியை ஈர்த்துக் கொள்ளும் பொருட்டு மூலதனத்துக்காக உயர்ந்த வட்டம் அல்லது உயர்ந்த வட்டி வீதம் வங்கிகளுக்கு செலுத்த நேரிடும். பெரிதும் இலாபகரமான வர்த்தகப் போட்டியாளர்களால் இது ஒரேயடியாக வர்த்தகத்தில் இருந்து வெளியே தள்ளப்படாது போனாலும் இவற்றின் சொத்துக்கள் மதிப் பிறக்கம் செய்யப்படுகின்றது. அல்லது இவை வேறு போட்டியாளர்களால் பொறுப்பேற்கப்படுகின்றது அல்லது இணைக்கப்படுகின்றது.

தொழிலாளர்கள் பக்டரிகளை கொள்வனவு செய்வதன் மூலமோ அல்லது சபைகளுக்கு "சமூக ரீதியில் பொறுப்புமிக்க" பணிப்பாளர்களை நியமனம் செய்வதன் மூலமோ முதலாளித்துவ உற்பத்திகளின் தீய விளைவுகளை ஒழித்துக்கட்ட முடியும் என்ற சகல சமூக சீர்திருத்தவாதக் கைவைத்தியம் பற்றிய மார்க்சிச விமர்சனத்தின் சாராம்சம் முதலாளித்துவ உற்பத்தியின் புறநிலை தர்க்கத்தின் ஆய்வு உள்ளது.

முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தொழிற்பாடு பற்றிய விஞ்ஞான ரீதியான ஆய்வு நோக்கில் பார்க்கையில் ஸ்பார்ட்டசிஸ்ட் நிலைப்பாடுகள் அர்த்தமற்றவையாக இருப்பதோடு அவற்றுக்கு திட்டவட்டமான வர்க்க தர்க்கத்தையும் கொண்டுள்ளன. தமது இலாபத்தை உச்சப்படுத்துவதற்கு நேரிடும் நஷ்டத்தை நோக்காது "தமது"தேசிய அரசைப் பற்றி "கவனம் செலுத்த " பணிப்பாளர் சபை செய்யப்படுமானால் இலாப உச்சத்தில் ஏற்படும் தாக்கத்தை நோக்காது வேறு பிரச்சினை பற்றியும் "கவனம்" செலுத்தும்படி அவர்களை தள்ள முடியும்: உதாரணம்: தொழிலாளர் வர்க்கத்தின் அதிகரிக்கும் சம்பளம் அல்லது அதிகரித்த சமூக சேமநல வசதிகள் உட்பட்ட ஒரு முழு சமூக சீர்திருத்த வேலைத்திட்டத்தையும் திணிக்க முடியும்.

இங்குதான் ஸ்பார்ட்டசிஸ்டுகளின் அரசியல் முன்நோக்கு இருந்து கொண்டுள்ளது. பூகோளரீதியான பொருள்ாதாரச் சக்திகளின் ஆரம்பத்தை நிராகரித்துவிட்டும் தமது உள்நாட்டு அடிப்படைகளுடனான பிணைப்பை வலியுறுத்தியும் அவர்கள் தேசத்தை பற்றி "கவனிக்கும்" முதலாளி வர்க்கப் பகுதியினருடன் திரண்டு நிற்கின்றனர்.

இந்த விதத்தில் ஸ்பார்ட்டசிஸ்டுகள் தனிப்பட்டுவிடவில்லை. அவர்களின் பயணத் திசையை தீவிரவாத அமைப்புக்களில் உள்ள அவர்களின் சகாக்களின் பயணத் திசையைக் கொண்டு நன்கு அளவிட முடியும். இவர்கள் சகலரதும் முன்நோக்கு பிரித்தானிய மத்தியதர வர்க்க இடதுசாரிகளின் இரண்டு பிரதிநிதிகளான போல் ஹெஸ்ட் கிரகாம் தோம்சனால் எழுதப்பட்ட சமீபத்திய ஒரு நூலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவர்களால் எழுதப்பட்டுள்ள "பூகோளமயமாக்கம் பிரச்சினைக் குள்ளாகியுள்ளது" என்ற நூல் இந்தப் போக்குக்களுக்கு ஏதோ ஒரு பைபிள் ஆகியுள்ளது. இந்நூலின் ஆசான்கள் தமது முன்நோக்கை பூகோளப் பொருளாதாரப் போக்கு பற்றிய அவநம்பிக்கையீனத்தினதும் அனைத்துலப் பொருளாதாத்தைக் கட்டுப்படுத்துவது பற்றியதும் தேசிய அரசியல் மூலோபாயத்தின் தாக்கிப்பிடிக்கும் தன்மையின் சாத்தியங்களின் திடநம்பிக்கையினதும் ஒரு சேர்வை" என வருணிக்கின்றனர்.

பூரண வேலைவாய்ப்பு போன்ற சமூக இலக்குகள் "பிரச்சினைக்கு" உரியதாகிவிட்டதாக அவர்கள் ஒப்புக்கொள்கின்றார்கள். ஆனால் இத்தகைய முக்கிய பிரமுகர் பிரதிநிதிகளின் மனோபாவத்தில் ஒரு மிதமான மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டால் எமக்கு சார்பு ரீதியில் வேகமாக ஈட்டிக் கொள்ள முடிந்த சமூகக் கட்டுப்பாட்டிலும் அபிவிருத்தியிலும் வடிவங்கள் கிடையாது என தள்ளுபடி செய்ய அல்லது புறக்கணிக்க எம்மை இட்டுச் செல்லக் கூடாது. இதனால் இடதுசாரிகளில் உள்ள சீர்திருத்தவாதிகளுக்கும் தமது சமூக அமைப்பின் பாதுகாப்பையிட்டு விழிப்பாகவுள்ள கொள்கை வடிவங்களையும் கட்டுப்பாடற்ற பூகோள ரீதியான போக்கின் முன்னால் நாம் உதவியற்றவர்கள் அல்ல என்பதை அறிவுறுத்துவது அவசியம்."

(பூகோளமயமாக்கம் பிரச்சினைக் குள்ளாகியுள்ளது போல் ஹேஸ்டும் கிரஹாம் தொம்சனும் பக்கம் 6 7)

ஹேர்ஸ்டும் தொம்சனும் வாழும் இங்கிலாந்தில் இந்த முன்நோக்கின் அர்த்தம், யூரோப்பாவினுள் நுழைவது பற்றி ஐயம் தெரிவிக்கும் (யூரோ சந்தேகப்பிராணி)

டேரிக் கட்சியும் காலஞ்சென்ற கோடீஸ்வரர் சேர்.ஜேம்ஸ் கோல்ட் சிமித்தும் அவரது கருத்துக்கணிப்புக் கட்சியும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் ஆர்தர் ஸ்கார்கில்லின் சோசலிச தொழிலாளர் கட்சியின் தேசியவாதிகளதும் பக்கம் திரும்புவதாகும்.

அமெரிக்க ஐக்கிய அரசுகளினுள் ஸ்பார்ட்டசிஸ்டுகள் ஏற்கனவே நப்டா( வட அத்திலாந்திக் வர்த்தக பிராந்திய அமைப்பு) எதிர்ப்பு பிரச்சார இயக்கத்தினுள் ஏ.எப்.எல் சீ.ஐ.ஓ. அதிகாரிகளும் நவ பாசிச பிரசங்கி பட் புச்சானனும் கோடிஸ்வரர் றோஸ் பெரோவும் நுகர்வோர் பாதுகாப்பு பிரச்சாரகராக நின்று கொண்டுள்ள ரால்ப் நாடருடனும் குட்டி முதலாளித்துவ 'தீவிரவாத "இடது"டனும் நிஜக் கூட்டுக்கு இணைந்து கொண்டுள்ளனர். அவர்கள் இந்தக் கூட்டில் சேர்ந்தது அதிகாரத்துவத்தினதும் முதலாளி வர்க்கப் பகுதியினரதும் பின்னால் தொங்கும் பொருட்டு அவர்களது பொருளாதார தேசிய வாதத்துக்கு இயைந்து போவதற்கேயாகும்.

தீவிர வலதுசாரிகள் பக்கம் ஈர்க்கப்பட்டுப் போனமை தற்செயலானதோ அல்லது விசித்திரமானதோ அல்ல. நீண்ட காலத்துக்கு முன்பே மத்தியதர வர்க்க 'இடது' தொழிலாளர் வர்க்கம் ஒரு புரட்சிகர வர்க்கம் என்பதை நிராகரித்து விட்டது. ஏகாதிபத்தியத்தை அனைத்துலக ரீதியில் பின்வாங்க வைக்கவும் உள்நாட்டில் ஆளும் வர்க்கத்தை சீர்திருத்தங்கள் வழங்க நெருக்கவும் இது தொழிலாளர் அதிகாரத்துவங்களையும் ஸ்டாலினிசத்தையும் தேசியவாத இயக்கங்களையும் சார்ந்து இருந்தது. இந்தப் பழைய தலைவர்களின் சீரழிவுடன் இடதுசாரிக் குழுக்கள் முதலாளித்துவ அரசுக்கு நெருக்குவாரம் தொடுக்கும் பொருட்டு புதிய சமூக சக்திகளைத் தேடி அலைந்தன. அவர்களது தேசியவாத நோக்கு அவர்களை முதலாளி வர்க்கத்தின் மிகவும் பின்தங்கியதும் மாகாண ரீதியிலானதுமான பிரிவினருடன் கூட்டுக்கு செல்ல வைக்கின்றது. அவ்வாறே அவர்களின் பிற்போக்கு அரசியல் பேச்சாளர்கள் பிரான்சின் லா பென் தொடக்கம் அமெரிக்காவின் புச்சானன் வரை பூகோளமயமாக்கத்தை கண்டனம் செய்கின்றனர்.

தொழிற்சங்கங்களின் சீரழிவு தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் அகநிலை ஊக்கிகளாலும் அவர்கள் "கடும் போராட்டங்களுக்கு" விருப்பம் இல்லாததன் விளைவாக ஏற்பட்டதாகவும் ஸ்பார்ட்டசிஸ்டுகள் விளக்குவதை நாம் கண்டிக்கின்றோம்.இப்போது இந்த வட்டம் நிறைவு பெற்றுள்ளது. பெரும் கூட்டுத் தாபனங்கள் ஓட்டப்படுவது பூகோளரீதியான பொருளாதார சக்திகளால் அல்ல. அவற்றின் பணிப்பாளர்களும் பங்காளர்களும் தமது தாய்நாட்டின் மீது கொண்டுள்ள அகநிலை பற்றுதல்களினால் ஆகும். இதன் பெறுபேறாக தேசிய மண்ணினுள் தொழிற்சங்கங்கள் முக்கிய கூட்டுத்தாபனங்களுக்கு சீர்திருத்தமும் நிவாரணங்களும் வழங்கும்படி நெருக்குவாரம் தரும் போது இந்த இருசாராரும் ஒன்றாக இணைய முடியும்.

தேசத்தை பற்றி "அக்கறை" கொண்ட - அதன் பலத்தை பாதுகாப்பதையிட்டு அக்கறை கொண்ட முதலாளி வர்க்கப் பகுதியினருடன் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் கூட்டுக்குச் செல்வது : ஸ்பார்ட்டசிஸ்டுகளின் அரசியல் வேலைத்திட்டம் இட்டுச் செல்வது இங்குதான். இதற்கு உற்பத்தியின் பூகோளமயத்தின் பிரதிபலிப்பாகத் தோன்றியுள்ள இன்றைய காலத்தின் பாசிச, அதிதீவிர தேசியவாத இயக்கங்களுக்குப் பொதுவான பல அம்சங்களைப் பகிர்ந்து கொள்கின்றன.

தொடரும்.



தென்கொரிய பொருளாதார வீழ்ச்சியின் மத்தியில் அரசாங்[illegible] தொழிலாளர்களும், மாணவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோ.ச.க. அங்கத்தவர்களை விடுத
# விடுதலை செய்யும் அ

## சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலைப் புலிகளின்...

1ம் பக்கத் தொடர்ச்சி

போராட்டங்களுடனும் இணைந்து கொள்வதும் இல்லாமல் நாட்டில் சோஷலிசத்தை ஸ்தாபிதம் செய்ய முடியாது. ட்ரொட்ஸ்கிச நிரந்தரப் புரட்சி கோட்பாட்டுக்கு எதிராக தனிநாட்டில் சோசலிசத்தை கட்டியெழுப்பும் வேலைதிரிட்டம் சோவியத் யூனியனுள் வீழ்ச்சி கண்டதன் மூலம் திட்டவட்டமாக இது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்தியத் துணைக் கண்ட சோசலிச முடியாது ஒன்றியத்தை கட்டியெழுப்பும் போராட்டத்தின் ஒரு பாகமாக இலங்கையினுள் இலங்கை-ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை கட்டியெழுப்பும் பணிக்கு தோள் கொடுப்போம்.

இந்தக் கைதுகளுக்கு எதிராக ஆகஸ்ட் 4ம்திகதி உலக மக்களை நனவு படுத்தும் வகையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் உலக சோசலிச வெப் நிலையம் ஆரம்பித்துள்ள பிரச்சாரம் பற்றிக் குறிப்பிட்ட சோ.ச.க. பொதுச் செயலாளர் உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்துக்குப் போராடுவதன் காரணமாக தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பு சோ.ச.க. அங்கத்தவர்களை வேட்டையாடத் தொடங்கி இருப்பதாகக் குற்றம் சாட்டினார்.

எமது தோழர்களை விடுதலை செய்யும்படி கோரி விடுதலைப் புலிகளின் லண்டன் தலைமையகத்துக்கு ஆகஸ்ட் 4ம் திகதி முதல் கடிதமும் ஆகஸ்ட் 12ம் திகதி இரண்டாவது கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டன. அவர்கள் நேரடியாகப் பதில் அளிக்காத போதிலும் தமிழ் வெப் நிலையத்தினால் வெளியிடப்பட்ட ஒரு கடிதம் என் கைக்கு கிடைத்துள்ளது. அது விடுதலைப் புலிகளின் தலைமையின் கருத்தின்படி வெளியிடப்பட்ட ஒரு கடிதம் என்பது தெளிவாகின்றது. விடுதலைப் புலிகள் சோசலிச சமத்துவக் கட்சி முன்னெடுக்கும் பிரச்சாரத்தையிட்டு எந்தளவுக்கு ஆத்திரமும் கோபமும் கொண்டுள்ளார்கள் என்பதைக் காட்டுகின்றது."

அந்தக் கடிதத்தின் ஒரு பகுதியை கூட்டத்தினருக்கு வாசித்துக் காட்டிய சோ.ச.க. பொதுச் செயலாளர் அவர்களின் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் விதத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்:

"விடுதலைப் புலிகள் "புதிய நாஸி" கட்சி எனப் பெயர் சூட்டுவது எந்தக் கட்சியை? இலங்கையில் நாஸிக் கட்சியாகத் தோன்றிய ஜே.வீ.பி. போன்ற தமிழர் எதிர்ப்பு, படு இனவாதக் கட்சிக்கு எதிராக போராடி தமது அங்கத்தவர்கள் மூவரை இழந்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமாகப் போராடிய கட்சியையேயாகும்.

அந்த "புதிய நாஸி" கட்சிக்கு மேலதிகமாக அவர்கள் "உலக சோசலிச வெப் நிலையத்துடன் இணைந்த இலங்கை அரசாங்கத்தின் ஏஜண்டுகள்" என்ற கதையையும் சேர்த்துள்ளார்கள். நாற்றம் கண்ட இலங்கை முதலாளி வர்க்கம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்கித்தள்ளும் ஒரு நிலைமையில் அந்த உரிமைகளைக் காக்க புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் (இன்றைய சோ.ச.க.)போராடியது தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தோன்றுவதற்கும் பல வருடங்களுக்கு முன்னராகும் என்பதை குறிப்பிட வேண்டும்.

யூ.என்.பி.அரசாங்கம் இராணுவத்தை ஈடுபடுத்தி 1983ல் இனவாத யுத்தத்தை அபிவிருத்தி செய்த ஒரு நிலைமையில் இருந்து அதற்கு எதிராக உறுதியாகப் போராடிய ஒரு அமைப்பு சோசலிச சமத்துவக் கட்சியை விட வேறு உள்ளதா? தமிழ் அரசியல் அமைப்புக்களை தடை செய்ய ஜனாதிபதி ஜயவர்தன அரசாங்கம் அரசியலமைப்பு திருத்தத்தைக் கொணர்ந்த காலத்தில் இருந்து அதற்கு எதிராக தமிழ் மக்களின் உரிமைகளைக் காக்க போராடிய வேறு அமைப்பு உள்ளதா? தமிழ் மக்கள் வாழும் பகுதிகளுக்கு சென்று அடக்குமுறைகளின் மத்தியில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தோழர்கள் எந்தளவு அடக்கு முறைக்கு உள்ளானார்கள்? வடக்கு-கிழக்கு அடக்குமுறைகளுக்கென அனுப்பிவைக்கப்பட்ட இலங்கை இராணுவத்தை வாபஸ் பெறும்படி பிரச்சாரம் நடாத்திய வேறு அமைப்பு உண்டா? கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யப் போராடிய வேறு அமைப்பு உண்டா? " என சோ.ச.க.பொதுச் செயலாளர் விஜே டயஸ் கேட்டார்.

சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்கள் எனத் தெரிந்துகொண்டு எமது தோழர்களை கடத்திச் சென்ற விடுதலைப் புலிகளை அவர்களை விடுதலை செய்யுமாறு பிரச்சாரம் செய்யும்படியும் ஆபத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படடுள்ள ப்யமுறுத்தல் பற்றிக் குறிப்பிட்ட சோ.ச.க. செயலாளர், அந்த பயமுறுத்தல் தனிநபர்களைக் கடத்திச் செல்லும் "மாபியா" கும்பல்கள் அதை பொலிசுக்கோ அல்லது வேறு யாருக்குமோ தெரியப்படுத்தின் கொலை செய்வதாகக் கூறும் அறிக்கைக்கு சமமானது இல்லையா எனக் கேட்டார்.

தோழர்.இராசேந்திரம் சுதர்சனின் தாயார் கைது செய்யப்பட்டுள்ள மகனைப் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கை இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலாகும் எனக் கூறிய விஜே டயஸ், அந்த அறிக்கையின் ஒரு பகுதியை மிகவும் அவதானத்துடன் கேட்டுக் கொண்டிருந்த கூட்டத்தினருக்கு வா[illegible]துக் காட்டினார்.

கைது செய்யப்பட்டுள்ள தோழர்களை விடுதலை செய்ய முழுப் பலமும் கொண்டு போராட வேண்டும் எனக் கூறிய விஜே டயஸ், இந்தக் கைது பிரச்சினையை புரிந்து கொள்வதற்கு அனைத்து உறவுகளின் நிலைமைகளினுள்ளும் இருத்தி ஆய்வு செய்ய வேண்டும் எனக் கூறினார். இந்தக் கைதுகள் இந்த நூற்றாண்டு பூராவும் தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் முகம் கொடுத்த பிரச்சினையைக் குறித்து நிற்கின்றது. உலகப் பொருளாதாரம், அரசியல், வர்க்கப் போராட்டத்துடன் தொடர்பு பட்ட விதத்தில் இருந்துவந்த ஒரு நாடு என்ற வகையில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து இந்நாட்டின் மக்கள் முகம் கொடுத்த பிரச்சினைகளை ஆய்வு செய்ய விஜே டயஸ் திரும்பினார்.

இந்த நூற்றாண்டின் ஆரம்[illegible]தில் பொருளாதார அபிவிருத்தியுடன் இல[illegible]கைத் தொழிலாளர் வர்க்கம் வளர்ச்சி கண்ட விதத்தையும் ஏகாதிபத்தியவாதிகள் தமது

# இலங்கை சோசலிஸ்டுகளை விடுதலை செய்யுமாறு உலக சோசலிச வெப் நிலைய தலைவர் வேண்டுகோள்

## தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு டேவிட் நோர்த் - 1998 ஆகஸ்ட் 7ம் திகதி அனு ப்பிய கடிதம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைக்கு,

உலக சோசலிச வெப் நிலையத்தின் ஆசிரியர் குழுவின் சார்பில் நான் கிளிநொச்சியில் இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர்கள் இருவர் ஜூலை 28ம் திகதி கைதுசெய்யப்பட்டது தொடர்பாக உங்களுக்கு எழுதுகின்றேன். திருஞானசம்பந்தன், காசிநாதன் நகுலேஸ்வரனும் சோ.ச.க.சுவரொட்டிகளை ஒட்டிய வேளையில் அப்பிராந்தியத்துக்கு பொறுப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.



டேவிட் நோர்த்

பிராந்திய விடுதலைப் புலிகள் அமைப்பின் அதிகாரிகள் சோ.ச.க. அங்கத்தவர்களின் உறவினர்களிடம் இந்தக் கைது செய்தலை ஊர்ஜிதம் செய்துள்ள போதிலும் அவர்களின் நிலைமை பற்றியும் அவர்களை வைத்திருப்பது எங்கு என்பது பற்றியும் தகவல் வழங்கவில்லை. இந்த நபர்களை நிர்வகிக்கும் பொட்டு அம்மான் என்ற விடுதலைப் புலிகள் அமைப்பின் பொலிஸ் அதிகாரி கைதுசெய்யப்பட்ட நபர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பேர்போனவர் என எமக்குத் தெரியவந்துள்ளது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் இயக்கப்படும் உலக சோசலிச வெப் நிலையத்துக்கு இந்தியத் துணைக் கண்டம் உட்பட சகல கண்டங்களிலும் ஆயிரக் கணக்கான அனைத்துலக வாசகர்கள் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். சம்பந்தன், நகுலேஸ்வரன் கைது செய்யப்பட்டது பற்றிய முதல் அறிக்கை வெளிவந்த இரண்டு நாட்களின் பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்களை உடன் விடுதலை செய்யும்படி கோரியும் பெருமளவிலான கடிதங்கள் எமக்குக் கிடைத்துள்ளன. எமது தோழர்களைக் கைது செய்தது பற்றி மனித உரிமைகளையிட்டு நனவானவர்கள், தொழிலாளர், தமிழ் அமைப்புக்களுக்கும் அறிவிப்பதில் நாம் ஈடுபட்டுள்ளதோடு உலகம் பூராவும் உள்ள செய்தி அமைப்புக்களுக்கு அவர்களின் தீர்க்கமான நிலைமையைப் பற்றியும் அறிவித்துக் கொண்டுள்ளோம்.

இந்தக் கைது செய்தல் பற்றிய எமது பிரதிநிதிகளின் பேட்டிகள் ஏற்கனவே பீ.பீ.சி.உலகச் சேவையில் ஒலிபரப்பாகியுள்ளன.

சோ.ச.க. அங்கத்தவர்கள் மீது அரசியல் தாக்குதல்களை நடாத்துவதன் மூலம் நீங்கள் தாக்குவது உலகம் பூராவும் பிரசித்தி பெற்ற அனைத்துலக சோசலிச அமைப்பையாகும். சிங்கள சோவினிசத்துக்கு எதிராக இலங்கை சோ.ச.க.வினதும் அதன் முன்நோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் திடசங்கற்பம் மிக்க எதிர்ப்பும் கொழும்பு அரசாங்கத்தினால் வடக்கில் நடாத்தப்படும் இனவாத யுத்தத்துக்கு எதிராக இலங்கைத் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்ட அது நடாத்தும் போராட்டங்களும் இலங்கை இந்தியாவிலும் உல்கம் பூராவும் புகழ்பெற்றது. உண்மையில் சிங்கள சோவினிசத்துக்கு எதிரான சோ.ச.க. பு.க.க. போராட்டம் விடுதலைப் புலிகளின் தோற்றத்துக்கு முற்பட்டதாகும்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை அரசியல் எதிர்ப்பைக் கிலியடையச் செய்யும் நசுக்கும் ஒரு முயற்சியாக அல்லாது வேறு விதத்தில் இந்தக் கைதுகளைக் கணிக்க முடியாது.

நீங்கள் கைது செய்து வைத்துள்ள சோ.ச.க.அங்கத்தவர்களுக்கு ஏதும் தீங்கு ஏற்படுமானால் அனைத்துலக ரீதியில் நனவானவர்களும் அமைப்புக்களும் உங்களின் முழுத் தலைமையும் இதற்கு அரசியல் ரீதியில் பொறுப்பு எனத் தீர்மானம் செய்வர்.

திருஞானசம்பந்தன், காசிநாதன் நகுலேஸ்வரனின் தலைவிதி பற்றி நீங்கள் உடனடியாகத் தகவல் வழங்க வேண்டும் என நாம் வேண்டுகின்றோம். அவர்களைத் தடுத்து வைத்திருப்பது எங்கே? அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு என்ன?

அவர்களின் உறவினர்களுக்கும் தோழர்களுக்கும் அவர்களை சந்திக்க இடமளிக்க வேண்டும் எனவும் அவர்களை சித்திரவதை செய்ய வேண்டாம் எனவும் நாம் மேலும் வேண்டுகின்றோம்.

அவர்களை விடுதலை செய்யுமாறும் அவர்களுக்கு எதிரான ஏதும் ஒரு குற்றச்சாட்டு இருப்பின் அவற்றை விலக்கிக் கொள்ளும்படியும் இறுதியாக நாம் வேண்டுகின்றோம்.

இந்தக் கடிதத்துக்கு நாம் விரைவில் பதிலை எதிர்பார்க்கின்றோம்.


உண்மையுள்ள,

டேவிட் நோர்த்,

ஆசிரியர் குழுத் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தலைப் புலிகளின் கைதில் இருந்து ...னைத்துலகப் பிரச்சாரம்



கொழும்பு அரசாங்க லிகிதர் சேவை சங்க மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு வருகை தந்தவர்களில் ஒருபகுதியினர்

நெருக்கடியினுள் உலக யுத்தத்தை நோக்கி சென்று அந்தந்த நாடுகளின் மக்களை மோதவைப்பதற்கு சோவினிசத்தைக் கட்டவிழ்த்து விட்ட ஒரு நிலைமையின் கீழ் 1915ல் இலங்கை முதலாளிகள் தொழிலாளர் வர்க்கத்தை பிளவுபடுத்த மதவாதக் கலகங்களைத் தூண்டிவிட்டதையும் சோ.ச.க. பொதுச் செயலாளர் விபரித்தார். ஆனால் 1935ல் லங்கா சமசமாஜக் கட்சி மார்க்சிச அடிப்படையில் தொழிற்படத் தொடங்கி, ஏகாதிபத்தியவாதிகள் மலைநாடு கீழ்நாடு, சிங்களவர் தமிழர் என்ற முறையில் பிளவுகளை ஏற்படுத்த முதலாளிகளையும் நிலவுடமையாளர்களையும் கொண்டு தூண்டிவிட்ட நடவடிக்கைகளை சவால் செய்ததாக அவர் கூறினார்.

"விடுதலைப் புலிகளின் கடிதம், சோசலிச சமத்துவக் கட்சி போன்ற சோசலிச அமைப்புக்கள் தமிழ் மக்களுக்கு என்றும் எதையும் பெற்றுக் கொடுத்ததில்லை எனக் காட்டுகின்றது. இத்தகைய பிலிஸ்தீன்வாத பேச்சுக்களை நாம் ஜே.வீ.பி.யின் வாய்களில் இருந்து நிறையக் கேட்டு இருக்கின்றோம்.

"ஒரு மார்க்சிச இயக்கம் இல்லாது இருந்திருக்குமானால் தமிழ் மக்களை இனவாத யுத்த இயந்திரத்துக்கு கீழ்ப்படுத்துவது 1983ம் ஆண்டுக்கு நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே ஆரம்பமாகியிருக்கும். ஒரு மார்க்சிச ட்ரொட்ஸ்கிச கட்சியாக லங்கா சமசமாஜக் கட்சி செயற்பட்ட சமயத்தில் இனவாதம் மிகவும் சக்திவாய்ந்த முறையில் தலையுயர்த்த முடியாத வகையில் தொழிற்பட்டது. ஆனால் அந்தப் போராட்டத்தைக் கைவிட்டு, சமசமாஜக் கட்சி குழிபறிந்து போய் 1964ல் மாபெரும் காட்டிக் கொடுப்பிற்குச் சென்றதன் மூலம் முதலாளி வர்க்கம் இனவாத தாக்குதலை சுதந்திரமாகச் செய்யும் வாய்ப்புக் கிட்டியது" என விஜே டயஸ் குறிப்பிட்டார்.

"கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட தோழர்களின் பிரச்சினையை நாம் உலக அரங்கின் கவனத்துக்குக் கொணர்ந்துள்ளோம்" எனக் கூறிய விஜே டயஸ், அனைத்துலக பிரச்சாரமாக சோ.ச.க. அங்கத்தவர் செல்லையா இராஜ்குமாரையும் தோட்டப்புற இளைஞர்களையும் விடுதலை செய்ய நடாத்திய பிரச்சாரத்தையும் அதன் மூலம் கிடைத்த அனுபவங்களையும் கூட்டத்தினருக்கு விளக்கினார்.

"இந்நாட்டிலும் அனைத்துலக ரீதியிலும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நனவு பெறச்செய்வதன் மூலம் சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலை செய்ய எமது முழுப் பலத்தையும் பாவிப்போம்" என சோ.ச.க. பொதுச் செயலாளர் இறுதியாகக் கூறினார்.

இக்கூட்டத்திற்கு சோ.ச.க. மத்திய குழு உறுப்பினர் கே.ரத்னாயக்க தலைமை தாங்கினார். வன்னி மாவட்டத் தோழர்கள் கைது செய்யப்பட்டது பற்றி விளக்கிய அவர் ஆகஸ்ட் 4ம் திகதி இது தெரிய வந்ததில் இருந்து நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் பகுதிகளும் உலக சோசலிச வெப் நிலையமும் முன்னெடுக்கும் பிரச்சாரம் அபிவிருத்தி கண்டுள்ள விதத்தை விளக்கினார். இதன் தாக்கம் காரணமாக உலகம் பூராவுமுள்ள கோடிக்கணக்கான மக்களின் கவனத்தை இந்தக் கைது பிரச்சினை ஈர்த்துக் கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். தமிழில் பேசிய சோ.ச.க.மத்திய குழு உறுப்பினர் எம்.அரவிந்தன், விடுதலைப் புலிகள் தமக்கு சோ.ச.க."தடையாகி" விட்டதாகக் கூறி அதன் அங்கத்தவர்களைக் கைது செய்துள்ளதற்கு காரணம் அவர்கள் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஊர்சிதம் செய்யக் கூடிய அனைத்துலக வேலைத்திட்டத்திற்குப் போராடியதே எனக் கூறினார். சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் முன்நோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைக் காக்க முன்னெடுத்த அரசியல் போராட்டத்தினை விளக்கிய அரவிந்தன், சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலை செய்யும் பிரச்சாரத்துக்கு ஆதரவு வழங்குமாறு வேண்டினார்.

சோசலிச சமத்துவக் கட்சியின் வன்னி மாவட்ட அங்கத்தவர்களை விடுதலை செய்யும் போராட்டத்தில் இணையுமாறும் உங்கள் கடிதங்கள், அறிக்கைகளை விடுதலை புலிகளின் கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பும் படியும் வேண்டுகின்றோம். அதன் ஒரு பிரதியை எமது கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

The LTTE.
C/o Eelam House,
202, Long Lane London SE1 4QB,
United Kingdom,
Tel: 0044-171-403-4554 FAX: 0044-171-403-1653

பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி,
90,1வது மாளிகா[illegible],
கொழும்பு.10.

## சோ.ச.க. பொதுச் செயலாளர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அனுப்பிய இரண்டாவது கடிதம்:

12 08 98

நான் 04 08 98ல் எழுதிய கடிதத்துக்கு மேலதிகமாக இதை எழுதுகின்றேன்.

உங்கள் அமைப்பின் தலைவர்களில் ஒருவரான தீபனால் கிளிநொச்சியில் சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்கள் இருவரைக் கைது செய்து தடுத்து வைத்திருப்பது தொடர்பாக எனது முதல் கடிதத்தின் மூலம் அறிவித்திருந்தேன்.

தர்மபுரத்தில் சோ.ச.க. சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த வேளையில் 1998 ஜூலை 26ல் அந்த இரண்டு அங்கத்தவர்களும் கைது செய்யப்பட்டார்கள் என எனக்கு நம்பகமான தகவல் கிடைத்ததும் நான் அந்தக் கடிதத்தை எழுதியிருந்தேன். நீங்கள் அறிந்தபடி அந்தக் கடிதத்தில் எமது இரண்டு அங்கத்தவர்களையும் உடன் விடுதலை செய்யும்படியும் அதற்கு ஒரு சாதகமான பதிலை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டு இருந்தோம்.

பக்ஸ் மூலம் ல்ண்டனில் உள்ள உங்கள் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட அந்தக் கடிதம் கிடைத்ததாக நீங்கள் ஒப்புக் கொள்ளாதது மட்டுமன்றி அந்த மாவட்டத்தில் உள்ள எமது அங்கத்தவர்களுக்கு எதிரான மேலதிக ஒடுக்குமுறை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுளீர்கள்.

கிளிநொச்சி விடுதலைப் புலிகள் அமைப்பு சோ.ச.க. மூன்றாவது அங்கத்தவரையும் அதாவது இராஜேந்திரம் சுதர்சனையும் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாக எனக்கு தெரிய வந்துள்ளது. அவர் ஆகஸ்ட் 2ம் திகதி அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கைதும் தடுத்து வைப்பும் எமது அமைப்பின் ஜனநாயக உரிமைகளை மோசமான முறையில் மீறுவதாகும்.

சோ.ச.க.நான்காம் அகிலத்தின் இலங்கை பகுதி என்ற முறையில் இலங்கையின் பல்வேறு முதலாளித்துவ அரசாங்கங்களாலும் பல்லாண்டுகளாக நசுக்கப்படும் தமிழ் சிறுபான்மையினரின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கும் அதனது உறுதியான போராட்டம் காரணமாக உலகம் பூராவும் புகழ்பெற்றது என்பதை நான் இங்கு மீண்டும் நினைவூட்டுகின்றேன். தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசினால் நடாத்தப்படும் இனவாத யுத்தத்துக்கு எதிராக எமது நிலைப்பாடும் நாட்டின் வடக்கு, கிழக்கில் இருந்து இலங்கை இராணுவத்தை வாபஸ்பெறக் கோரும் எமது புகழ்பெற்ற பிரச்சாரமும் இந்நாட்டிலும் இந்தியத் துணைக்கண்டத்திலும் அனைத்துலகிலும் பல ஆதரவாளர்களை வெற்றிகொள்ளக் காரணமாகியது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் உலக சோசலிச வெப் நிலையத்தின் ஆசிரியர் குழுவின் தலைவரான டேவிட் நோர்த்தினால் ஆகஸ்ட் 7ம் திகதி உங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் ஒரு பந்தியை [illegible] வதன் மூலம் இந்த [illegible] மீண்டும் வலியுறுத்த நான் விரும்புகின்றேன்:



விஜே டயஸ்

"சோ.ச.க.அங்கத்தவர்கள் மீது அரசியல் தாக்குதல்களை நடாத்துவதன் மூலம் நீங்கள் தாக்குவது உலகம் பூராவும் பிரசித்திபெற்ற அனைத்துலக சோசலிச அமைப்பையாகும். சிங்கள சோவினிசத்துக்கு எதிராக இல்ங்கை சோ.ச.க.வினதும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் எதிர்ப்பும், கொழும்பு அரசாங்கத்தினால் வடக்கில நடாத்தப்படும் இனவாத யுத்தத்துக்கு எதிராக இலங்கைத் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்ட அது நடாத்தும் போராட்டங்கள் இலங்கை இந்தியாவிலும் உலகம் பூராவும் புகழ்பெற்றது. உண்மையில் சிங்கள சோவினிசத்துக்கு எதிரான சோ.ச.க. பு.க.க.போராட்டம் விடுதலைப் புலிகளின் தோற்றத்துக்கு முந்திய ஒன்றாகும்."

விடுதலைப் புலிகள் சோ.ச.க. அங்கத்தவர்களைக் கைது செய்ததை எதிர்த்து, ஜனநாயக உரிமைகளில் அக்கறை காட்டும் உலக மக்களை விழிப்படையச் செய்யவும் அணிதிரட்டவும் நாம் தொடுத்துள்ள பிரச்சாரத்துக்கு உலகளாவிய ரீதியில் ஆதரவு திரண்டு கொண்டுள்ளது.

உங்களுக்கு ஒரு உதாரணம் வழங்குவதற்காக எமது இயக்கத்துடன் அரசியல் ரீதியில் நெருங்கிய உறவு இல்லாத போதிலும் சோ.ச.க.அங்கத்தவர்கள் உங்களால் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உலக சோசலிச வெப் நிலைய வாசகர் ஒருவரிடமிருந்து எமக்குக் கிடைத்துள்ள கடிதத்தினை மேற்கோளாகக் காட்ட விரும்புகின்றேன்:

"நான் ஜப்பானின் தென் பகுதியின் குமாமோட்டாவில் வாழும் ஜப்பானிய தேசிய இனத்தவன். ஜப்பானில் உங்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே இடம்பெறும் மோதுதல் மிகவும் பிரசித்திபெற்றது. தாம் சரியானவர்கள் எனவும் விடுதலைப் புலிகள் வெறும் பயங்கரவாதிகள் எனவும் அரசாங்கம் வெளியிட்ட அறிக்கைகளை பல ஜப்பானியர்கள் முன்னர் பெரிதும் நம்பினர். ஆனால் இப்போது சரியானதும் தெளிவானதுமான தகவல்கள் எமக்கு பெரிதும்

12ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலைப் புலிகளின் கைதில் இருந்து விடுதலை செய்யும் அனைத்துலகப் பிரச்சாரம்

## ஜப்பானில் இருந்து அனுப்பப்பட்ட கடிதம்:



கோட்டை புகையிரத நிலையத்தின் முன்னால் இடம்பெற்ற மறியலின் ஒரு கட்டம்

த.வி.பு.தலைமைக்கு,

சோசலிச சமத்துவக் கட்சியின்(சோ.ச.க.) அங்கத்தவர்களை எந்தவிதமான நெருக்குவாரமும் இல்லாது விரைவில விடுதலை செய்யும்படி கோர இதை உங்களுக்கு எழுதுகின்றேன்.

நான் ஜப்பானின் தென் பகுதியின் குமாமோட்டோவில் வாழும் ஜப்பானிய தேசிய இனத்தவன். ஜப்பானில் உங்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே இடம்பெறும் மோதுதல் பெரிதும் பிரசித்திபெற்றது. தாம் சரியானவர்கள் எனவும் விடுதலைப் புலிகள் வெறும் பயங்கரவாதிகள் எனவும் அரசாங்கம் வெளியிட்ட அறிக்கைகளை பல ஜப்பானியர்கள் முன்னர் பெரிதும் நம்பிவந்தனர். ஆனால் இப்போது சரியானதும் தெளிவானதுமான தகவல்கள் எமக்குப் பெரிதும் கிடைப்பதோடு அரசாங்கம் சிங்கள மக்களின் பிரதிநிதியெனவும் உங்களைப் போன்ற தமிழ் மக்களை நசுக்குவதாகவும் அறிந்து கொண்டுள்ளோம். யதார்த்தத்தை புரிந்து கொண்டதன் பின்னர் பொதுமக்கள் பெரிதும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பையிட்டு .ஈர்க்கப்பட்டுள்ளனர். எவ்வாறெனினும் அது வன்முறை பயங்கரவாத, மனித உரிமைகளை நசுக்கும் எந்தவிதமான நடவடிக்கைக்கும் அனுதாபம் காட்டுவதை குறிக்காது.

பொதுமக்கள் நீங்கள் விரும்பியதை செய்ய இடமளித்து இருப்பதால் இத்தகைய நடவடிக்கைகள் குறுகிய காலத்தில் பயனளிக்கும் எனத் தோன்றக்கூடும். ஆனால் மக்கள் அப்படிச் செய்தாலும் அப்படிச் செய்வது அவர்கள் அவ்வாறு செய்வதை விரும்புவதால் அல்ல. அவர்கள் உங்களுக்கு அஞ்சுவதால் மட்டுமே அப்படிச் செய்கின்றார்கள். அவர்களின் இதயம் உங்களையிட்டு என்றும் கோபத்தினாலும் ஆத்திரத்தினாலும் நிறைந்து போயிருக்க வேண்டும். நேரடியாகத் தொடர்புபடாத போதிலும் பிரச்சினைகளையிட்டு ஆழமாகவும் விழிப்புடனும் உள்ள உலகம் பூராவும் உள்ள ஏனைய மக்கள் நீங்கள் செய்வதை தெரிந்து கொண்டு உங்களில் இருந்து பிரிந்து செல்லத் தொடங்குவர். உங்களுக்கு பொதுமக்கள் இல்லாது போவதோடு நீண்ட காலத்தில் நீங்கள் உங்களின் குறிக்கோளையும் இழந்து விடுவீர்கள்.

பயங்கரவாதத்துடன் மேலும் தொடர்பு கிடையாது என்பதை எமக்குக் காட்ட சோ.ச.க.அங்கத்தவர்களை விடுதலை செய்து, சகல வன்முறை நடவடிக்கைகளையும் கைவிடுங்கள். விடுதலைப் புலிகளின் தலைமை ஒரே விதமானது என நான் நினைக்கவில்லை. பயங்கரவாதமும் வன்முறையும் பயனற்றது எனவும் பிறருக்கு மனிதன் தீங்கு விளைவிக்கக் கூடாது எனவும் சிந்திக்கும் எவரும் அங்கு இருக்க முடியும். அநீதி செய்ய வேண்டாம் என ஏனையவர்களை வேண்ட உங்களுக்குத் தைரியம் இருக்கும் என நான் நம்புகின்றேன். உங்களது அமைப்பின் அடிப்படை நோக்கங்களை காட்டிக்கொடுத்த உயர் மட்டத்தில் உள்ள எவரையும் பின்பற்றுவதற்குப் பதிலாக நீங்கள் அனைவரும் உங்கள் மனச்சாட்சியை பின்பற்ற வேண்டும். ஒடுக்குமுறையாளனை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக வேறு விதத்தில் செயற்பட்டால் மனித உரிமைகளை மீறும் எந்த ஒரு நாட்டையும் எந்த ஒரு குற்றவாளியையும் பற்றி நீதி வழங்கும் உலக நீதிமன்றம் எமக்குக் கிடைத்ததும் எதிர்காலத்தில் நீங்கள் வழக்கு விசாரணைக்கு நிறுத்தப்படுவீர்கள்.

விடுதலைப் புலிகளாகிய நீங்கள் சோ.ச.க.அங்கத்தவர்களை சட்டவிரோதமாக தடுத்து வைத்துள்ளது பற்றி அவுஸ்திரேலிய நண்பர் ஒருவரிடம் இருந்து நான் அறிந்தேன். ஜப்பானைப் போலவே ஜேர்மனியிலும் இங்கிலாந்திலும் மலேசியாவிலும் ஹொங்கொங்கிலும் உள்ள எனது நண்பர்களுக்கு நான் இச்சம்பவம் பற்றி தெரிவிப்பேன். உலகம் இப்போது மிகவும் சிறியது. வன்முறையில் ஈடுபடாது நீங்கள் கூற உள்ளதை உலகின் எந்த ஒரு இடத்திலும் உள்ள மக்களுக்கு கூறுவதற்கு பல வழிகள் உண்டு. மக்கள் மூடர்கள் அல்லர். சரி எது பிழை எது என்பதை அவர்கள் அறிவர்.

நீதியானதை செய்யுங்கள். நாம் உங்களுக்கு செவிமடுக்கும் நிலைமையை உருவாக்குங்கள்.

உங்கள் உண்மையுள்ள,
டயிகோ மிட்சு மோட்டோ

## அவுஸ்திரேலியாவில் இருந்து கிடைத்த கடிதம்:

அனைத்துலக உதவிக்கான அவுஸ்திரேலிய கவுன்சில்
124, நேபியர் வீதி,
பிட்ஸ்ரோயி, விக்டோரியா 3065,
அவுஸ்திரேலியா.
1998ஆகஸ்ட் 6

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு,
மே/ பா. ஈழம் இல்லம்,
202, லோங் லேன்,
லண்டன் `8ஈ14
ஐக்கிய இராஜ்ஜியம்.

அன்பின் ஐயா, அம்மணி,

த.வி.பு.களால் கிளிநொச்சியில் இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் (சோ.ச.க.) அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டதையிட்டு ஆழ்ந்த வருத்தம் தெரிவிக்கும் பொருட்டு (அவுஸ்திரேலிய) சோசலிச சமத்துவக் கட்சி 1998 ஆகஸ்ட் 4ம் திகதி அனைத்துலக உதவிக்கான அவுஸ்திரேலிய கவுன்சிலைச் சந்தித்தது. அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சி கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை, அவர்களின் ஆளடையாளங்கள் அவர்களின் தற்போதைய நிலைமைகளையிட்டும் மேலதிக தகவல் திரட்ட முயற்சித்துக் கொண்டுள்ளது.

அ.உ.அ.க.அமைப்பு சுயாதீனமான முறையில் இந்த அறிக்கையை ஊர்ஜிதம் செய்து கொள்ள முடியாத போதிலும் இலங்கை சோ.ச.க. அங்கத்தவர்களைக் கைது செய்து கிளிநொச்சி பிராந்திய தலைவர் தீபன் த.வி.பு.பொலிஸ் அதிபரான பொட்டு அம்மானிடம் ஒப்படைத்துள்ளதாக அவுஸ்திரேலிய சோ.ச.க.நம்புகின்றது. கைது செய்யப்பட்ட சோ.ச.க. அங்கத்தவர்கள் பற்றி தீபன் உறவினர்களுக்கு கூறியுள்ளது அதுதான்.

இந்த அறிக்கையை உடன் பரிசீலனை செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள சோ.ச.க.அங்கத்தவர்களின் நலன்களை ஊர்ஜிதம் செய்யவும் அவர்களை உடனடியாக விடுதலை செய்யவும் இலங்கை விடுதலைப் புலிகளுடன் உங்களுக்குள்ள தொடர்பைப் பயன்படுத்துமாறு நான் உங்களை வேண்டுகின்றேன். நீங்கள் எடுக்கும் நடவடிக்கை பற்றியும் தடுத்து வைக்கப்பட்டுள்ள சோ.ச.க. அங்கத்தவர்களின் நிலைமையைப் பற்றியும் தகவல்களை வழங்கின் நான் நன்றியுடையவனாவேன். எனது பக்ஸ், ஈ.மெயில் முகவரிகள் மேலே தரப்பட்டுள்ளன.

உங்கள் உண்மையுள்ள,
ஜோன் பூல்,
இலங்கை நிகழ்ச்சித்திட்டம்
அனைத்துலக உதவிக்கான அவுஸ்திரேலிய கவுன்சில், மெல்பேர்ண்,
அவுஸ்திரேலியா.

## சோ.ச.க. பொதுச் செயலாளர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ...

11ம் பக்கத் தொடர்ச்சி,

கிடைப்பதோடு அரசாங்கம் சிங்கள மக்களின் பிரதிநிதியெனவும் உங்களைப் போன்ற தமிழ் மக்களை நசுக்குவதாகவும் அறிந்து கொண்டுள்ளோம். யதார்த்தத்தைப் புரிந்து கொண்டதன் பின்னர் பொதுமக்கள் பெரிதும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பையிட்டு ஈர்க்கப்பட்டு உள்ளார்கள். எவ்வாறெனினும் வன்முறை பயங்கரவாதம், மனித உரிமைகளை நசுக்கும் எந்தவிதமான நடவடிக்கைக்கும் அனுதாபம் காட்டுவதை அது குறிக்காது.

பொதுமக்கள் நீங்கள் வேண்டியதை செய்ய இடமளித்து இருப்பதால் இத்தகைய நடவடிக்கைகள் குறுகிய காலத்தில் பலனளிக்கும் எனத் தோன்றக் கூடும். ஆனால் மக்கள் அப்படிச் செய்தாலும் அங்ஙனம் செய்வது, அவர்கள் அவ்வாறு செய்வதை விரும்புவதால் அல்ல. அவர்கள் உங்களுக்கு அஞ்சுவதால் மட்டுமே அப்படிச் செய்கின்றார்கள். அவர்களின் இதயம் உங்களையிட்டு என்றும் கோபத்தினாலும் ஆத்திரத்தினாலும் நிறைந்து போயிருக்கின்றது. நேரடியாகத் தொடர்பு படாத போதிலும் பிரச்சினைகளையிட்டு ஆழமாகவும் விழிப்புடனும் உள்ள உலகம் பூராவும் உள்ள ஏனைய மக்கள் நீங்கள் செய்வதைத் தெரிந்து கொண்டு உங்களில் இருந்து விலகிச் செல்லத் தொடங்குவர். உங்களுக்கு பொதுமக்கள் இல்லாது போவதொடு நீண்ட காலத்தில் நீங்கள் உங்களின் இலக்கையும் இழந்து விடுவீர்கள்."

இன்னமும் ஒரு மார்க்சிஸ்ட் ஆகிவிடாத போதிலும் ஜனநாயக உரிமைகளையிட்டு அக்கறை கொண்டதும் உலக பொதுஜன அபிப்பராயத்தின் கணிசமான தரப்பினரின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்ற இந்த அறிக்கை உங்களுக்கு ஒரு எச்சரிக்கையாகும். தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காத்ததன் காரணமாக எமது அங்கத்தவர்கள் பலர் இலங்கை அரசின் வேட்டைக்கு இலக்காகிய பல சந்தர்ப்பங்கள் உள்ளன. அத்தோடு இந்த விடயத்தில் உலக பொதுஜன அபிப்பராயத்தை அணிதிரட்டுவதை நாம் எமது மூன்று அங்கத்தவர்களும் எந்தவிதமான கெடுதியும் இல்லாமல் விடுதலை செய்யப்படும் வரை நிறுத்தமாட்டோம் என்பதை உறுதியாக கூறிவைக்கின்றோம்.

இலங்கையிலும் அவ்வாறே உலகம் பூராவும் உள்ள பொதுஜனத் தொடர்புச் சாதனங்கள் எழுது பத்திரிகை அறிக்கைக்கும் எமது அனைத்துலக இயக்கத்தின் தலைவர்களுடன் நடாத்திய பேட்டிகளுக்கும் பரந்த அளவிலான பிரச்சாரம் வழங்கியுள்ளன் என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆதலால் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோ.ச.க.வின் மூன்று அங்கத்தவர்களையும் உடன் விடுதலை செய்யும்படி நாம் மீண்டும் வேண்டுகின்றோம்.

இப்படிக்கு,
உண்மையுள்ள,
விஜே டயஸ்,
பொதுச் செயலாளர்,
சோ.ச.க.(இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டப்புற இளைஞர்களை விடுதலை செய்யும் பிரச்சாரம்

தோட்டப்புறத்தில் அட்டன் பகுதியில் இருந்து கைது செய்யப்பட்ட சோசலிச சமத்துவக் கட்சி ஆதரவாளர் சுப்பு உதயகுமார் உட்பட்ட இளைஞர்கள் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக பயங்கரவாதத் தடை பிரிவில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் சோசலிச சமத்துவக் கட்சியும் இந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் முகமாக அனைத்துலக ரீதியில் பிரச்சாரத்தைத் தொடுத்துள்ள இந்த இயக்கத்துக்கு ஆதரவு காட்டி அவுஸ்திரேலியா, வடஅமெரிக்காவில் இருந்தும் கடிதங்கள் கிடைத்துள்ளன.

அட்டனுக்கு அருகேயுள்ள செனன் தோட்ட தேயிலை பக்டரி பயங்கரவாதிகளின் குண்டுத்தாக்குதலுக்கு இலக்கானதைத் தொடர்ந்து தோட்ட தொழிலாளர்களுக்கும் சிறப்பாக இளைஞர்களுக்கு எதிரான அரச அடக்குமுறை கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட இளைஞர்களை இந்தக் குண்டிவெடிப்புடன் தொடர்புபடுத்த பொலிசார் முயற்சிக்கின்றனர்... கைதாகியுள்ள பல இளைஞர்கள் பொதுஜன முன்னணி அரசாங்கம் பதவியேற்ற சில மாதங்களுக்குள் விடுதலைப் புலி சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்டு, எந்தவிதமான் குறறச்சாட்டும் சுமத்தப்படாது, இரண்டு வருடங்களாக சிறையில் வைக்கப்பட்டிருந்ததோடு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் (சோ.ச.க) முன்னெடுத்த பிரச்சாரத்தின் பெறுபேறாக விடுதலை செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



தொழில், சம்பளம், சமூக வசதிகள, ஜனநாயக உரிமைகள் வெட்டை எதிர்த்து இடம்பெறும் போராட்டங்களை குண்டு புரளிகளை பரப்பி நசுக்க அரசு முயற்சிக்கின்றது

இவர்களை விடுதலை செய்யும் பிரச்சாரத்தின் ஒரு பாகமாக கையெழுத்து சேகரிக்கும் இயக்கத்துக்கு தொழிலாளர்களும் இளைஞர்களும் உத்சாகத்துடன் ஆதரவு காட்டி வருகின்றார்கள். இந்த இளைஞர்களுக்கு எதிரான சித்திரவதைகளை நிறுத்தும்படியும் இவர்களை தடுப்புக்காவலில் இருந்து உடன் விடுதலை செய்யும்படியும் நெருக்கும் கடிதங்களை அனுப்புமாறு நாம் தொழிலாளர் . ஒடுக்கப்படும் மக்களை வேண்டுகின்றோம். அக்கடிதத்தின் ஒரு பிரதியை எமக்கு அனுப்பிவைக்குமாறும் வேண்டுகின்றோம். தங்களின் எதிர்ப்புக் கடிதங்களைக் கீழ்க் காணும் முகவரிகளுக்கு அனுப்பிவைக்கவும்.

1. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, 15/5 , பாலதக்ச மாவத்த, கொழும்பு-3.

2. சட்ட மா அதிபர், சட்ட மா அதிபர் திணைக்களம், கொழும்பு 12.

3. பொலிஸ் மா அதிபர், பொலிஸ் தலைமைக் காரியாலயம், கொழும்பு.1.

எமது முகவரி:
சோசலிச சமத்துவக் கட்சி,
90,1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு.10.

# அனைத்துலக தொழிலாளர் பாதுகாப்பு குழு அனுப்பிய கடிதம்

1998 யூன் 28

பாதுகாப்பு செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு,
15/5 பாலதக்ச மாவத்த,
கொழும்பு.3.
இலங்கை.

மதிப்புக்குரிய ஐயா,

யூன் 1ம் திகதி செனன் தோட்டத் தொழிற்சாலைக் குண்டுவெடிப்பு தாக்குதலுக்கு உள்ளானது தொடர்பாக, பொய்க் குற்றச்சாட்டின் பேரில் அட்டன் பகுதி தமிழ்த் தோட்டத் தொழிலாளர், வேலையற்ற இளைஞர்கள் எட்டுப்பேர் அண்மையில் கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டமைக்கு பலத்த எதிர்ப்பைத் தெரிவிக்கவே நான் இக்கடித்ததை எழுதுகின்றேன்.

இந்த எட்டுப்பேரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளரென அதிகாரிகளால் குற்றம்சாட்டப்பட்டுள்ளனர். சனநாயக உரிமைகளுக்கு எதிரான இந்தத் தாக்குதலை அவுஸ்திரேலியாவிலும் அனைத்துலகிலும் உள்ள தொழிலாளர் வர்க்கத்தினுள் பகிரங்கப்படுத்துவது எமது நோக்கமாகுமென உங்களுக்கு உறுதியாகக் கூறுகின்றேன்.

இலங்கையின் சோசலிச சமத்துவக் கட்சி ஆதரவாளரும் கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் வேட்பாளருமான உதயகுமார் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு உள்ளவர்களிடையே இருந்துவருகின்றார். சோ.ச.க.வுக்கு விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதத் தேசியவாதத்துடன் எந்த ஒரு ஒருமைப்பாடும் கிடையாதது மட்டுமல்ல அது தொழிலாளர் வர்க்கத்தினுள் பரந்த சோசலிச இயக்கத்தின் அபிவிருத்திக்கு பெரும் எதிர்விளைவுகளையும் ஏற்படுத்தும். ஆதலால் தனிநபர் பயங்கரவாதத்துக்கு சோ.ச.க.எதிரானது என்பது வெகு பிரசித்தமானது.

தொழிலாளர்களின் உயிர்களுக்கும் வாழ்க்கைக்கும் ஆபத்தை உருவாக்கும் எந்தவொரு சம்பவத்திலும் சோ.ச.க. வோ அல்லது அதன் ஆதரவாளரோ கலந்து கொண்டிருப்பார்கள் என்பதை சற்று நினைத்தும் கூடப் பார்க்க முடியாது. கைது செய்யப்பட்டவர்கள் அக்குற்றத்தை செய்தனர் என்பதை நிரூபிக்க எந்த ஒரு சாட்சியும் இல்லாது போனதால் முன்னர் 1994-96 காலப்பகுதியில் தடுப்புக்காவலில் இருந்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் கடந்த ஏப்பிரல் மாதத்தில் இடம்பெற்ற 6இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் கலந்து கொண்ட தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட அட்டன்-மஸ்கேலிய பகுதியில் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தவர்கள்.

பொதுஜன முன்னணி அரசாங்கமும் அதன் முன்னோடிகளும் கொண்டு நடாத்திய இந்த அடக்குமுறை நடவடிக்கைகளால் இத்தொழிலாளர் ஆத்திரம் அடைந்துள்ளனர். 1996ல் இராணுவத்தால் 400க்கு மேற்பட்ட தமிழர்கள் கொலை செய்யப்பட்டது அம்பலப்படுத்தப்பட்டதை நாம் அறிவோம்.

சகல குற்றச்சாட்டுகளையும் நீக்குமாறும் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யுமாறும் நாம் கோருகின்றோம். சோ.ச.க.தொழிற்பாட்டுக்கு எதிரான சகல தலையீடுகளையும் நீங்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் நாம் மேலும் வேண்டுகின்றோம். அனைத்துலகத் தொழிலாளர் பாதுகாப்புக் குழுவானது இலங்கையின் சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யும்படியும் அழைப்புவிடுக்கின்றது.

இங்ஙனம்,
டெரி குக்,
அனைத்துலக தொழிலாளர் பாதுகாப்புக் குழு,

பிரதி: 1. சட்டமா அதிபர்,
2. பொலிஸ் மா அதிபர்.

# வட-அமெரிக்கா-கலிபோர்னியாவிலிருந்து கிடைத்த கடிதம்:

சிறீலங்கா அரச அதிகாரிகளுக்கு ,
பிரதம செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு, சிறீலங்கா,
சட்டமா அதிபர், சிறீலங்கா,
பொலிஸ்மா அதிபர், சிறீலங்கா.

நான் வியட்நாம் யுத்தத்தில் ஈடுபட்டு அனுபவம் கொண்ட ஒருவன் என்ற வகையில் முதலாளித்துவ மக்கட் கொலைகள் பற்றி நன்கறிந்தவன். பொய்வழக்கு தொடுப்பு பற்றி நன்கு அனுபவம் மிக்கவன். பார்த்த மாத்திரத்தில் அது எத்தகையது என அனுமானிக்கவல்லவன். அட்டன் நகரில் அண்மையில் சோசலிச சமத்துவக் கட்சி ஆதரவாளரான உதயகுமார் உட்பட்ட அரசியல் கைதிகள் எட்டுப்பேர் கைது செய்து சிறைப்படுத்தப்பட்டு உள்ளமை குறித்து நான் பலத்த கண்டனம் தெரிவிக்கின்றேன். அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என நான் நிர்ப்பந்திக்கின்றேன்.

இந்த இளைஞர்கள் 1994ல் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என்ற பொய்க் குற்றச்சாட்டின் பேரில் இரண்டு ஆண்டுகள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருந்தவர்கள். அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு எந்த ஒரு சாட்சியத்தையும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் பொலிசாரும் முன்வைக்கத் தவறியதால் விடுதலை செய்யப்பட்டவர்கள். தற்போது செனன் தோட்டத் தேயிலை தொழிற்சாலைக்கு குண்டுவைக்க முயன்றனர் என்ற சோடிப்பு குற்றச்சாட்டின் பேரில் மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எமக்குக் கிடைத்துள்ள நம்பகரமான தகவல்களின்படி குண்டு வெடிப்புக்கு உள்ளான இத்தொழிற்சாலையின் தலைமை டீமேக்கர் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் கதவினூடாக உள்ளே நுழைந்தவர்களும் பின் ஓடிச் சென்றவர்களுமான சந்தேக நபர்கள் சிங்களத்தில் சரளமாகப் பேசிக்கொண்டதாகக் கூறியுள்ளார் எனத் தெரிகின்றது. எனினும் இது தொடர்பாக கைது செய்யப்பட்ட சகலரும் [illegible] இளம் தொழிலாளரும் [illegible] இளைஞர்களுமே ஆவர். இந்தக் குண்டு வெடிப்புக்கு விடுதலைப் புலிகள் பொறுப்பாகும் எனக் கூறப்படுவதால் உங்களது அதிகாரிகள் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பானவர்கள் என நிலைநாட்ட முயற்சிக்கின்றனர்.

உதயகுமாரும் ஏனைய இளைஞ்ர்களும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவர்கள் அல்லர். விடுதலைப் புலிகளுக்கும் பொதுவில் பயங்கரவாதத்துக்கும் எதிரான நீண்டகால போராட்ட வரலாறு கொண்ட சோசலிச சமத்துவக் கட்சியின் ஆதரவாளர்களாவர். சோசலிச சமத்துவக் கட்சியானது அனைத்துலக சோசலிசத்துக்காக எப்போதும் முன்நிற்பதால் வரலாற்று ரீதியான மோதுதல்களைத் தீர்க்க பொது மக்களது ஜனநாயக இயக்கத்தில் உறுதியான நம்பிக்கையை எப்போதும் கொண்டியங்கிய ஒன்றாகும்.

உங்களது அரசாங்கமும் பொலிஸ் குண்டர்களும் சோ.ச.க.வையும் அதன் ஆதரவாளர்களையும் வேட்டையாடுவது முதலாளித்துவத் தேசிய அரசு இலாயக்கற்றது என்பதையும் அடக்குமுறையூடாக அதனை ஸ்திரப்படுத்த நீங்கள் என்னதான் முயன்றாலும் அது தகர்ந்து கொட்டுவது உண்மையே. நீங்கள் பீதியடைந்துள்ளதற்கான உண்மைக் காரணம் அதுவே. அத்தோடு நெருங்கி வரும் பொருளாதார வீழ்ச்சியினால் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு எதிராக எழுச்சிகண்டுவரும் விவசாயிகளும் தோட்டத் தொழிலாளர்களும் கிளர்ந்து எழுவது நிசசயம் என்றே நீங்கள் கலங்கியுள்ளீர்கள். சோ.ச.க.வையும் அதன் ஆதரவாளர்களையும் வேட்டையாட நீங்கள் முயற்சிப்பதற்கும் முன்னர் முயற்சித்ததற்கும் நான் எதிர்ப்புத் தெரிவிக்கின்றேன். உதயகுமாரையும் தடுப்புக்காவலில் உள்ள ஏனைய ஏழு பேரையும் கைது செய்யப்பட்டுள்ள சகல அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்யும்படி கோருகின்றேன்.

நம்பிக்கையுடன்,
பொப் லூவிஸ், கலிபோர்ணியா சென்குரூஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மார்பு நோயாளிகள் சிகிச்சை நிலையத்துக்கு மூடுவிழா?

கொழும்பு டீன்ஸ் வீதியில் சுகாதார அமைச்சின் கீழ்மாடியில் இயங்கி வந்த மார்பு நோயாளிகள் (காசநோய்) சிகிச்சை நிலையத்தை மூடுவதற்கு பொதுஜன முன்னணி அரசாங்கம் எடுத்துள்ள முடிவை சுகாதார சேவையாளர் நடவடிக்கைக் குழுவும், ஐக்கிய சுகாதார ஊழியர் சங்கமும் வன்மையாகக் கண்டனம் செய்கின்றன. ஜூன் 26ம் திகதி மார்பு நோயாளர் சிகிச்சை நிலையத்தின் ஊழியர்களின் பலத்த எதிர்ப்புக் காரணமாக வெலிசறை மார்பு நோயாளர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு இருந்த எக்ஸ்ரே இயந்திரத்தை மீண்டும் கொழும்பு சிகிச்சை நிலையத்துக்கு கொணரவும் சகல வசதிகளுடனும் மார்பு நோயாளிகள் சிகிச்சை நிலையத்தை தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் நலன்களின் பேரில் இயங்கச் செய்ய வேண்டும் எனவும் மார்பு நோயாளிகள் சிகிச்சை நிலைய ஊழியர் நடாத்தும் பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவு வழங்கும் இந்த அமைப்பு கொழும்பிலும் அயல் மாவட்டங்களிலும் உள்ள சுகாதார ஊழியர்களும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களும் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றது. முதலாளித்துவ ஆளும் வர்க்கம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகத் தொடுத்துவரும் தாக்குதல்களையிட்டு அவர்களிடையே விழிப்புணர்ச்சியை உருவாக்குவதோடு சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தமது போராட்டத்தை அணிதிரட்டவும் வேண்டும். இன்றைய நெருக்கடியில் இருந்து தலையெடுப்பதற்கான ஒரே மார்க்கம் அதுவே.

மார்பு நோயாளர் சிகிச்சை நிலைய ஊழியர்கள் கூறுவதன்படி இந்த சிகிச்சை நிலையம் கடந்த 80 ஆண்டுகளாக இயங்கி வந்துள்ளது. உலகிலும் இலங்கையிலும் காச நோய் பரந்த அளவில் பரவி வரும் ஒரு நிலையில் இந்தச் சிகிச்சை நிலையத்தை இழுத்து மூட முடிவு செய்ததன் மூலம் பொதுஜன முன்னணி அரசாங்கமும் ஆளும் வர்க்கமும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் சுகாதார நிலைமை பற்றிக் கொண்டுள்ள மனோபாவத்தை காட்டிக் கொண்டுள்ளது. இப்போது கொழும்பு மாநகர சபையின் ஆட்சிப்பீடத்தில் உள்ள யூ.என்.பி.முதலாளிகள் இத்தாக்குதலையிட்டு முழு மௌனம் சாதிக்கின்றனர்.

இந்த நிலையத்தில் தினமும் காசநோய்க்குச் சிகிச்சை பெறவும் பரிசோதனைக்கும், வைத்திய அறிக்கைகளுக்கும் சுமார் 250 பேர் வருகின்றார்கள். ஆனால் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் சுகாதார அமைச்சர் இந்த நிலையத்தில் ஒரு நாளுக்கு 20 3க்கு மேலாகச் சிகிச்சை பெறுவதில்லை எனக் கூறிக்கொள்கின்றார். இது முதலாளித்துவ அமைச்சர்களுக்கு வழக்கமாகிப் போய்விட்ட ஒரு பொய்யாகும். நாம் கீழே காட்டியுள்ள புள்ளிவிபரங்களின்படி ஒரு ஆண்டுகளு ஆயிரக்கணக்கான நோயாளிகள் இந்நிலையத்தில் சிகிச்சை பெறுகின்றார்கள். கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் இருந்து மட்டும் நாளொன்றுக்கு சுமார் 20 பேர் காசநோயாளிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இந்த நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

அரசாங்கம் இந்த சிகிச்சை நிலையத்தை இழுத்து மூடத் தயாராகி வரும் அதே சமயத்தில் கொழும்பு மாவட்டத்தில் இருந்து மட்டும் கிடைக்கும் தரவுகளின்படி காசநோயாளர்களின் எண்ணிகை இலங்கையில் இருந்து அறிவிக்கப்படும் எண்ணிக்கையில் 1.3.வீதமாகும். இதைவிடக் கூடிய எண்ணிக்கையிலானோர் பாரிய கொழும்பு பகுதியில் இருந்தே வருகின்றனர். இதன் மூலம் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் தலைநகரில் சமூக சமத்துவமின்மையின் பரம்பலுடன் எந்தளவுக்கு மக்கள் காச நோயால் பீடிக்கப்படும் தரித்திர நிலைக்குள் தள்ளப்படுகின்றார்கள் என்பது தெரிகின்றது. இன்று பொதுஜன முன்னணி அரசாங்கமும் ஆளும் வர்க்கமும் இந்த நோயாளிகளை புதைகுழிக்குள் தள்ள முயற்சிக்கின்றது.

எயிட்ஸ் போன்று காசநோய் நிலைமையை மேலும்மேலும் அபிவிருத்தி காணச் செய்து நோய் பரவி வரும் ஒரு நிலையில் காச நோய்க்குத் தரப்படும் தடைமருந்துக்கு நோய்க்கிருமி தாக்கிப்பிடித்து நின்று வரும் நிலைமையில் காச நோயாளிகளைக் கண்காணிப்பில் வைத்து சிகிச்சையளிப்பது அவசியமாகியுள்ளது. இது உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிபார்சாகும். ஆனால் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் கீழ் அத்தகைய ஒன்றை எதிர்பார்க்க முடியாது. இதற்கு மார்பு நோயாளர் சிகிச்சை நிலைய மூடுவிழா நல்ல எடுத்துக்காட்டு.

அரசாங்கம் இந்த மார்பு நோயாளர் சிகிச்சை நிலையத்தை இழுத்து மூடுவதை அதற்கு அருகில் உள்ள சுகாதார விநியோக பிரிவுக்கு பாதுகாப்பு வழங்கும் ஒரு ஏற்பாடாகக் காட்டிக் கொள்கின்றது. இது பொய்யாகும். உண்மையில் இது சுகாதார விநியோகங்கள் பிரிவுக்கு பாதுகாப்பு வழங்க எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை அல்ல. அரசாங்கம் சகல இடங்களிலும் செய்வது போல் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக பாதுகாப்பையும் இனவாத யுத்தத்தையும் குறுக்கே நிறுத்தி பொதுமக்களின் அவசியங்களைத் தாக்கி வருகின்றது.

அத்தோடு இந்த மார்பு நோயாளர் சிகிச்சை நிலையம் வெலிசறைக்கு கொண்டு செல்லப்படுகின்றது என்பதும் பொய்யாகும். உண்மையில் இடம் பெறப்போவது என்ன? இந்தக் கொழும்பு மார்பு நோயாளர் சிகிச்சை நிலையம் இழுத்து மூடப்படுகின்றது. இதன் இயந்திரங்களும் பொருட்களும் ஊழியர்களும் வெலிசறை காச நோயாளர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். இது கொழும்பு மாவட்ட காச நோயாளிகளுக்கும் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரி மூலம் வைத்திய அறிக்கை பெறுபவர்களுக்கும் காச நோய் பரிசோதனைக்கு உள்ளாகும் நாடுபூராவும் உள்ளவர்களுக்கும் இழைக்கப்பட்ட பெரும் அநீதியாகும்.

இது அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் கூறிக்கொள்வது போல் சுகாதார அமைச்சரினதும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளதும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களால் மட்டும் ஏற்பட்டது அல்ல. இதற்கு முக்கிய காரணம் பொதுமக்கள் சிகிச்சை பெற இருந்துவரும் இத்தகைய நிலையங்களை இழுத்து மூடுவதன் மூலம் இலவச சுகாதார சேவையை இலாபம் கறக்கும் ஒரு இயக்கமாக்கும் திட்டத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கம் சேர்ந்து கொண்டு உள்ளதேயாகும். கடந்த வரவு செலவுத்திட்டத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கம் குறிப்பிட்டது போல் சுகாதார சேவைக்கான செலவுகளை இதற்கு முன்னைய வருடத்தின் செலவு மட்டத்தில் பராமரிக்கும் ஒரு நிலையில் இன்று குறைபாடுகளுடன் இயங்கும் சுகாதார நிலையங்களைத் தன்னும் கொண்டு நடாத்த முடியாது. இந்த மூடுவிழாக்கள் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஏகாதிபத்திய முதலாளிகளின் வேண்டுகோளின் பேரிலேயே இடம்பெறுகின்றது. முதலாளித்துவம் முகம் கொடுக்கும் உலக நெருக்கடி, தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளின் மீது அழிவுகளைத் திணிக்கும். முதலாளிகளின் இலாப வீத வீழ்ச்சிகாணும் நிலையில் சேமநலன் சேவைகளின் பேரில் இலாபத்தில் இருந்து ஒதுக்கி வந்த அற்பசொற்பங்களையும் தமது இலாப மூட்டைக்குள் போட்டுவிட அவர்கள் துடிக்கின்றார்கள்.

இந்நிலைமையினுள் மார்பு நோய் சிசிச்சை நிலையம் உட்பட்ட இலவச சுகாதார சேவையைப் பாதுகாப்பது இலங்கையிலும் உலகம் பூராவும் இலாபம் கறக்கும் முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டம் மூலமே சாத்தியமாகும். அத்தகைய போராட்டத்தை சோசலிச முன்நோக்கினதும் வேலைத் திட்டத்தினதும் அடிப்படையில் அணிதிரட்ட வேண்டும்.

**கொழும்பு சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெறுவோர் (ஜனவரி-ஜூன்)**

| | 1996 | 1997 | 1998 |
|---|---|---|---|
| 1. புதிய காச நோயாளர் | 1430 | 1736 | 875 |
| 2. இரண்டாம் தடவை வருகை | 6352 | 6458 | 2269 |
| 3. முதல் வருகை (வேறு நோயாளர்) | 25142 | 22400 | 6570 |
| 4. இரண்டாம் தடவை வருகை (வேறு நோயாளர்) | 13826 | 34348 | 2964 |

*வவுனியா*

## எரிபொருள் பங்கீட்டு முறைக்கு எதிர்ப்பு

ஆகஸ்ட் நடுப்பகுதியில் இருந்து வவுனியா நகரத்தில் பொதுமக்களின் வாழ்க்கை ஹர்த்தாலினால் ஸ்தம்பித்துப் போயிற்று. இராணுவத்தினால் புதிதாக திணிக்கப்பட்டுள்ள எரிபொருள் பங்கீட்டு முறையை எதிர்த்தே இந்தக்ஹர்த்தால் ஆரம்பமாகியது. இராணுவத்தினர் இந்த பங்கீட்டுமுறையை "புலிகளின் கைக்கு எரிபொருள் செல்வதைத் தடுக்கும்" பேரில் திணித்துள்ளனர்.

வவுனியாவில் கடைகள் இந்தக் ஹர்த்தாலுக்கு ஆதரவாக மூடப்பட்டன. புளொட் அமைப்பினால் இந்தக் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் ஏனைய தமிழ் அமைப்புக்களும் இதற்கு ஆதரவு வழங்கின. எதிர்ப்பு இயக்கத்துக்கு இந்த அமைப்புக்கள் அழைப்பு விடுத்திருந்த போதிலும் தமிழ்ப் பொது மக்களிடையே இந்த பங்கீட்டு முறைக்கு பெரும் எதிர்ப்பும் கசப்பும் வளர்ச்சி கண்டது. வவுனியாவுக்கு வெளியே தமிழ் மக்கள் வாழும் பகுதிகளுக்கு ஒரு தொகை பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவது நீண்டகாலமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது தெரிந்ததே. எரிபொருளும் அதில் ஒன்றாகும். இந்நிலையில இந்த எரிபொருள் பங்கீட்டு முறை அவர்கள் மீதான ஒரு பெரும் சுமையைத் திணிப்பதாக இருந்து கொண்டுள்ளது.

தமிழ் மக்கள் தமது எரிபொருள் பங்கீட்டுக்கான அனுமதியைத் தேடி பொலிஸ் இராணுவ நிலையங்களுக்கு அலையும் பிரச்சினை இதனால் ஏற்பட்டுள்ளது. வவுனியாவுக்கு தெற்கேயும் வடக்கேயும் பயணம் செய்பவர்களின் கியூக்களுக்கு மேலதிகமாக இந்த எரிபொருள் பங்கீட்டு முறைக் கியூவும் சேர்ந்து கொண்டுள்ளது. "இது பல்வேறு காரணங்களுக்கும் இலஞ்சம் பெறும் நானாவித பிரிவினருக்கு மற்றுமொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது" என ஒரு தமிழ் அமைப்பின் பேச்சாளர் கூறியுள்ளார்.

ஹர்த்தால் நாட்களில் மூடப்பட்டிருந்த கடைகளை திறக்க இராணுவத்தினர் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. இந்த மாவட்ட "சமாதானக் கமிட்டியின்" தலைவரான பிக்கு இந்தத் தடையை அகற்றுவது தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவதாக கூறியதைத் தொடர்ந்து இந்த எதிர்ப்பு இயக்கம் கைவிடப்பட்டுள்ளது.

*அட்டன் -பென்மூர் தோட்டம்*

## அக்டோபர் புரட்சி விரிவுரையும் திரைப்படக் காட்சியும்

சோசலிச சமத்துவக் கட்சியும் இளம் சோசலிஸ்டுகள் இயக்கமும் கடந்த ஜூனில் அட்டன் பென்மூர் தோட்டப் பாடசாலையில் அக்டோபர் புரட்சி தொடர்பான ஒரு விரிவுரையை நடாத்தியது. அதைத் தொடர்ந்து அக்டோபர் புரட்சியைத் சித்தரிக்கும் ஒரு திரைப்படக் காட்சியும் இடம்பெற்றது. இதில் சுமார் 50 தமிழ் தொழிலாளர்களும் இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

தொழிலாளர்களின் விடுதலைக்கு வழியே கிடையாது என்ற பிற்போக்கு தொழிற்சங்கவாதிகளதும் இடதுசாரிகள் எனக் கூறிக்கொள்ளும் குட்டி முதலாளித்துவக் குழுக்களதும் நச்சுத்தன்மான பிரச்சாரத்துக்கு ஒரு தலையடியாக இந்த விரிவுரையும் திரைப்படக் காட்சியும் அமைந்திருந்தன. தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடையே மார்க்சிச கலாச்சாரத்துக்கு புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கையின் ஒரு பாகமாக சோசலிச சமத்துவக் கட்சியின் இந்த ஏற்பாடுகள் விளங்கின.

இந்த திரைப்படக் காட்சி, விரிவுரை சம்பந்தமாக தொழிலாளர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் சோசலிச சமத்துவக் கட்சி வெற்றி கண்டது. பிரச்சார இயக்கத்தின் போது தொழிலாளர்களும் இளைஞர்களும் தொழிலாளர் பாதையை விலைக்கு வாங்குவதன் மூலம் தமது ஆதரவை வழங்கினர். அத்தோடு உதவிநிதியாக ரூபா.450ம் சேகரிக்கப்பட்டது.

அக்டோபர் புரட்சி விரிவுரையை சோ.ச.க.மத்திய குழு உறுப்பினர் எம்.அரவிந்தன் நிகழ்த்தினார். இக்கூட்டம் தோழர்.ரூபன் சமிந்த தலைமையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*அனைத்துலகச் சந்தையில் பிரமாண்டமான குழப்பநிலை*

# உலகப் பொருளாதாரத்தில் மாபெரும் மாற்றம்

ரூஷ்யாவில் இடம்பெற்றுள்ள பொருளாதார வீழ்ச்சியை மாபெரும் வரலாற்றின் திருவிளையாட்டாகக் கொள்ள வேண்டும். இந்த தசாப்தத்தின் ஆரம்பத்தில் ரூஷ்யாவில் முதலாளித்துவம் புனருத்தாரணம் செய்யப்பட்ட போது அது சந்தையின் இறுதி மாபெரும் வெற்றியாகவும் உலக முதலாளித்துவத்தின் புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைத்துள்ளதாகவும் தலைமேல் வைத்துக் கொண்டாடப்பட்டது. ஏழு ஆண்டுகள் கடந்ததுதான் தாமதம் உலக முதலாளித்துவப் பொருளாதாரம் 1929ம் ஆண்டுகளின் பரிமாணத்தைவிட மோசமான பூகோள ரீதியான வீழ்ச்சியின் விளிம்பில் நின்று கொண்டுள்ளது.

ரூஷ்ய பொருளாதாரம் உருகிப் போனமையும் ஆசியாவின் ஆழமான நெருக்கடியும் உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தப் போகும் தாக்கங்களையிட்டு உலகச் சந்தையில் பெரும் பதட்டம் நிலவுகின்றது. அமெரிக்க பங்கு முதல் சந்தை வோல் ஸ்ரீட் 357 புள்ளிகளால் அல்லது 4.1 வீதத்தினால் வீழ்ச்சி கண்டது. இது வரலாற்றில் இடம்பெற்ற மூன்றாவது பெரும் வீழ்ச்சியாகும். லண்டன் பங்கு முதல் சந்தையின் புள்ளிகள் 177 புள்ளிகள் அல்லது 3வீதத்துக்கும் கூடுதலாக வீழ்ச்சி கண்டன. ஜேர்மன், பாரிஸ் பங்குச் சந்தை புள்ளிகள் முறையே 200, 167 புள்ளிகளால் வீழ்ச்சி கண்டுள்ளன.

இதற்குக் குறையாத வகையில் கிழக்கு ஐரோப்பிய சந்தைகளும் வீழ்ச்சிகண்டன. ஹங்கேரி பங்குச் சந்தை 12 வீதத்தினாலும் போலந்து 6வீதத்தினாலும் செக் குடியரசு 5 வீதத்தினாலும் வீழ்ச்சி கண்டன. ஆகஸ்ட் இறுதி வாரத்திலான வீழ்ச்சிகள் இருந்துவரும் போக்கினது ஒரு பாகமாகும். கடந்த ஜூலையில் லண்டன் பங்குகள் 10வீதத்தினாலும் ஜேர்மன் டக்ஸ் புள்ளிகள் 15 வீதத்தினாலும் ஐரோப்பிய சந்தை புள்ளிகள் 13 வீதத்தினாலும் வீழ்ச்சிகண்டுள்ளன.


ரூஷ்யாவின் பிரதான பங்குமுதல் சந்தை 14.8 வீதத்தினால் வீழ்ச்சி கண்டது ஒரு வருடத்துக்கு முன்னர் "ரூஷ்யா உலக சந்தையில் நல்ல காட்சியைக் கொண்டுள்ளதாக" புகழப்பட்டது. அப்போது ஆர்.ரீ.எஸ்.புள்ளி 570 ஆக விளங்கியது.

இந்த சந்தை குழப்பநிலை உலக முதலாளித்துவத்தின் சாதாரண ஒரு குழப்பநிலையைக் காட்டும் தரவுகள் அல்ல. மாறாக சந்தைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி உலகப் பொருளாதாரத்தில் மாபெரும் விதத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை எடுத்துக்காட்டிக் கொண்டுள்ளன.

கடைசியாகக் கிடைத்துள்ள கணிப்புக்களின்படி அனைத்துலக வங்கிகள் ரூஷ்யாவிலான முதலீடுகள் மீது 50 பில்லியன் டாலர்கள் நஷ்டம் அடைந்துள்ளன. அனைத்துலக நிதியீட்டாளரான ஜோர்ஜ் சோரோஸ் தாம் 2 பில்லியன் டாலர்களை இழந்துள்ளதாகக் கூறியுள்ளார். இந்த வீழ்ச்சியினால் கடுமையாகத் தாக்கப்பட்டவற்றில் ஜேர்மன் வங்கிகளதும் நிதி நிறுவனங்களதும் 30 பில்லியன் டாலர்களும் அடங்கும்.

அமெரிகக வங்கிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. த றிபப்ளிக் நியூயோர்க் கோர்ப்பரேசன் அறிக்கையின்படி ரூஷ்ய முதலீடுகளில் ஏற்பட்டுள்ள நஷ்டங்கள் அதன் மூன்றாவது காலாண்டு இலாபங்களை துடைத்துக்கட்டிவிட்டது. ரூஷ்யாவில் கணிசமான முதலீடுகளைக் கொண்டுள்ள சேஸ் மான்ஹட்டன், சிற்றி கோர்ப்பரேசன், பாங்கேர்ஸ் ட்ரஸ்ட், பாங் அமெரிக்கன், ஜே.பீ.மோர்கன் ஆகியன தமது நஷ்டங்கள் குறைந்தபட்சம் 254 மில்லியன்களாக இருக்கும் என அறிவித்துள்ளன.

ரூஷ்ய நாணயமான ரூபிளின் பெறுமதி வீழ்ச்சி அடைய இந்த நஷ்டம் மேலும் அதிகரிக்க இடமுண்டு. இரு வாரங்களுக்கு முன்னர் ரூஷ்ய தங்கம், வெளிநாட்டு நாணய வைப்புக்களின் பெறுமதி 17.4 பில்லியன் டாலர்களாக மதிப்பிடப்பட்டது. இது 13.4 பில்லியன் டாலர்களாக வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த ஜூலையில் இருந்து 8.8 பில்லியன் டாலர்களுக்கு மேலாக செலவிட்டுள்ள ரூஷ்ய மத்திய வங்கி இப்போது ரூபிளை ஆதரிக்கும் நடவடிக்கைகளை கைவிட்டுள்ளதாக அறிவித்துள்ளது. ரூஷ்ய நாணயமான ரூபிளை மதிப்பிறக்கம் செய்யும் திட்டத்தின் கீழ் அது 9.50 டாலர்களுக்கு சமமாக நிறுத்தப்பட்டது. ஆனால் இம்முயற்சி கைகூடவில்லை. ஆகஸ்ட் இறுதி வாரத்தில் ரூஷ்ய மத்தி வங்கி 290 மில்லியன் டாலர்களுக்கும் கூடுதலாக விநியோகிக்க நேரிட்டதைத் தொடர்ந்து வெளிநாட்டு நாணயத்திலான சகல கொடுக்கல் வாங்கல்களையும் இடைநிறுத்தியது. செலாவணி அலுவலகங்களில் ரூபிளின் பெறுமதி(டாலருக்கு சமமாக) 13 ரூபிள்களால் வீழ்ச்சிகண்டது.




## சொத்து விற்பனை

இந்த ரூஷ்ய நெருக்கடி லத்தீன் அமெரிக்க சந்தைகளிலும் உடனடியாக வெளிப்பாடாகியது. முதலீட்டு நிறுவனங்களும் நிதி அமைப்புக்களும் ரூஷ்ய சந்தையிலான நஷ்டங்களை ஈடு செய்ய சொத்துக்களை விற்றுத்தள்ளுவதில் இறங்கின. சாவோபோலோ சந்தையில் பங்குகள் 10 வீதத்தினால் வீழ்ச்சி கண்டன. இது இந்த மாதத்தில் இருந்து ஏற்பட்ட வீழ்ச்சியை 38 வீதத்துக்கும் மேலாக்கியது. ஆர்ஜன்ரைனா பங்குகள் 10.6 வீதத்தினால் வீழ்ச்சிகண்டது.

உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பின்னடையும் போக்கானது உலக பண்டங்களின் விலைகளின் வீழ்ச்சிகளின் மூலம் வெளிப்பாடாகியது. த இக்கோனோமிஸ்ட் சஞ்சிகையினால் தயார் செய்யப்பட்ட பண்ட சுட்டெண்கள் அது 1997 மேயில் இருந்து 30 வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளதைக் காட்டின.

இது எண்ணெய் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் உருவானதாகும். கடந்த செப்டம்பரில் 22 டாலர்களாக இருந்த எண்ணெய் விலை இப்போது 13 டாலர்களாக வீழ்ச்சிகண்டுள்ளது. இந்த எண்ணெய் விலை வீழ்ச்சியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நாடு ரூஷ்யா. ஆனால் இந்தோனேஷியா, நைஜீரியா, வெனிசூலாவும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

## ஆசியா

பண்டங்களை அடிப்படையாகக் கொண்ட உலகின் இரு பெரும் நாணயங்களான கனடியன், அவுஸ்திரேலியன் டாலர்களின் பிரமாண்டமான வீழ்ச்சி இந்தப் பின்னடைவுப் போக்கினைக் காட்டுகின்றது. ஆசியாவில் இருந்து கிடைக்கும் தரவுகளின் படி மலேசியாவில் மொத்த தேசிய உற்பத்தி மார்ச்சில் 2.8 வீதத்தினால் வீழ்ச்சி கண்டதைத் தொடர்ந்து மொ.தே.உ.6.8வீதத்தில் நின்று கொண்டுள்ளது.

இது 13 ஆண்டுகளில் ஏற்பட்ட பெரும் பின்னடைவாகும். கொரியாவில் வேலையின்மை ஒரு வருடத்தில் 2 வீதத்தில் இருந்து 7 வீதமாக உயர்ந்துள்ளது. கொரியன் மத்திய வங்கியின் அறிக்கையின்படி பொருளாதாரம் உலகின் 11வது பெரும் பொருளாதாரம் இரண்டாவது காலாண்டில் 6.6 வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது. பிலிப்பைன்ஸ், ஹொங்கொங்கிலும் இத்தகைய பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன.

ஆனால் உலக முதலாளித்துவத்தின் பெரும் பலம் வாய்ந்த "டைம் பொம்" அமெரிக்காவில் மூண்டுகொண்டுள்ளது. ஒரு ஆண்டின் முன்னர் ஆசிய நெருக்கடி வெடித்ததில் இருந்து உலகப் பொருளாதாரம் அதிகரித்த விதத்தில் அமெரிக்கப் பொருளாதாரத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியினாலேயே தாக்கிப் பிடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரூஷ்ய பொருளாதார வீழ்ச்சியால் இலங்கைக்கு இருபுறமும் இடி

ரூஷ்யாவின் பொருளாதாரம் நிதி அமைப்பும் வீழ்ச்சி கண்டதன் மூலம் ஆசியாவில் உக்கிரமடைந்துள்ள நெருக்கடியினால் உலக நாணய சந்தையில் ஏற்பட்டுள்ள பெரும் கலக்கங்கள் இலங்கை பங்கு, நிதி சந்தைகளுள்ளும் பெருக்கெடுக்கத் தொடங்கியுள்ளன. இலங்கை பங்கு முதல் சந்தை ஏற்கனவே நீண்டு வந்த நெருக்கடியினுள் தலைமூழ்கிப் போயிருந்தது.

கொழும்பு பங்கு முதல் சந்தையில் சகல பங்குகளதும் விலைச்சுட்டெண்களும் ஆகஸ்ட் கடைசி வாரத்தில் 507 வரை 26புள்ளிகளால் வீழ்ச்சி கண்டது. இந்த முழு மாதத்திலும் பங்கு விலைச் சுட்டெண் 91 ஆல் வீழ்ச்சி கண்டுள்ளது. வளர்ச்சி கண்டுவரும் உலக நிலைமையினால் அதிர்ச்சி கண்டுள்ள முதலீட்டாளர்கள் பங்குகளைக் கொள்வனவு செய்யவில்லை. இதற்கிடையே ரூஷியாவின் வீழ்ச்சியினால் இலங்கை தேயிலை சந்தை இருபுறத்தில் இருந்தும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. ஒரு புறத்தில் தேயிலைக் கொள்வனவு வீழ்ச்சி காண்பதற்கான நிலைமைகளை உருவாக்கியுள்ளது. மறுபுறத்தில் ரூபிளின் விலை வீழ்ச்சியினால் அந்நாட்டில் இருந்து தேயிலைக் கொள்வனவுக்காகக் கிடைக்கும் வருமானமும் வீழ்ச்சி காணும். ரூஷ்யா ரூபிளை மதிப்பிறக்கம் செய்ததோடு உள்நாட்டுக் கம்பனிகளின் தேயிலை வருமானத்துக்கு தடை ஏற்பட்டுள்ளது. "நல்ல கம்பனிகள் சன்ச் [illegible] வந்த கம்பனிகள் [illegible] ந்த நிலையில் இல்லை." என கொழும்பு பங்கு முதல் சந்தை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். ரூஷ்ய வங்கிகள் அவற்றின் நெருக்கடி காரணமாக தேயிலை இறக்குமதிக்கும் மற்றும் பொருட்களின் இறக்குமதிக்கும் வழங்கிவந்த கடன்களை வெட்டித் தள்ளத் தொடங்கியுள்ளன. ரூஷியா இலங்கைத் தேயிலைக்கான முக்கிய தேயிலைச் சந்தையாக விளங்கியது. தேயிலை ஏலத்தில் விற்கப்படாத தேயிலை நூற்றுக்கு 10அல்லது 15 வீதத்தினால் உயர்ந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் ரூஷ்ய நெருக்கடியாகும். ரூஷ்ய நெருக்கடி இன்னும் ஒரு மாதம் கடந்தால் நாட்டின் தேயிலை சந்தை நூற்றுக்கு 10, 15 வீதத்தினால் வீழ்ச்சிகாணும் என ஒரு தேயிலை ஏலவிற்பனை நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ரூபாவின் பெறுமானத்தை டாலருக்கு சமமாக அதிகரிப்பது பற்றியும் ஐயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே டாலர் ரூபா.65 ஆக அதிகரித்துள்ளது. இது ரூபா.70 அல்லது அதிலும் கூடுதலாக ஆண்டிறுதியில் அதிகரிக்கும் என கணிக்கப்படுகின்றது. அதாவது , ரூபா மோசமான மதிப்பிறக்கத்துக்கு உள்ளாகின்றது.

பங்கு முதல் சந்தையின் வீழ்ச்சி, அதனால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஓட்டமெடுத்தல் , ரூபாவின் மதிப்பிறக்கம் , தேயிலை சந்தையின் வீழ்ச்சி ஆகியவற்றால் இலங்கை முதலாளி வர்க்கத்தினதும் பொருளாதாரத்தினதும் நெருக்கடி மோசமான முறையில் உக்கிரம் கண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோ.ச.க.அங்கத்தவர்களை படுகொலை செய்வதாக விடுதலைப் புலிகளின் அறிவித்தல் மிரட்டுகிறது

1ம் பக்கத் தொடர்ச்சி

வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை, விடுதலைப்புலிகளின் அறிக்கையின் சகல இலட்சணங்களையும் கொண்டுள்ளது. இந்த அனாமதேய அறிக்கையானது தமிழ் தேசிய இனத்தவரான மூன்று சோ.ச.க. அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டதை நியாயப்படுத்துவதோடு விடுதலைப் புலிகளின் தலைமையின் சிந்தனாமுறை பற்றியும் வெளிச்சம் பாய்ச்சுகின்றது. அவ்வாறே அது கைது செய்யப்பட்டுள்ள சோ.ச.க. அங்கத்தவர்கள் சார்பில் தொழிலாளர், மனித உரிமைகள் அமைப்புக்கள், தமிழர் அமைப்புக்களிடையே ஆதரவு திரட்டும் முயற்சியையும் கைவிடும் விதத்தில் அனைத்துலகக் குழுவையும் உலக சோசலிச வெப் நிலையத்தையும் செயலிழக்கச் செய்யும் வகையில் எதிர்ப்பிரச்சாரத்தில் இறங்கும்படியும் வேண்டுகின்றது.

இந்த அறிக்கை கூறும் செய்தி தெளிவானது : "நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் உலக சோசலிச வெப் நிலையமும் தமது அனைத்துலக பாதுகாப்பு பிரச்சாரத்தை நிறுத்தாது போனால் மூன்று சோ.ச.க.அங்கத்தவர்கள் தொடர்பாகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் . அவர்கள் கொலை செய்யப்படும் சாத்தியம் பெரிதும் இருந்து கொண்டுள்ளது."

அனைத்துலகக் குழுவும் உலக சோசலிச வெப் நிலையமும் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டது பற்றி வாயை மூடிக்கொண்டு கைது செய்யப்பட்ட சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலைப் புலிகளின் தயவில் விட்டுவைக்காது போனால் அவர்கள் விடுதலைப் புலிகளின் சித்திரவதைகளுக்கோ அல்லது கொலைக்கோ உள்ளாகுவார்கள் எனவும் அதற்கு அனைத்துலகக் குழுவும் உலக சோசலிச வெப் நிலையமும் பொறுப்புச் சொல்ல வேண்டும் எனவும் இந்த அறிக்கை வாதிடுகின்றது.

அது பின்வருமாறு கூறுகின்றது:

"உலக சோசலிச வெப் நிலையமும் சோசலிச சமத்துவக் கட்சியும் ...இந்தச் சம்பவத்தை அத்தகைய பரந்த மட்டத்தில் பகிரங்கப்படுத்துவதன் பெறுபேறாக வெற்றிகொள்ள எதிர்பார்க்கும் கவனத்தை உண்மையில் வெற்றி கொண்டுள்ளது. ஆனால் அவர்களின் பிரச்சார உபாயம் மூன்று அங்கத்தவர்களின் உயிர்களை ஆபத்தில் மாட்டினால் அதற்கு யாரைக் குறை சொல்வது?"

இது யதார்த்தத்தை அடிதலையாக்குவதாகும். ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இருப்பவர்களை ஒடுக்குமுறையாளனின் செயற்பாட்டுக்குப் பொறுப்பாளியாக்கும் கடைகெட்ட வாதமாகும். சோ.ச.க.அங்கத்தவர்களை விடுதலை செய்ய விடுதலைப் புலிகளை நெருக்க அனைத்துலக பொதுஜன அபிப்பராயத்தைத் திரட்ட முயற்சிப்பதன் மூலம் சோ.ச.க.வும் அனைத்துலகக் குழுவும் செய்வது எந்த ஒரு அரசியல் தலைமையும் தமது அங்கத்தவர்களின் பேரிலான தமது பொறுப்பை கடமையை இட்டுநிரப்புவதாகும்.

விடுதலைப் புலிகள் கூட இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக ஆட்சேபம் தெரிவிப்பதோடு அம்னஸ்டி இன்டர்நஷனல் போன்ற மனித உரிமைகள் அமைப்புக்களின் ஆதரவை பகிரங்கமாகக் கோரியுள்ளது; பெற்றும் உள்ளது. கைது செய்யப்பட்டுள்ள தமிழ் போராளிகள் தம்மால் கொலை செய்யப்படுவது சிங்கள அரசின் அடக்குமுறைக்கு எதிராக பொதுமக்களின் எதிர்ப்பை திரட்டும் விடுதலைப் புலிகளின் முயற்சியானதால் நியாயமானது என இலங்கை அரசாங்கம் வாதிடுவதாக வைத்துக் கொள்வோம். அத்தகைய மலட்டுத்தனமானதும் பயங்கரமானதுமான வாதம் தொடர்பான விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன?

சோ.ச.க.அங்கத்தவர்களை காக்கும் பிரச்சாரம் தொடுக்கப்பட்டுள்ள ஒரு நிலையில் அவர்களுக்கு எதிராக எந்த ஒரு



வடக்கு-கிழக்கில் இருந்து அரச ஆயுதப்படைகளை வெளியேற்றக் கோரும் பதாகை தாங்கிய சோ.ச.க.ஆர்ப்பாட்ட ஊர்வலம்

பயங்கர நடவடிக்கையும் இடம்பெறுவதை நியாயப்படுத்தும் விடுதலைப் புலிகளின் முயற்சியும் தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக இலங்கை அரசாங்கம் எழுப்பும் வாதத்துக்கும் இடையே ஒருமைப்பாடு இருந்து கொண்டுள்ளது. அதற்கு முன்னைய யூ.என்.பி.அரசாங்கத்தைப் போலவே பொதுஜன முன்னணி அரசாங்கமும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் தம்மால் படிப்படியாக மீறப்பட்டதையும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமது யுத்தத்தையும் தமிழ் தேசிய இனத்தவர் இலங்கையின் இரண்டாந்தர பிரஜைகள் என்பதை கீழ்ப்படிவான முறையில் ஏற்றுக்கொள்ளாததாலாகும் என நியாயப்படுத்துகின்றனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமை தமது அனைத்துலக புகழையிட்டு அக்கறை காட்டின் அது சோசலிச, அனைத்துலக வேலைத்திட்டத்துக்காகப் போராடும் ஒரு "குற்றத்துக்காக" குற்றவாளிகளான சோ.ச.க. அங்கத்தவர்களை கைது செய்யாது இருந்திருக்க வேண்டும். இந்த நிலைமையை ஈடு செய்வது விடுதலைப் புலிகளுக்கு அவசியமானால் அவர்கள் ஒரு நேரடி பதிலை வழங்க வேண்டும். அதாவது, சோ.ச.க.அங்கத்தவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்.

## பாதுகாப்பு பிரச்சாரத்தின் மைய விதிமுறையை ஸ்தாபிதம் செய்தல்

சோ.ச.க. அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டதைக் கேள்விப்பட்ட நேரத்தில் இருந்து அனைத்துலகக் குழுவினதும் உலக சோசலிச வெப் நிலையத்தினதும் ஊர்ஜிதம் செய்யப்பட்ட இரண்டு விடயங்கள் விடுதலைப் புலிகளின் அறிக்கையின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. அன்று அவர்கள் பெரும் ஆபத்தில் இருந்து கொண்டுள்ளார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டதற்கான ஒரே காரணம் அவர்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் எதிர்ப்பாளர்களாக விளங்கியதுமாகும்.

அறிக்கையின் சிறு பந்தியினுள் சோ.ச.க. அங்கத்தவர்களினதும் வாழ்க்கை "ஆபத்தில்", "ஆபத்தில்" "பெரும் ஆபத்தில்" இருப்பதாக தனித்தனியாக ஆறு தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது சம்பந்தனும் நகுலேஸ்வரனும் சுதர்சனும் கைது செய்யப்பட்டது அவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தில் எனக் கூறிக் கொண்டாலும் இந்த சட்டவிரோத நடவடிக்கைகள் என்ன என்பதைப் பற்றி எதுவும் தெளிவுபடுத்தப்படவில்லை. அப்படிச் செய்வது விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுள் விடுதலைப் புலிகளின் அங்கீகாரம் கிடைக்காத சகல அரசியல் நடவடிக்கைகளும் கூட்டங்கள், ஊர்வலங்கள், அரசியல் இலக்கியங்களின் விநியோகங்கள் [illegible] நசுக்கப்படு[illegible]

எடுத்துக்காட்டுகின்றது.

சோ.ச.க.அங்கத்தவர்களைக் கைது செய்ததற்கான காரணத்தை விளக்கமுடியாமல் விடுதலைப் புலிகள் திரிப்புக்களிலும் சேறடிப்புக்களிலும் இறங்கியுள்ளது. அவர்களின் கைது செய்தலைச் சூழவுள்ள சம்பவங்களைப் பற்றிய திரிக்கப்பட்ட அறிக்கையுடன் ஆரம்பமாகின்ற இந்த அறிவித்தல் சோ.ச.க.வை "அதன் நிச குணாம்சங்களுக்கு அதாவது , நவ நாஸி கட்சி அல்லது அடக்குமுறை ஆட்சியின் தன்மைக்கு இணங்க கணிப்பது அவசியம்" எனக் கூறிக் கொள்கின்றது.

இந்த அறிக்கை சோ.ச.க.இலங்கை அரசாங்கத்தின் பயங்கர உபாயங்களுக்கு எதிராக "எதுவும்" செய்வதில்லை எனவும் "இலங்கை அரசாங்கத்தின் ஏஜண்டுகளுடன்" சேர்ந்து தொழிற்படுவதாகவும் குற்றம் சாட்டுகின்றது. (அதில் இருந்து விடுதலைப் புலி ஆதரவாளர்கள் இந்தக் குற்றச்சாட்டை விஸ்தரித்துள்ளனர். தமிழ் ஈழத்தினுள் வெளிநாட்டு உளவு ஏஜண்டுகள் கைது என்ற தலைப்பில் மற்றொரு இன்டர்நெட் கட்டுரை சம்பந்தனும் நகுலேஸ்வரனும் "வெளிநாட்டின் சார்பில் தொழிற்பட்டு" விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்களை திரட்டுவதன் பேரில் வெளிநாட்டு ஏஜண்டுகளிடம் இருந்து பணம் பெறுவதாகக் கூறுகின்றது. )

இவை நச்சுத்தனமானதும் அவமானம் நிறைந்ததுமான சேறடிப்புக்களாகும். இலங்கை சோசலிச சமத்துவக் கட்சி விடுதலைப் புலிகள் நன்கு அறிந்ததுபோல் இலங்கை முதலாளி வர்க்கத்தின் ஈவிரக்கமற்ற எதிரியாகும். அத்தோடு வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் நடாத்தும் 15 வருடகால யுத்தத்துக்கு எதிராக உறுதியாகப் போராடியுள்ளது. சோ.ச.க.வும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இலங்கையின் சகல தமிழ் மக்களதும் வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையினராக வாழும் தமிழ் மக்களதும் அவ்வாறே கொழும்பு தமிழ் மக்களதும் தோட்டத் தொழிலாளர்களதும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க போராடிய வரலாற்று அறிக்கையையும் கொண்டுள்ளது. தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான சோ.ச.க. பு.க.க. போராட்டம் உண்மையில் விடுதலைப் புலிகளின் தோற்றத்துக்கு கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்துக்கு முற்பட்டதாகும்.

## கருத்துவேறுபாட்டுக்கு இடையேயும்

விடுதலைப் புலிகளின் அரசியலும் தீவின் வடக்கு கிழக்கு பகுதியில் ஒரு முதலாளித்துவக் குட்டி அரசை திணிக்கும் அதன் முன்நோக்கும் ஆழமானதும் ஈவிரக்கமற்றதுமான கருத்து [illegible] கொண்டிருந்த போதிலும் [illegible] இலங்கை இந்திய

அரசாங்கங்களில் இருந்து விடுதலைப் புலிகளை காத்துள்ளது. தொடர்ந்தும் அதை செய்யும். இந்திய அரசாங்கம் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை கைது செய்து தடுத்துவைத்த போது பு.க.க.அவரை விடுதலை செய்யும்படி வேண்டியது. அவ்வாறே பு.க.க.விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமையைப் போலன்றி 1987 இந்திய இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதில் இருந்து அது தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசை பாதுகாக்க பயன்படுத்தப்படும் என எச்சரித்தது எதிர்த்துவந்துள்ளது.

இதைவிட இன்னும் நகைப்புக்கிடமானது என்னவென்றால் கைது செய்யப்பட்ட சோ.ச.க. அங்கத்தவர்கள் வெளிநாட்டு சக்திகளின் ஏஜன்டுகளாகச் செயற்படுவதாகச் சுமத்தும் குற்றச்சாட்டாகும். சோ.ச.க. வேலைத்திட்டம், தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் விடுதலை, தொழிலாளர் வர்க்கத்தை முதலாளி வர்க்கத்தின் சகல கட்சிகளில் இருந்தும் அமைப்புக்களில் இருந்தும் விடுவிப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ள ஒன்றாகும்.

குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, சோ.ச.க. அங்கத்தவர்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்குவதை எதிர்த்து வளர்ச்சி கண்டுவரும் அனைத்துலக எதிர்ப்பில் இருந்து விடுதலைப் புலிகள் தப்ப முடியாது. வன்முறைகள் மூலம் அதை எந்தவிதத்திலும் சாதிக்க முடியாது. விடுதலைப் புலிகள் சோ.ச.க.அங்கத்தவர்கள் மூவரையும் விடுதலை செய்தாக வேண்டும்.

சோ.ச.க.அங்கத்தவர்களை விடுதலை செய்யும் உங்கள் முயற்சிகளை பன்மடங்காக்கும்படி உலக சோசலிச வெப் நிலையம் வாசகர்களை வேண்டுகின்றது. அவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதை விடுதலைப் புலிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். அத்தோடு அவர்களின் மதிப்பீட்டின்படி அவ்வாறு ஏற்றுக்கொண்டிருப்பது முற்றிலும் அரசியல் காரணத்தினாலாகும். விடுதலைப் புலிகள் நிர்வாகத்தின் அடக்குமுறைத் தன்மையை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் உல்க சோசலிச வெப் நிலையமும் அரசியல் ரீதியில் அம்பலமாக்குவதை ஒரு அச்சுறுத்தலாக ஜீரணித்துக் கொண்டுள்ளதே அதற்குக் காரணம்.


சிவில் உரிமை அமைப்புக்கள் தொழிலாளர் அமைப்புக்கள் தமிழர் அமைப்புக்கள் ஜனநாயக உரிமைகளையிட்டு அக்கறை கொண்ட சகலரதும் ஆதரவும் கிடைக்க வேண்டும். இலங்கை அரசுக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தருபவர்களுக்கு நாம் இந்த வேண்டுகோளை சிறப்பாக முன்வைக்கின்றோம். விடுதலைப் புலிகளினால் சோ.ச.க. அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுவதன் மூலம் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் இராணுவத்தினதும் பிடியை இறுக்கமாக்குவதாக மட்டுமே இருக்கும். உண்மையில் சமீப சில வாரங்களாக இலங்கை அரசு தெற்கில் சோ.ச.க. அங்கத்தவர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எதிரான துன்புறுத்தல்களை உக்கிரமாக்கியுள்ளது.

சோ.ச.க.அங்கத்தவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யும்படி கோரும் ஆட்சேபனைக் கடிதங்களை முடிந்தமட்டும் விரைவில் விடுதலைப் புலிகள் தலைமைக்கு பக்ஸ் மூலம் அனுப்பி வைக்கவும். இக்கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

The LTTE.
C/o Eelam House,
202, Long Lane London SE1 4QB,
United Kingdom,
Tel: 0044-171-403-4554 FAX: 0044-171-403-1653

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி புதைகுழிக் குற்றச்சாட்டுக்கு குழிதோண்ட முயற்சி





யாழ்ப்பாணம் செம்மணி படுகொலைப் புதைகுழிகள் பற்றிய குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு இரு மாதங்கள் கடந்து விட்டபோதிலும் பொதுஜன முன்னணி அரசாங்கம், விடுதலைப் புலிகள், பொலிஸ், மனித உரிமைமீறல் ஆணைக்குழு போன்றவை இந்தக்குற்றச்சாட்டு பற்றிய விசாரணைகளை இன்னமும் அமுக்கியே வருகின்றன. இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்த கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்கின் குற்றவாளியான கோர்ப்பரல் சோமரத்ன ராஜபக்ச வெலிக்கடை சிறை அதிகாரிகள் சிலரால் ஆகஸ்ட் 20ம் திகதி தாக்கப்பட்டமை குற்றச்சாட்டுக்கு குழிதோண்டும் முயற்சியின் ஒரு அம்சமாகக் கொள்ளப்படுகின்றது.

பள்ளி மாணவி கிருஷாந்தி குமாரசுவாமியை கடத்திச் சென்று கற்பழித்து, கொலை செய்தமை, அவரைத் தேடிச் சென்ற அவரின் தாயார், தம்பி, உறவினரைக் கொலை செய்தமை என்ற குற்றச்சாட்டின் பேரிலான வழக்கின் முதலாம் எதிரியான சோமரத்ன ராஜபக்சவை நீதிமன்றம் குற்றவாளியாகக் கண்டது. இதைத் தொடர்ந்து ராஜபக்ச கூறுவதற்கு ஏதும் உள்ளதா என நீதியரசர்கள் கேட்ட போது யாழ்பாணத்தில் இது ஒரு சாதாரண சம்பவம் எனவும் 400க்கும் அதிமான தமிழ் இளைஞர்கள். யுவதிகள் இராணுவத்தினால் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டு உள்ளதாகவும் கூறிய ராஜபக்ச இத்தகைய புதைகுழிகளை செம்மணியில் இனங்காட்ட முடியும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்து இரகசியப் பொலிசாரினாலும் அரசாங்கத்தினாலும் அமைக்கப்பட்ட மனித உரிமைமீறல் ஆணைக்குழுவும் ராஜபக்சவின் வாக்குமூலத்தை பதிவு செய்து கொண்டதாக அறிக்கைகள் வெளிவந்தன. இந்தச் சம்பவம் பற்றி பூரண விசாரணை நடாத்தப்படுமென அரசியல் யாப்பு சட்ட அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான ஜீ.எல் .பீரிஸ் கூறியிருந்தார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட நாளில் இருந்து இன்றுவரை இந்தப் புதைகுழிகளைத் தோண்டுவது குறித்த பிரச்சினை பற்றி இடைக்கிடையே அறிக்கைகள் வெளிவந்து கொண்டிருந்தன.ஆனால் ஆகஸ்ட் 20ம் திகதி காலை இக்குற்றச்சாட்டை முன்வைத்த கோர்ப்பரல் சிறைக்குள் வைத்து சிறைச்சாலை அதிகாரிகளால் தாக்கப்பட்டுள்ளார். தாக்குதலால் காயமடைந்த கோர்ப்பரல் ராஜபக்ச வெலிக்கடை சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட நேரிட்டது.


இராணுவத்தினால் கைதடியில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட பள்ளி மாணவி கிருஷாந்தி குமாரசுவாமியும் அவருடன் கூடவே கொலை செய்யப்பட்டதாயாரும் தம்பியும்.

தாக்குதல் சம்பவம் பற்றி செய்தி ஊடகங்கள் தவறான செய்திகளை வெளியிட்டுவிட்டதாகக் கூறும் தொனியில் அரசியலமைப்பு விவகார அமைச்சின் செயலாளர் வெளியிட்ட அறிக்கை அத்தாக்குதலை நியாயப்படுத்தும் வகையில் பின்வருமாறு கூறிற்று :

"இதை ஆராய்ந்த போது கோப்பரல் ராஜபக்ச கையில் வைத்திருந்த 'சட்டவிரோதக்' கடிதமொன்றை சிறை அதிகாரிகள் அவரிடமிருந்து கைப்பற்றிய போது அவர் அதனைப் பிடுங்கி வாயில் போட்டு விழுங்க முயற்சித்தார். அதனைப் பறிக்க செய்த முயற்சியில் அவரது வாய்,தாடை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது." எனக் கூறியது. ஆனால் கோர்ப்பரலை நீதிமன்றத்தில் தாம் உணர்ச்சிவசப்பட்டு அவ்வாறு கூறியதாகவும் குற்றச்சாட்டு தவறானதெனவும் கூறும் அறிக்கையில் அவரிடமிருந்து வலுக்கட்டாயமாக கையொப்பம் வாங்க எடுத்த முயற்சியை அவர் நிராகரித்ததைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக செய்தியாளர் அம்பலமாக்கியுள்ளனர்.

இதே சமயம் மனித உரிமை மீறல் ஆணைக்குழுவின் அறிக்கை உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் தொடக்கம் இந்த விசாரணை நடைபெறுவதைத் தடுக்க தலையீடு செய்ய இடமுள்ளதாக கூறுகின்றது. வன்னியில் இப்போது நடக்கும் யுத்தம் விசாரணைகளைத் துரிதப்படுத்தப் பங்கமாகியுள்ளதென "சந்தேகிக்க" இடம் இருப்பதாகவும் இக்குழு செய்தியாளருக்குக் கூறியுள்ளது. செம்மணியில் 300 400க்கும் இடைப்பட்ட தமிழர்கள் கொலைசெய்யப்பட்டு புதைத்த குழிகளைத் தாம் அடையாளம் காட்ட முடியுமென கோர்ப்பரல் கூறியதாக மனித உரிமை மீறல் ஆணைக்குழு ஆணையாளர் ரீ.சுந்தரலிங்கம் அம்பலமாக்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் இராணுவ ஆட்சியில் இருந்து கொண்டுள்ளமை "நடைமுறைப் பிரச்சினைகளை" உருவாக்கியுள்ளதாகக் கூறும் இந்த ஆணையாளர் விசாரணைக்கு முன் யாழ்.நீதிபதி உத்தரவிடுவது அவசியம் என்றுள்ளார். இலங்கையில் ஆணைக்குழு இப்புதை குழி தோண்டப்படுவதற்கு முன்னதாக கொலையாளிகள் பற்றிய விசாரணைக்கு அவசியப்படும் சிறப்பு உதவிகளுக்கு ஜெனீவாவில் உள்ள ஐ.நா.மனித உரிமை மீறல் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்துக் கொண்டுள்ளது. இச்சகல நிகழ்வுகளுக்கு மத்தியில் இறுதியாக ஆணையாளர் யாழ்ப்பாணத்தில் இன்றுள்ள சூழ்நிலையில் அரசாங்கத்தினால் இச்சமயம் விசாரணைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

கொலையுண்டு செம்மணி புதைகுழிகளில் தள்ளி மூடப்பட்டதாகக் குறிப்பிடப்படும் ஆட்களின் எண்ணிக்கை பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கடந்த 'ரிவிரச' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய யுத்தத்தைத் தொடர்ந்து காணாமல் போனவர்களின் எண்ணிக்கைக்கு பெரிதும் சமமானதாகக் காணப்படுகின்றது.

செம்மணியைத் தவிர யாழ்ப்பாணத்தில் கண்டி வீதி, பருத்தித்துறை வீதிக்கு அண்மையிலான இடங்கள் 1996 ஏப்பிரலில் இருந்து மூடப்பட்டு உள்ளன.இதனால் அப்பகுதிகளிலும் புதைகுழிகள் மேலும் இருக்க இடமுண்டு என யாழ்ப்பாண மக்கள் நம்புகின்றனர்.

கடந்த யூ.என்.பி.அரசாங்கமும் இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கமும் நடாத்தும் இனவாத யுத்தத்தினால் தமிழ் ஒடுக்கப்பட்ட மக்கள் சகிக்கமுடியாத துயரங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. 1980 களின் ஆரம்ப காலத்தில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்க்கப்பட்ட இராணுவ பொலிஸ் மக்கள் படுகொலைகளில் காணப்பட்டதோடு 1988 90ல் நாட்டின் தென்பகுதியில் மக்கட் படுகொலைகளின் மூலம் கிடைத்த பயிற்சியும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. இப்போது இத்தகைய அட்டூழியங்கள் வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

கிருஷாந்தி குமாரசுவாமி வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட சகலரும் இந்தக் கொலைகள், புதைகுழிகள் தொடர்பாக தாம் குற்றம் புரிந்திருக்காவிட்டால் மேலதிகாரிகளின் தண்டனைக்கு உள்ளாக நேரிடும் என்ற அச்சத்தில் இதைச் செய்ததாகக் குறிப்பிட்டுள்ளனர்.இந்தப் புதைகுழிகள் தோண்டப்பட்டால் இராணுவ மேல் அதிகாரிகளின் அட்டூழியங்கள் அம்பலத்துக்கு வரும். இதையிட்டு பொதுஜன முன்னணி அரசாங்கம் கலங்கியுள்ளது மட்டுமன்றி இதற்கு எதிராகவும் நின்று கொண்டுள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.இந்தப் படுகொலைப் புதைகுழிகள் பொதுஜன முன்னணி அரசாங்கம் □சமாதானத்துக்கான யுத்தம் □என்ற பேரில் நடாத்தும் இனவாத கொலைகார யுத்தத்தின் நிஜ கோலத்தை அம்பலப்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சிச இலக்கியங்களை நீங்களும் வாசியுங்கள்!



## லியொன் ட்ரொட்ஸ்கியும் 20ம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும்

டேவிட் நோர்த்



## சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளும் அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் முன்நோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும். அனைத்துலகக் குழுவின் கிளைகளால் புதிய கட்சிகளை ஸ்தாபிதம் செய்வதானது, முதலாளித்துவ முறைக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் போராட்டத்துக்குக் கிளம்பும் மக்களுக்கு சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஜனநாயக சுதந்திரத்தினையும் கொண்ட மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்நோக்கில் வழிகாட்டுவதற்கே.

விலை ரூபா 40.00



## முதலாளித்துவத்தின் மரண ஓலமும்

நான்காம் அகிலத்தின் பணிகளும்

இடைமருவு வேலைத்திட்டம்

நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

விலை ரூ. 15.00




## இலங்கையில் ட்ரொட்ஸ்கிசமும் திரிபுவாதமும்

சமசமாஜ வரலாற்று ஏட்டிலிருந்து

கீர்த்தி பாலசூரிய

விலை ரூ. 15.00



## அடிப்படைக் கொள்கைகளுக்கும், மூலோபாயத்துக்குமான 25 ஆண்டுக்கால உறுதியான போராட்டம்

விஜே டயஸ்


விலை ரூ. 10.00



## இலவசக் கல்வியை காப்பது எப்படி?

விஜே டயஸ்

விலை ரூ. 10.00



ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான போராட்டமும்

## பேர்லின் உலக மகாநாட்டின் முன்நோக்கும்

விலை ரூ. 25.00



ஆகஸ்ட் சதியின் பின்னர்:

## சோவியத் யூனியன் எங்கே செல்கிறது?

விலை ரூ. 25.00



சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதன் பின்னர்

## மார்க்சிசத்துக்கான போராட்டமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்

டேவிட் நோர்த்

விலை ரூ. 5.00



## நிரந்தரப் புரட்சியும் சோசலிச அனைத்துலக வாதத்துக்கான போராட்டமும்

கீர்த்தி பாலசூரிய நினைவுப் பேருரை

டேவிட் நோர்த்

விலை ரூ. 8.00

தொழிலாளர் பாதை வெளியீடு, 90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு 10. தொலைபேசி: 682220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரகேசரி பத்திரிகையாளரின் அடிப்படை உரிமை மனுவை விசாரிக்க உயர்நீதிமன்றம் முடிவு

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்து தடுத்துவைக்கப்பட்டுள்ள வீரகேசரி துணை ஆசிரியர் சந்திரலிங்கம் சிறீ கஜனின் அடிப்படை உரிமைகள் மனுவை விசாரணைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் ஆகஸ்ட் 17ம் திகதி முடிவு செய்தது.

கடந்த ஜூலை 16ம் திகதி இவர் புலனாய்வு பகுதியின் சப் இன்ஸ்பெக்டரான வஸ் பியவத்தவினால் கைது செய்யப்பட்டதாகவும் அதற்கு எதுவிதமான காரணமும் காட்டப்படவில்லை எனவும் இவர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார். சட்டவிரோதமாக கைது செய்தல், தடுத்துவைத்தல் மூலம் அரசாங்கம் அரசியலமைப்பின் 13(1), 13(2) சரத்துக்களை மீறியுள்ளதாக இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள சிறீகஜன் அதன் மூலம் தமது அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாகக் கூறியுள்ளார்.

சர்வதேச வெகுஜனத் தொடர்புச்சாதன அமைப்பும் மனித உரிமைகள் அமைப்பும் வீரகேசரி பத்திரிகையாளர் கைது செய்யப்படு தடுத்துவைக்கப்பட்டுள்ளதையிட்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டுள்ளன.

# பொதுமக்களின் ஜனநாயக உரிமைக்கு அடி...

2ம் பக்கத் தொடர்ச்சி

அரசாங்க அமைச்சர் பதவிகள் மூலம் லஞ்சம் பெற்றுக் கொண்டுள்ள சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் அவற்றுடன் சேர்ந்து பொதுஜன முன்னணியில் நின்று கொண்டுள்ள சிறீலங்கா மக்கள் கட்சியும் தேசவிமுக்தி மக்கள் கட்சியும் தேர்தலை ஒத்திப்போடுவதையும் அவசரகாலச் சட்டத்தை விதிப்பதையும் எதிர்ப்பதாக முன்னர் கூறிக் கொண்டிருந்தனர். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி எம்.பீ.க்கள் இந்த அவசரகாலச் சட்டம் மீதான வாக்கெடுப்பில் அரசாங்கத்துக்கு நேரடியாக வாக்களித்தனர். சமசமாஜ அமைச்சர்களும் எம்.பீ.க்களும் ஒரு வகையான பூச்சாண்டியில் ஈடுபட்டனர். சமசமாஜத் தலைவரும் தொழில்நுட்ப அமைச்சருமான பற்றி வீரக்கோனும் எம்.பி.யான அசோக வீரசிங்க டி சில்வாவும் வாக்களிப்பில் இருந்து விலகிக் கொண்டனர். வாசுதேவ நாணயக்கார வாக்களிக்காமல் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேறினார். மற்றொரு சமசமாஜத் தலைவரான பிரதி அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன அரசாங்கத்துடன் சேர்ந்து அவசரகாலச் சட்டத்துக்கு சார்பாக வாக்களித்தார்.

நாணயக்கார பாராளுமன்றத்தில் வெளியேறியதும் வீரக் கோனும் சில்வாவும் வாக்களிப்பில் இருந்து விலகிக் கொண்டதும், அத்தாவுட செனவிரத்ன பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்ததும் மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திப்போடுவதை எதிர்க்க வேண்டும் என சமசமாஜக் கட்சி அரசியல் குழு முடிவு எடுத்த ஒரு நிலைமையிலாகும் என்பது பிரசித்தமானது. சமசமாஜ தலைவர் பற்றி வீரக்கோன் 'ஐலன்ட்' பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில் தாம் வாக்களிக்காது விலகிக் கொண்டதும், அத்தாவுட செனவிரத்ன அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்ததும் "பிழையற்றது" எனக் கூறியுள்ளார். சிறிது காலத்துக்கு முன்னர் கலாநிதி.கொல்வின் ஆர்.டி.சில்வா தமது அரசியல் எதிர்ப்பாளர்களின் சுயேட்சை எம்.பி.க்களை "மூன்று தலைக் கழுதைகளுக்கு" ஒப்பிட்டு நிகழ்த்திய பேச்சுக்களை முற்றிலும் நிரூபிக்க சமசமாஜக் கட்சி முன்வந்துள்ளது. இக்கட்சி ஆளும் வர்க்கத்தினதும் அரசாங்கத்தினதும் சார்பில் தோள்கொடுப்பதுடன் மட்டுமன்றி பொதுமக்களின் கண்களில் மண்வீசவும் எடுக்காத முயற்சியே கிடையாது.

சோசலிச சமத்துவக் கட்சி மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டியது போல் இலங்கை முதலாளி வர்க்கமும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் தென்கிழ்கது ஆசியாவில் வெளிப்பாடான உலக முதலாளித்துவத்தின் நீண்டுவரும் நெருக்கடியால் உக்கிரம் கண்டுள்ள நெருக்கடிக்குள் மாட்டிக் கொண்டுள்ளது. ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களை அழைக்கும் பொருட்டு பொதுமக்களின் உரிமைகளை மேலும் மேலும் வெட்டித் தள்ளி, அவற்றுக்கு வாய்ப்பான நிலைமைகளை உருவாக்குவதும் அதன் ஒரு பாகமாக சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் கட்டளைகளை அமுல் செய்வதும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளும் இனவாத யுத்தத்தினை ஆயுதமாக்கிக் கொண்டு தென்மாகாணங்களில் இராணுவத்தின் அதிகாரங்களை பெருக்குவதன் நோக்கம் சகிக்க முடியாத நிலைமைகளுக்கு எதிராகத் தோன்றும் போராட்டங்களை நசுக்கித் தள்ளும் பொருட்டு இராணுவ பொலிஸ் சர்வாதிகாரத்துக்கு வழி சமைக்கும் தயாரிப்பாகும். உலக நெருக்கடி உக்கிரம் கண்டுள்ள ஒரு நிலைமையினுள் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும் பின்தங்கிய நாடுகளிலும் ஆளும் வர்க்கங்கள் தமது அமைப்பைக் கட்டிக் காக்கும் பொருட்டு பிற்போக்கு அணிதிரள்வுகளில் இறங்குவதை உலகளாவிய ரீதியில் கண்டுகொள்ள முடியும்.

தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் எதிரில் அரசியல் பிரச்சினை தோன்றியுள்ளது. ஜனநாயக உரிமைகளை காப்பது எப்படி? அழிவுகளைத் தலையில் கட்டியடிக்கும் ஆளும் வர்க்கத்தின் யுத்தத்தில் இருந்து தலையெடுப்பது எப்படி?தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் தமது மூலோபாயம் அவசியம். இந்த பிரச்சினைகளை தம்மால் அமைக்கப்படும் தமது சார்பில் போராடும் ஒரு அரசாங்கத்தினால் மட்டுமே தீர்த்து வைக்க முடியும். தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் இப்பிரச்சினைகளை வடக்கு கிழக்கிலும் தெற்கிலும் தொழிலாளர்களின் அனைத்துலகவாத ஐக்கியத்தை கட்டியெழுப்பிக் கொண்டு அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்துடன் ஒருமைப்பாட்டை ஸ்தாபிதம் செய்து கொண்டு ஏழை விவசாயிகள் உட்பட ஒடுக்கப்படும் மக்களின் உதவியோடு தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை அதாவது இலங்கை ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை கட்டியெழுப்புவது பொதுமக்களுக்கு உள்ள ஒரே மாற்றீடாகும்.

சோசலிச சமத்துவக் கட்சியின் இந்த சோசலிச அனைத்துலகவாத வேலைத் திட்டத்துக்கு எதிராக அதனது அங்கத்தவர்களை தமது அதிகாரத்துக்கு உட்பட்ட பிராந்தியங்களில் வேட்டையாட முன்நின்று கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் தேசியவாத, பிரிவினைவாத அரசியலை இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டச் செய்யும் போராட்டத்தின் மூலமே தோற்கடிக்க முடியும்.

சோசலிச சமத்துவக் கட்சி சோசலிச மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்பப் போராடுவது அனைத்துலக சோசலிசத்தை அடிப்படையாகக் கொண்ட அத்தகைய ஒரு அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணரவேயாகும். சோ.ச.க.வில் சேர்வதன் மூலம் நீங்களும் அந்தப் போராட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள்.

# இனவாத யுத்தத்துக்கு 25 ஆண்டுகள்...

7ம் பக்கத் தொடர்ச்சி

களரிகளையும் நியாயப்படுத்துவதை அடிநாதமாகக் கொண்டிருந்தது. அவர் கூறியதாவது : "2000 ஆண்டுகள் வாழும் சிங்கள மக்கள் நாட்டை பிரிப்பதை எதிர்க்கிறார்கள். சிங்கள மக்களின் அபிப்பராயத்துக்கு தலைவணங்கி ஆகஸ்ட் 4ம் திகதி நாட்டைப்பிரிக்கும் பேச்சுக்களை சட்டத்தின் மூலம் தடை செய்யும் மசோதாவை பாராளுமன்றத்தில சமர்ப்பித்து நிறைவேற்ற நாம் முடிவு செய்தோம்."

தமிழர் எதிர்ப்பு கறுப்பு ஜூலை 'சிங்கள பொதுமக்களின் அபிப்பராயத்தின் வெளிப்பாடு' எனக் கூறுவதன் மூலம் மக்கள் படுகொலை அலுகோசுகளின் கொலைகளை மூடி மறைப்பதோடு சிங்களத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அந்தக் காட்டுமிராண்டித்தனத்துடன் இனங்காணச் செய்வதாகும்.

இந்த அலுகோசுக் கீதத்துடன் பெரிதும் ஒத்தூத முன்வந்தவர் நவசமசமாஜக் கட்சித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன. அவர் இந்தக் கறுப்பு ஜூலையின் தமிழ் மக்கள் படுகொலைகள் யூ.என்.பி.அரசாங்கத்தின் பேரில் வளர்ச்சி கண்ட "பொதுமக்கள் எதிர்ப்பின் வெளிப்பாடு" எனக் கூறினார். யூ.என்.பி..அரசாங்கத்தின் எதிர்ப்பாளனாகக் காட்டிக்கொண்ட இந்த முதலாளித்துவ கையாள் யூ.என்.பி.யினால் நடாத்தப்பட்ட இனவாதப் படுகொலைகளை பொதுஜன அபிப்பராயத்தின் வெளிப்பாடு எனக் கூறிய கதைக்கு சாமரை வீசியது அந்த விதத்திலாகும். அது குட்டி முதலாளித்துவத் தீவிரவாதம் முதலாளித்துவத்துக்கு சேவை செய்யும் பாணிக்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

1983 ஜூலையில் வாயால் கூறிக் கொள்ளாத போதிலும் ஜே.வீ.பி.தலைவர்கள் நீண்ட காலமாக கட்டவிழ்த்து வந்த இனவாத நஞ்சை விழுங்கிக் கொண்டவர்கள் கறுப்பு ஜூலையில் சிறில் மத்தியூவின் குண்டர்களுடனும் இராணுவத்தினது காட்டுமிராண்டிகளுடனும் சேர்ந்து செயற்பட்டதன் மூலம் தமிழ் மக்கள் படுகொலைகளில் நடைமுறையில் பங்குகொண்டதன் மூலம் காட்டிக் கொண்டதும் அதுவாகும்.

யூ.என்.பி.யின் தமிழர் எதிர்ப்பு இனவாதத்துக்கு சாமரை வீசும் இந்த விதிமுறையானது நவசமசமாஜக் கட்சியின் மீதும் ஜே.வீ.பி.யின் மீதும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மீதும் கறுப்பு ஜூலைக்கான பொறுப்பை சுமத்தி விடுவது யூ.என்.பி..அரசாங்கத்துக்கு இலகுவாகியது. ஜனாதிபதி ஜயவர்தன அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி இந்த மூன்று அரசியல் கட்சிகளையும் தடைசெய்யவும் அவற்றின் அச்சகங்களுக்கு சீல் வைக்கவும் கட்சிகளின் தலைவர்களை கைது செய்யவும் தொழிற்பட்டார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் கே.பி.சில்வா, அக்கட்சியின் தொழிற்சங்கத் தலைவர் எல்.டபிள்யூ.பண்டித உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பலர் கைது செய்யப்பட்டதோடு கைது செய்தலை தவிர்த்துக் கொண்டிருந்த நவசமசமாஜக் கட்சியின் வாசுதேவ நாணயக்கார, ஜே.வீ.பீ.யின் றோஹண விஜேவீர போன்ற தலைவர்களை கைது செய்யத் தகவல் தருபவர்களுக்கு ரூபா.50000 சன்மானம் வழங்குவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது.

யூ.என்.பி.அரசாங்கமே முன்நின்று கட்டவிழ்த்துவிட்ட இனவாத இரத்தக் களரியை சாட்டாகக் கொண்டு இடம்பெற்ற இந்த ஜனநாயக எதிர்ப்பு ஒடுக்குமுறைக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்ட கொள்கைப்பிடிப்பான முறையில் முன்னணியில் நின்றது சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே.

கட்சித் தடைகள் நடைமுறைக்கு வந்ததும் உடனடியாக அறிக்கை வெளியிட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதனால் தோன்றியுள்ள ஆபத்தை விளக்கி தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு கூறியது இதுதான்:

"மூன்று இடதுசாரிக் கட்சிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையையும் இந்த கைதுகளையும் சிறிதாகக் கொள்ள எந்தவிதமான இடமும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் கிடையாது. இது அடக்குமுறை இயந்திரம் அனைத்தையும் நசுக்கித் தள்ளிக்கொண்டு உருண்டோட இடமளிப்பதாகும்.

"இடதுசாரிக் கட்சிகளின் தடை முதலாளித்துவ ஜனநாயகத்தின் மரணத்தை குறித்து நிற்கின்றது. இன்றைய உலக ஏகாதிபத்திய நெருக்கடியின் மத்தியில் இப்போது அது முதலாளித்துவ நாடுகள் தோறும் நடைமுறைக்கிடத் தொடங்கப்பட்டுள்ள அனைத்துலகத் தோற்றப்பாடாகும்.

"அவசரகாலச் சட்டம் முடிவடையும் போது கட்சி தடையும் பத்திரிகைத் தடையும் நீங்கும் எனவும் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் நம்பிக்கை வைப்பது ஆபத்தானதாகும். ஆட்சியாளர்கள் செயற்படுவது சிறையில் இருந்து ஆட்களை வெளியேற்ற அல்ல. அவற்றை மூச்சுவிட முடியாத விதத்தில் நிரப்பித் தள்ளுவதற்காகும்.

"இந்த நிலைமையில் சமசமாஜ தலைவர்கள் கட்சித் தடைகளையிட்டு ஊமாண்டிகளாக இருந்து வருவது பிற்போக்குக்கு உதவுவதும் அதற்கு ஏஜண்டுகளாக செயற்படுவதும் ஆகும் எனக் கூறுவது சரியானது.

"அவசரகாலச் சட்டத்தை நீக்கவும் கட்சித் தடைகளை நீக்கி அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் தமக்குரிய ஜனநாயக உரிமைகளை பயன்படுத்தி இன்றே பிரச்சாரம் செய்ய வேண்டும்."

(கம்கறு மாவத்த 1983 செப்டம்பர் 09 வெள்ளி)

தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிலாபம்*

# சுகாதாரத் தொழிலாளரின் சம்பளப் பாக்கி இல்லையா?

சிலாபம் நகரசபை சுகாதாரத் தொழில்ாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய இரண்டுவருட சம்பளப் பாக்கி செலுத்தப்பட இல்லை எனத் தொழிலாளர்கள் தொழிலாளர் பாதையிடம் தெரிவித்தனர். இந்தத் தொழிலாளர்கள் சேவையில் 1996 ஜூன் 27ம் திகதி நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர். ஆனால் பின்னர் அது 1998 ஜூன் 17 ஆக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் சேவை நிரந்தரமாக்கலை 1997 மே01 ஆக முன்தள்ளுவதாக நகரசபை செயலாளரால் விநியோகிக்கபட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டது அதன்படி இரண்டு ஆண்டுகளுக்கான பாக்கிச் சம்பளம் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டும். ஆனால் அந்த பாக்கிச் சம்பளம் இன்னமும் செலுத்தப்படாததோடு தொழிலாளர் அதைப்பற்றி விசாரிக்கும் போது அதற்குப் பல்வேறு சாக்குப்போக்குக்களைக் கூறி தலைதப்பிக் கொள்கின்றார்கள். இது பாக்கிச் சம்பளத்தை நிரந்தரமாகவே செலுத்தாது விடுவதற்கான ஒரு உபயமோ எனத் தொழிலாளர்கள் அஞ்சுகின்றார்கள்.

இந்தச் சம்பளப் பாக்கியைச் செலுத்துவதற்கு தொழிலாளர்கள் வைத்திய சோதனைக்கு உள்ளாகவேண்டும் எனவும் நகரசபை அலுவலர்கள் கூறியுள்ளனர். இது முதல் உத்தரவாக இருந்தது. அடுத்து தொழிலாளர்கள் இந்தச் சோதனைக்கு உள்ளாகி அதில் தேறி மூன்று ஆண்டுகள் கழிந்து சேவை நிரந்தரத்தின் பின்னர் இது வழங்கப்படும் என்றுள்ளனர். அதைத் தொடர்ந்து கேட்டபோது நிதி இல்லை என்றும் வடமேற்கு மாகாண சபையில் இருந்து கிடைக்க வேண்டியுள்ள நிதி கிடைத்ததும் இதைச் செலுத்துவதாக நிர்வாகம் வாக்குறுதி வழங்கியது. இது தொடர்பாக வடமேற்கு மாகாண சபை ஆளுனருக்கும் தொழிலாளர்கள் கடிதம் எழுதி இருந்தனர் அதனால் உரிய பலன் கிடைக்க வில்லை.

பெரும் பிரச்சாரங்களுடனும் விளம்பரங்களுடனும் இடம்பெறும் 1998ல் நடைபெற்ற ஜனாதிபதி நடைமுறை சேவையிலும் தொழிலாளர்கள் இதைப்பற்றி முறைப்பட்டனர். ஒரு கிழமைக்குள் பதில் வழங்குவதாக வாக்குறுதியளிக்கப்பட்டது. அதிலும் பழைய கதையே தொடர்ந்தது. தொழிலாளர்களின் இந்த சேவை விடயங்கள் சம்பந்தமாக நகரசபையில் கடமையாற்றி வந்த லிகிதர் இடமாற்றம் செய்யப்பட்டதோடு அது தொடர்பாக கடமையாற்வதும் கஷ்டமாகியது. நிர்வாகம் இதை இழுத்தடிப்பதற்கு ஒரு சாட்டாக்கிக் கொண்டது. இப்போது நகர சபை இந்த பாக்கிச் சம்பள கொடுப்பனவை இழுத்தடிப்பதற்கு தொழிலாளர்கள் இச்சேவையில் சேர்ந்த போது சமர்ப்பித்த கல்வி தகமைப் பத்திரங்களை சமர்ப்பிக்கும்படி கோருகின்றது.

## பகிரங்கக் கூட்டமும் மறியல் போராட்டமும்

### விடுதலை புலிகளின் கைதிகளாயுள்ள சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களை உடனடியாக விடுதலை செய்வோம்!

**கண்டி**

கூட்டம்: செப்டம்பர் 05 மாலை 3.00மணிக்கு
கண்டி ஜனமதுர மண்டபம்
(பஸ் ஸ்ரான்ட் அருகில்)

**மொரட்டுவை**

கூட்டம்: செப்டம்பர் 06 மாலை 4.00மணிக்கு
மொரட்டுவை சொய்சாபுர சனசமூக மண்டபம்

**உடப்பு**

கூட்டம் : செப்டம்பர் 11 காலை 11மணி உடப்பு சந்தைக்கு அருகில் உள்ள மேடையில்
மறியல் : சந்தை எதிரில் காலை 10 மணி

**கேகாலை**

கூட்டம்: செப்டம்பர் 12 மாலை 3.00மணிக்கு
கேகாலை நகரசபை மண்டபம்

**அட்டன்**

கூட்டம் : செப்டம்பர் 13 மாலை 2மணிக்கு
அட்டன் நகரசபை மண்டபம்
மறியல் : அன்று மாலை 1மணிக்கு
அட்டன் பஸ் நிலையம்

**சோசலிச சமத்துவக் கட்சி**
**இளம் சோஷலிஸ்டுகள்**

## மார்க்சிசமும் இருபதாம் நூற்றாண்டின் பிரச்சினைகளும்

### ஒன்பது விரிவுரைகள்

1. லியொன் ட்ரொட்ஸ்கியும் இருபதாம் நூற்றாண்டின் சோசலிசத்தின் தலைவிதியும்
2. பூகோளமயமாக்கமும் வரலாற்று அர்த்தமும் புரட்சிகரத் தன்மையும்
3. சீர்திருத்தவாதமும் புரட்சியும்-பேர்ண்ஸ்டீனிற்கு எதிரான போராட்டமும் வரலாற்று முன்நோக்கும்
4. கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிசம்: ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்.
5. நிரந்தரப் புரட்சி--இந்தியாவிலும் சீனாவிலும் அதன் படிப்பினைகள்.
6. நிரந்தரப் புரட்சி-காஸ்ட்ரோவாதமும் குட்டி முதலாளித்துவ தேசியவாதமும்
7. தொழிற்சங்கங்களின் 150 ஆண்டுகள்- ஒரு மார்க்சிச மதிப்பீடு
8. கலை, கலாச்சாரம், சோசலிசம்
9. சோசலிச சமத்துவமும் புரட்சிக் கட்சியின் வேலைத்திட்டமும்

**கட்டுநாயக்க -குரண கம்கரு செவன மண்டபம்**

6. செப்டம்பர் 06 மாலை 4மணிக்கு

**மொரட்டுவை சொய்சாபுர சனசமூக மண்டபம்**

7. செப்டம்பர் 06 மாலை 4மணிக்கு
8. செப்டம்பர் 20 மாலை 4மணிக்கு
9. அக்டோபர் 4 மாலை 4மணிக்கு

**கம்பஹா சுஹத மாவத்தை சனசமூக மண்டபம்**

6. செப்டம்பர் 20 மாலை 2மணிக்கு
7. அக்டோபர் 25 மாலை 2மணிக்கு
8. நவம்பர் 22 மாலை 2மணிக்கு
9. டிசம்பர் 20 மாலை 2மணிக்கு

**சோசலிச சமத்துவக் கட்சி மாத இதழ்**




**சந்தாதாரர்ஆகுங்கள்**

சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 3 | ரூ.27 |
| இதழ் 6 | ரூ.54 |
| இதழ் 12 | ரூ.108 |
| இதழ் 24 | ரூ.216 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை, மருதானை,
கொழும்பு 10
தொ.பே. 682220

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . . திகதி . . . . . . .

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு 10
தொ.பே. 682220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.